
அன்புக்கு விலையேது?
எஸ்.லதா சேகர்
அன்புக்கு விலையேது?
05/15/2012

உள்ளே...

| | |
|---|---|
| அன்புக்கு விலையேது? | 5 |
| உள்ளம் நிறைந்த உதிராத பூ... | 78 |
| நேசம் தந்த நெஞ்சமே...! | 132 |

★

# அன்புக்கு விலையேது?



மெல்ல மெல்ல சூரியன் மேலே எழும்ப, யோசனை செய்யும் இதமான மற்றும் அழகான அதிகாலைப் பொழுது ஆரம்பமான தருணம். சில் வண்டுகளின் ரீங்காரமும், கூவும் குயில்களின் இனிய இசையும் கலந்து செவியை வருடும் நேரத்தில் மதுசூதனின் செல்போன் குரல் கொடுக்க, எடுத்துப் பேசினான்.

எதிர் முனையில் சொல்லப்பட்ட சேதியில் முகம் மாறினான். அவனையும் அறியாமல் தேகம் சற்றே தடதடக்க உடல் தளர்ந்தது.

இதுவரை கட்டி வைத்திருந்த கோபம் மெழுகாய் கரைந்தது.

''நான் உடனே வர்றேன், அங்கிள்.'' போனை அணைத்தான். மறுபடி போன் செய்து தன் அலுவலக உதவியாளரை அழைத்து ஆபீஸ் வேலைகளை கேன்சல் செய்யச் சொன்னான்.

''யாரு மது?'' கேட்டவாறு வந்த சுந்தரியை எறிட்டான். விவரம் கூறியதும் அவள் முகத்திலும் சின்ன அதிர்ச்சி.

''உடனே கிளம்பு மது! மாமா நாளைக்கு வந்ததும் நான் விவரம் சொல்லிக்கிறேன். நானும் கூட வரவா?''

''இல்லத்தை! முதல்ல நான் போறேன். நிலைமை எப்படினு தெரிஞ்சதும் போன் பண்றேன்'' பேசிக் கொண்டே துணிமணிகளை பெட்டியில் அடுக்கத் துவங்கினான்.

''பிரியா எழுந்ததும் சொல்லிடுங்க. மாமா கிட்டே போன் மூலம் விஷயத்தை சொல்றேன். பை'' விடைபெற்றான்.

விமானத்தில் ஏறி அமர்ந்ததும் பழைய நினைவுகள் தலைதூக்கியது.

அவனுக்கு ஐந்து வயதாகும்போது பார்வதம் திடீர்னு ஏற்பட்ட காய்ச்சலால் படுத்தவள் சிகிச்சை பலன் அளிக்காமல் கண்ணை திறக்காமல் போய் சேர்ந்து விட்டாள்.

பெண்டாட்டி போன ஆறே மாதத்தில் புது மாப்பிள்ளை என்ற சொல்லுக்கு தப்பாமல் வீட்டில் வேலை செய்த மங்கையை மறுமணம் செய்து விட்டு எஜமானியாய் ஆக்கிக் கொண்டார் விஸ்வநாதன்.

அடுத்து அடுத்து பிறந்த இரண்டு பெண் குழந்தைகள். திருமணம் செய்த உடனே அவன் மனதில் இருந்து விலகத் தொடங்கி விட்டார், விஸ்வநாதன்.

ஆண்களுக்குப் பெண் குழந்தைகள் மீதுதான் பாசம் அதிகமாம். அந்த பெண் குழந்தைகளிடம் அவர் காட்டிய பாசம் அவனை அவரிடமிருந்து முழுதாய் விலக்கியது. தனக்கு மட்டுமே தந்தை காட்டிய பாசம் பகிர்ந்து



கொள்ளப்படுவதை சின்ன மனம் கொண்ட சிறுவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தான் ஆயா ஆயா என்று கூப்பிட்டு உறவாடிய ஒருத்தியை சித்தின்னு கூப்பிட முடியவில்லை. தாயின் படத்திற்கு முன்பு நின்று அழுது கொண்டிருந்த மகனை பாசத்தோடு தூக்க முயன்ற விஸ்வநாதனை கண்டு அதிர்ந்து பின்நகர்ந்தான். அதிர்ந்து போனார்.

''டேய் மது! அப்பாக்கிட்ட வாடா!'' இரு கைகளை நீட்டி அன்பாய் அழைக்க,

''நீங்க மஞ்சுவோட அப்பா. நான் இங்க இனி இருக்க மாட்டேன். எனக்கு உங்களை பிடிக்கலை!'' அழுதவாறு வேகமாய் ஓடிய மகனைக் கண்டு நிரம்பவே அதிர்ந்து ஸ்தம்பித்துப் போனார்.

தன் உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடுவதாய் நினைத்துக் கொண்டு இந்த மழலை மனதைப் பற்றி யோசிக்காமல் விட்டு விட்டாரே! நொந்தார். ஆனால்! நாளடைவில் சரி ஆகும்னு நினைத்தவரின் ஆசை நிராசை ஆனது.

கார் நிற்கும் சத்தம் கேட்டு வெளியில் வந்தார் டாக்டர் வேலாயுதம்.

''வாப்பா மது! நல்லாயிருக்கியா! மாமா, அத்தை, பிரியா எல்லோரும் சௌக்யமா?'' அன்பாய் பேசியவாறு அவனை வரவேற்றார்.

''எல்லோரும் நல்லாயிருக்காங்க, அங்கிள்'' பேசியவாறு உள்ளே நுழைந்தனர் இருவரும்.

பெரிய ஹாலைத் தொடர்ந்து மாடிப்படி ஏறி முதல் அறையை அடைந்தனர். ஒவ்வொரு இடத்திலும் பணத்தின் செழுமை புரிந்தது.

கட்டிலின் மேல் துவண்ட நாராய் படுத்திருந்தார், விஸ்வநாதன். வயதின் தாக்கத்தால் முதுமையின் தோற்றம்.

''டேய் விசு! உன் பிள்ளை வந்திருக்கான் பாரு!'' வேலாயுதம் குரல் கொடுக்க மெதுவாய் விழிகளைத் திறந்தார். அந்த விழிகளில்தான் எத்தனை ஒளி! புத்துணர்ச்சி... மகனை காணாமலே போயிடுவோமான்னு என்ற எண்ணம் காணாமல் போனதால் சந்தோஷம் தெரிந்தது அவர் முகத்தில்.

மகன் கைகளைப் பிடித்து தடவிக் கொடுத்து நலம் விசாரித்தவரின் விழிகளில் கண்ணீர் வழிய, தந்தையை இந்த கோலத்தில் எதிர்பார்க்கவில்லை. அவன் ஒரு பக்கக் கையும், காலும் இழுத்து விட்டது என டாக்டர் அங்கிள் சொல்லியிருந்தாலும் இந்த நிலைமையில் மனம் ரொம்பவே வருத்தப்பட்டது. விழிகளை துடைத்து விட்டவாறு சமாதானமாய் வாய் பேச ஆரம்பித்தாலும், அவர் செய்த தப்பு அவன் மனதில் ஆழமாய் தீராத வடுவாய்!

''உங்களுக்கு ஒண்ணும் ஆகாது. கண்டிப்பாய் குணம் ஆயிடுவீங்க'' ஆறுதலாய்ப் பேசி அன்பாய் ஏறிட்டான்.

''எங்க உன்னைப் பாக்காம செத்து போயிடுவேனோன்னு நான் பயப்பட்டேன். போதும்! இனி! இந்த உயிர் பிரிந்தாலும் சந்தோஷமே'' பேச முயன்றவரை கோபமாய் கடிந்தான்.



''எதுக்கு அந்த மாதிரி எல்லாம் பேசிக்கிட்டு, எல்லாத்தையும் நல்ல விதமாகவே நினைப்போம்...'' டாக்டர் பக்கம் திரும்பி அவரின் உடல்நிலை பற்றி விசாரிக்க ஆரம்பித்தான்.

''இத்தனை வருஷமாய் என்னைப் பார்க்கணும்னு தோணலை. உன் சித்தி இறந்தபோது யாரோ ஒரு மனுஷனைப் போல் வந்து கலந்துகிட்டே. மருக கல்யாணத்துக்குக் கூட வரலை...'' வேதனையில் முகம் வலிக்க பேசியவரை குறுக்கிட்டார் வேலாயுதம்.

''போதும்டா! மது! இங்கே தான் இருக்கப் போகிறான். பொறுமையா ஆற அமர பேசலாம். நீ ஓய்வு எடு'' சொல்லிவிட்டு அவனை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தனர்.

''அப்புறம் உன் பிஸினஸ் எல்லாம் எப்படிப் போகுது?''

''ம்... நல்லா போகுது அங்கிள். நான் சாயங்காலம் கிளம்பறேன்'' மெல்ல முணுமுணுத்தவனை கோபமாய் ஏறிட்டார்.

''என்ன விளையாடறியா? உன் அப்பனோட நிலைமை இப்படி இருக்கும்போது கூட இல்லாம, ஏதோ வயசில வர்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாய் இரண்டாம் கல்யாணம் செய்துகிட்டான். அதுக்கு நீ கொடுத்த தண்டனை போதும். நீ விலக, விலக அவன் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகிட்டான். அவன் உடம்பு குணமாகிற வரைக்கும் கொஞ்ச நாள் இங்கே இருக்கிறதுதான் நல்லது.'' நண்பனின் நிலையை ஒரு டாக்டராகவும், தோழனாகவும் எடுத்துக் கூற, மௌனம் காத்தான். பிறகு மெல்ல பேசினான்.

"எத்தனையோ பேர் மனைவி இழந்த பிறகு தங்களோட பிள்ளைகளுக்காக மட்டும் வாழறது இல்லையா! அப்ப, எங்கம்மா மீது அவர் வச்ச பாசம் அவ்வளவுதானா? என்னால ஏத்துக்க முடியலை அங்கிள்" தழதழத்தான்.

"நீ ஏன் அவரை தப்பான கோணத்தில பார்க்கிறே. அவருக்கும் உனக்கும் ஆறுதலா, அனுசரணையா இருக்க, ஒரு துணை தேவைன்னு ஏத்துக்கிட்டு இருக்கக் கூடாதா?"

"அம்மாவை இழந்து நானும் தான் தனியா நின்னேன். எனக்கு துணையா அவரும், அவருக்குத் துணையா நானும் இருந்திருக்கலாம் இல்ல.." வேகமாய் பேசியவனை ஏறிட்டார்.

"நான் என்ன சொல்ல வாறேனா...?"

"சரி அங்கிள். அவர் செய்த கல்யாணத்தை என்னால ஏத்துக்க முடியலை. ஆனா! அப்பா என்ற ரத்த பாசம் எனக்கு உண்டு. தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்னு சொல்வாங்க..."

"அது எனக்கு தெரியும் மது. அவனோட உடல்நிலை பற்றி அடிக்கடி அக்கறையா போன் பண்ணி விவரங்களை என்கிட்டே கேட்டு தெரிஞ்சுக்கிறே..."

"ஆமா. அவரோட அருமை பொண்ணுங்க எங்கே? உடல்நிலை சரியில்லாத அப்பாவைக் கூட இருந்து கவனிச்சுக்குவாங்கனு பார்த்தேன். ஒருத்தரையும் காணோம்..." சினம் தெறிக்கக் கேட்டான்.

"உன் சித்தி இறந்த பிறகு அவங்களை பத்திக் கேட்க ஆளில்லாமல் போயிட்டாங்க. உங்கப்பாவுக்கு பிஸினஸ்



பார்க்கவே நேரம் சரியாய் இருக்க... அவங்க இஷ்டத்துக்கு வளர ஆரம்பிச்சுட்டாங்க. பெரியவ மஞ்சு கல்லூரியில கூட படிக்கிற கிஷோர்னு ஒரு பையனை விரும்பறேன், அவனைத்தான் கல்யாணம் செய்துக்குவேன்னு ஒத்தைக் கால்ல நின்னா. இனி செய்யறதுக்கு ஒண்ணுமில்லைனு கல்யாணம் செய்து வச்சார். உன்னை நேர்ல சந்திக்க பத்திரிகை கொடுத்தும் கோபத்தால நீ வரலை. ரொம்ப வேதனைப்பட்டார், உங்கப்பா. சின்னவ டாக்டராகி சமூக சேவை செய்யணும், ஏழை எளியவர்களுக்கு இலவசமா மருத்துவ உதவி எல்லாம் செய்யணும்னு டாக்டருக்கு படிக்கிறா. பாண்டிச்சேரியில ஹாஸ்டல்ல தங்கி, எப்பவாவது லீவு கிடைக்கும் போது வந்து பார்த்துட்டுப் போவா. ஆனா! அடிக்கடி அப்பாவோட உடல்நிலை பற்றி விசாரிக்கத் தவறுவதில்லை.

அப்புறம்! ஒரு வாரமா ஆபீஸ் பக்கம் போகலை! உடம்பு சரியில்லாம... நீதான் கவனிச்சுக்கணும்.

உங்கப்பன் நடமாடற வரைக்கும் மானேஜர் வந்து விபரமா சொல்வார். போன் பண்ணிட்டேன். இப்ப வந்துடுவார். அப்புறம், நான் கிளம்பட்டுமா.. ஆஸ்பிட்டலில் வேலை இருக்கு."

"ரொம்ப தேங்க்ஸ் அங்கிள். உங்களை நண்பராக அடைய அப்பா கொடுத்து வச்சிருக்கணும்." அவரின் கை பிடித்து நெகிழ்ந்தவனை புன்னகைத்து விடை பெற்றுக் கொண்டார்.




தளர்வாய் சோபாவில் சாய்ந்தான். உடலும், மனமும் அசதியாய் இருப்பது போன்ற உணர்வில் கண் மூடினான்.

''தம்பி காபி'' மெதுவாய் சத்தம் கேட்க விழிகளை திறந்தான்.

காபி டம்ளருடன் நின்றிருந்த அந்த அம்மாளை பார்த்தவுடன் தெரிந்தது, வீட்டு வேலைக்காரி என்று. அந்த எண்ணமே அவனுக்கு கோபத்தை உண்டு பண்ண, ''நான் ஒண்ணும் கேட்கலையே! உங்க இஷ்டத்துக்கு நாட்டாமை பண்ணாதீங்க... நாங்க கேட்கும் போது கொடுத்தால போதும்'' முகத்தில் அடித்தாற் போல் சொன்ன பதிலில் தாயம்மா தவித்துப் போனாள். முகம் சின்னதாக ''சரிங்க தம்பி'' என்றவாறு மறைந்தாள். ஒரு கணம் பரிதாபப்பட்டது அவன் மனம். 'சே! நான் ஏன் அப்படிப் பேசினேன்?' தன்னையே கேட்டுக் கொண்டவன், பிறகு மானேஜர் வந்து அவரை அறிமுகப்படுத்திக் கொண்டு அலுவலக விஷயங்களை விளக்கிக் கூற அதிலேயே முழு கவனத்தையும் திருப்பினான்.

''வாண்ணா! டாக்டர் அங்கிள் இப்ப போன் பண்ணி விஷயத்தை சொன்னார். நீ வந்ததை பத்தி. என் கல்யாணத்துக்கு கூட வாலை.'' ஆதங்கமாய் பேசிய தங்கையைப் புன்னகையோடு ஏறிட்டான், மது.

'அப்பா செய்த தவறுக்கு இவள் என்ன செய்வாள். அவசரப் பட்டுட்டுமோ' என்ற எண்ணம் ஓட அவள் தோளை ஆறுதலாய் அணைத்தான்.

''உன் கணவர் எப்படி இருக்கார்?'' விசாரித்தான்.



''ம்... நல்லா இருக்கார். நீ ஓய்வு எடுத்துக்கோ அண்ணா. நான் அப்பாவைப் பார்த்துட்டு வரேன்'' தந்தையின் அறை நோக்கிச் சென்றாள் மஞ்சு.

தன் அறையில் நுழைந்தவனை அம்மாவின் ஞாபகம் அழைக்காமலே வர திரும்பினான். அம்மாவின் படத்தில் போடப்பட்டிருந்த மல்லிகையும், ரோஜாப் பூவும் வாசனையை எழுப்ப, விழி மூடி தாயின் நினைவில் அமைதியாய் நின்றான்.




போன் அலற கையில் எடுத்து செவியில் வைத்தான்.

''ஹலோ டாடி! நான் பிரண்ட்ஸ் கூட மகாபலிபுரம் போறேன், எனக்கு ஒரு ஐயாயிரம் பணம் வேணும்.'' கொஞ்சலாய் அழகிய குரல் பேச,

''வாட்! ஸாரி! நீங்க தப்பான நம்பர்க்கு போன் செய்திட்டீங்க..'' என்றவாறு தொலைபேசி வைக்க முயல, மீண்டும் அவள் பேசினாள்.

''ஒரு நிமிஷம்... இது, மது இண்டஸ்டிரிஸ்தானே!''

''ஆமா! நான் மதுசூதனன் தான் பேசறேன். நீங்க யாரு?''

''வாவ்! நீங்க சென்னைக்கு வர மாட்டீங்க அப்படி, இப்படினு அப்பா சொன்னாரே!''

''அதான்! இப்ப வந்திட்டேனே ஸாரி! நான் அப்புறம் பேசறேன். எனக்கு நிறைய வேலை இருக்கு'' அவன்

மீண்டும் பேசுமுன் ரிசீவரை சாத்தினான். யோசனையாய் நெற்றியை ஒரு கையால் தேய்த்தவாறு பைல்களில் பார்வையை ஓட்டினான்.

அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பியவனுக்கு அலுப்பாய் இருந்தது. அலுவலக நிர்வாகத்தை ஒரே சீராய் பார்த்துக் கொண்டிருந்தார், அப்பாவின் நண்பர் மகாலிங்கம். "இங்கே இருந்து பிஸினசை கவனிச்சுக்கோங்க தம்பி. உங்கப்பனோட உடல் நிலையில மனசு, ரொம்ப பாதிப்பு அடைஞ்சு இருக்கு" என்று அக்கறையாய் பேசியவரிடம் இயல்பாய் புன்னகைத்தவாறு மௌனத்தையே பதிலாய் தந்தான். "ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்! இத்தனை நாள் அலுவலகத்தை நிர்வகிச்சதுக்கு."

"பரவாயில்லை மது. வேலாயுதம் அவனோட உடல் நிலை பார்த்துக்கிட்டான் நான் ஆபீசை பார்த்துக்கிட்டேன். அவ்வளவுதான். நண்பனுக்கு இதுகூட செய்யலைனா, அப்புறம் நட்புக்கு என்ன அர்த்தம்?"

காலடி சத்தத்தால் கண் விழித்து நிமிர்ந்தான். மேலே டாப்சும், கீழே நீல வண்ண மிடியும் அணிந்து இளமை பூரிக்க, மின்னல் வெட்டும் அழகுடன் அவள் நின்றிருந் தாள், எதிரே.

"நான் மகாலிங்கம் பொண்ணு. போன்ல பேசினது நான்தான்." அவனை அறிமுகப்படுத்திக் கொள்ள, "உட்காருங்களேன்" என்றான்.

"அப்பான்னு நினைச்சுப் பேசினேன். ஆபீஸ்ல," என்றவாறு விழிகளால் அவனை விழுங்கினாள்.



இத்தனை அழகானவனாக அவனை எதிர்பார்க்க வில்லை. ஆண்மை ததும்பும் கம்பீரமான உடலும், வசீகரமான முகமும், நேர் நாசி, மனதை ஊடுருவும் கூர்மையான விழிகள், சிகரெட் பிடிக்க மாட்டானோ என நினைக்க வைக்கும் சிவந்த உதடுகளும் அவளை இயல்பாய் விழத்தியது.

"அப்பா கூட அடிக்கடி வந்திருக்கேன். மாமாவைப் பார்க்க.." மெதுவாய் முக சிவப்போடு பேசியவளை ஏறிட்டான்.

"எப்ப, வேணும்னாலும் வரலாம்" சிரித்தவாறு பேசியவனிடம் முழுதாய் விழுந்தாள், தாரிணி.




தாயம்மாவுக்கு தவிப்பாய் இருந்தது. பெரிய ஐயாவின் மகன் திட்டியது மனசுக்கு வருத்தமாய் இருந்தது. ஆறு மாதத்துக்கு ஒருமுறை வேலைக்காரி மாறும், மாற்றும் உலகத்தில் அவள் பதினைந்து வருடமாய் வேலை செய் கிறாள். அதுவே அதிசயமான விஷய மாச்சே. அதுவும் மங்கை அவளை வேலைக்காரியாக நடத்த மாட்டாள். அவளும் வேலைக்காரியாக இருந்து எஜமானியானவள் ஆச்சே. அதுவும் தாயம்மாவிடம் தனி அக்கறை காட்டுவாள். அவள் தந்தைக்கு உடல்நிலை சரியில்லை, கிராமத்துக்குப் போய் பார்த்துட்டு வாறேன் என தயக்கத்தோடு லீவு கேட்டாலும் முழு மனதோடு பணம்

கொடுத்து அனுப்பி வைத்தாள். மகராசி இரண்டு பெண் பிள்ளைகள் பெத்து, கொஞ்ச காலமே வாழ்ந்து முடிந்து விட்டதை நினைக்கையில் விழியில நீர் கசிந்தது.

''எதுக்கு தாயம்மா! அழறே சின்ன ஐயா தட்டினதுக்கா,'' புதிதாய் வேலைக்குச் சேர்ந்திருந்த மல்லிகா கேட்க, ''சே சே அதெல்லாம் இல்லை'' விழிகளை துடைத்தவாறு சமையல் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

காபி டிரேயுடன் நின்ற மல்லிகாவை ஏறிட்டவாறு காபி கப்பை கையில் எடுத்துக் கொண்டான் மது. தந்தை செய்த திருமணத்திலிருந்து வேலைக்காரங்க என்றாலே, கோபமும், எரிச்சலும் மூளும் அவனுள். சமயம் பார்த்து சபலத்தை தூண்டிப் பணம் பறிப்பவர்கள், திருமணம் என்ற பெயரில் சொத்து, சுகத்தை அபகரிக்கும் எண்ணம் படைத்தவர்கள் என்ற எண்ணம் அவன் அடி மனதில் வேறாய் ஓடிக் கொண்டிருந்தது. காபியை குடித்துவிட்டு தந்தையின் அறையில் நுழைந்தான்.

அசந்து தூங்கும் தந்தையின் தூக்கத்தைக் கலைக்க விரும்பாமல் வெளியே வந்தான். இத்தனை பெரிய வீட்டில் ஒரு அறையில் தந்தை மட்டும், மஞ்சு இங்கே இருந்து தந்தையை கவனித்துக் கொள்ளக் கூடாது என்ற எண்ணம் கூட கோபமாய் தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

அன்பரசிக்கு பட்டணத்து வாழ்க்கையை பார்க்கையில் படபடப்பாய் வந்தது. காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பறக்கும் ஜனத் திரள்களும், இழைந்து கொண்டு செல்லும் வாகனங்களும், வானுயர நிற்கும் கட்டிடங்களும் பார்க்கப் பார்க்க விழிகளை விரித்தாள், வியப்பில். இதுவரை அவள்



சென்னைக்கு வந்ததில்லை. கிராமத்தை விட்டு எங்கும் சென்றதில்லை. மூன்று வயதிலே தந்தையை இழந்து தாயின் தந்தையிடம் வளர்ந்தாள். இதே பட்டணத்தில் தாயம்மா வேலை தேடி அலையும்போது அவள் அழகுக்காக வேலை தர முயன்றனரே தவிர அவள் திறமைக்காக அல்ல.

தன் கணவன் பிறந்து வளர்ந்த ஊரிலே தன் காலம் செல்லணும் என்ற எண்ணமே அவளை அங்கேயே இருக்கச் செய்தது. படிப்பறிவு இல்லாத அவளுக்கு வீட்டு வேலை தவிர வேற எதுவும் தெரியாது. ரிக்ஷா ஓட்டி கணவன் கொண்டு வரும் சம்பாத்தியத்தில் அழகாய் அருமையாய் குடும்பம் நடத்தினாள். இனிமையான வாழ்க்கைக்கு அடையாளமாய் அன்பரசி பிறக்க கொண்டாடினர். அமைதியாய் இல்லறம் போகையில் ஆடிக் காற்றாய் சுழற்றி அடித்தது. அவள் கணவன் ஓட்டிச் சென்ற ரிக்ஷா மீது பஸ் மோதி உயிரற்ற சடலமாய் வீட்டுக்கு வர அதிர்ந்து போனாள். அழுதழுது புரண்டாலும் அவள் அன்பு கணவன் திரும்பப் போவதில்லையே! கையில் குழந்தையோடு தவித்துப் போனாள். அவள் நிலைமை கண்டு அக்கம் பக்கத்தினர் உதவினாலும் எத்தனை நாளைக்கு? முடிவு செய்து வேலை தேடினாள்.

மூன்றாம் வகுப்பை முடித்தவளுக்கு என்ன வேலை கிடைக்கும். கூட்டி பெருக்குவதை விட வேலை தேடிய நாட்களில் அவள் அழகை விலை பேச ஆத்திரமும், பயமும் தாயம்மாவுக்கு. கிராமத்துக்கே திரும்பிடலாமா என யோசித்த வேளையில்தான் விஸ்வநாதன் வீட்டில் சமையல் மற்றும் தோட்ட வேலை செய்ய, சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டாள். இவள் போன சமயம் விஸ்வநாதன்

மங்கையை மணமுடித்து இருந்தார். மங்கை இவளைத் தன் தோழி போல கருதி பேசுவாள். எந்த நாளிலும் வேலைக் காரியாக எண்ணி நடத்த மாட்டாள். இவளும் மங்கையின் பெண் குழந்தைகளின் மீது நிஜமான பாசம் காட்டி வேலைகளை கவனித்துக் கொண்டாள். அடிக்கடி அழுது, சிணுங்கும் அன்புவை கூட வைத்துக் கொண்டு வேலை செய்ய முடியாததால், கிராமத்தில் இருக்கும் தந்தையிடம் ஒப்படைத்தாள். அடிக்கடி சென்று அன்பு மகளை ஆசையோடு பார்த்து வந்தாள். காலங்கள் ஓட அன்பு ஆளானாள்.

உள்ளூர் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பை முடித்தவள், பக்கத்து டவுனில் இருக்கும் கல்லூரியில் படிக்க சூழ்நிலையோ, வசதியோ சரியில்லாததால் படிப்பை தொடர முடியவில்லை. வயதான தாத்தாவைக் கவனித்துக் கொண்டு, மற்ற நேரத்தில் நாத்து நட, களை எடுக்க மட்டுமில்லாமல் பண்ணையார் பரமசிவம் வீட்டில் கூடமாட வீட்டு வேலைகளைச் செய்து பண்ணையாரின் மனைவி வள்ளிக்குக் கூடப் பிறந்த மகளைப் போல பாசம் காட்டும் அளவுக்கு பாத்திரம் ஆனாள்.

''அம்மா! இங்கேயே இரும்மா. தாத்தாவுக்கு அடிக்கடி உடம்பு முடியலை. எனக்கு பயமா இருக்கு'' சொன்ன மகளின் தலையை வருடினாள், தாயம்மா.

''அப்பாவுக்கு ஒண்ணும் ஆகாது. வயசானதால் சின்ன, சின்ன பிரச்சனைகள் வரும். நல்லா கவனிச்சுக்கிட்டா வந்த வேகத்தில் காய்ச்சல் மறைஞ்சு போயிடும்'' பேசிக் கொண்டே தந்தைக்கு கஞ்சியை சூடாய் டம்ளரில் ஊற்றிக் கொடுத்தாள். ''இந்த மாத்திரையை சாப்பிட்டுட்டு படுங்கப்பா'' பரிவாய் நீட்டினாள்.



படுத்த தந்தையின் மேல் போர்வையால் போர்த்தி விட்டாள். எப்போதாவது சில நேரங்களில் இந்த மாதிரி லீவு வாங்கிக் கொண்டு தந்தையையும், மகளையும் பார்த்துவிட்டு செல்வாள். வரும் போதெல்லாம் மகளுக்கு தலைவாரி பூச்சூடி அழகு பார்த்தாள்.

மாசு மருவற்ற முகம். சிரிக்கும் போது விழும் மோவாயில் சின்ன குழி அழகை அதிகமாக்க, இடுப்பு வரை நீண்ட கூந்தல் கரும்பாம்பாய் நெளிந்தது. காதிலும், கழுத்திலும், மெல்லிய நகைகள், மஞ்சள் பூசி குளித்த முகம் பொன்னிறமாய் மெருகேறி மினுமினுக்க, ரோஜா இதழை ஒட்ட வைத்தது போன்ற இதழ்கள். மெல்லிய கொடி போன்ற தேகம்.

''என்னம்மா! அப்படி பார்க்கிறீங்க'' மெல்ல சிணுங்கிய மகளை ஆசையாய் அணைத்தாள்.

''உனக்குனு ஒருத்தன் எங்க பிறந்து இருக்கானோ, அவன் கிட்ட உன்னை ஒப்படைச்சிட்டா, நிம்மதியா கண்ணை மூடிடுவேன்'' சொன்ன தாயை பொய் கோபத்துடன் முறைத்தாள், அன்பரசி.




''அப்பா! இந்த சுக்கு காபியை குடிக்க. நான் ஊருக்குக் கிளம்பறேன்'' பேசியவாறு தந்தையை எழுப்பினாள், தாயம்மா.

ஒரு அசைவையும், காணாமல் மனம் பதற, பயமாய் தந்தையை உலுக்க, எந்த

பலனும் இல்லை. அமைதியாய் உயிர் சென்றிருந்தது. அந்தக் கூட்டை விட்டு.

அழுதழுது விழிகள் சிவந்து போயிருந்தது. தாய்க்கும், மகளுக்கும்.

கிராமத்து பெரியவர்கள் மூலம் இறுதி காரியம் நடந்து முடிந்தது. மகளை தனியே விட்டு செல்ல மனமில்லை. தன் கூடவே மகளும் வேலை செய்யட்டும் என்ற முடிவோடு தன் கூடவே அழைத்துக் கொண்டாள்.

''என் பொண்ணு அன்பரசி இங்கேயே இவளுக்கும் வேலை கொடுத்தா நல்லாயிருக்கும்'' கெஞ்சலோடு பேசியவளை ஏறிட்டாள் மஞ்சு.

'ம்... சோத்துக்குக் கஷ்டப்பட்டாலும் அழகுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. ஆமா! காலேஜ்ல படிக்கிற மாதிரி இருக்கா. இவ எப்படி வீட்டு வேலைக்கு ஒத்து வருவா' யோசனையாய்ப் பார்வையை உயர்த்த,

''இல்லம்மா, சமையல் வேலை, வீட்டைக் கவனிக்கிறது, எந்த வேலையாய் இருந்தாலும் செய்வா. என் கூடவே இருந்து வேலை செய்யட்டும்னு..''

''சரி, சரி, ஏதோ எங்கம்மா காலத்தில இருந்து வேலை செய்றேன்னுதான் உனக்கு இந்தச் சலுகை...'' எஜமானியாய் சொல்லி விட்டு சென்றாள், மஞ்சு.

''ஐயா! காபி..'' நீட்டியவாறு நின்ற பெண்ணை ஏறிட்டார், விஸ்வநாதன்.



அடக்கம், அமைதி, இயல்பான புன்னகை, பாவாடை தாவணியில் நின்றவளை பரிவாய் புன்னகைத்தவாறு கேட்டார். ''யாரும்மா நீ?''

''தாயம்மாவோட பொண்ணு. கிராமத்துல இருந்தேன். தாத்தா கூட, அவர் இறந்து போயிட்டார். சமீபத்தில, அதனால அம்மா கூட வந்துட்டேன்'' வருத்தம் தொனிக்க பேசியவளை மனம் நெகிழ ஆறுதலாய் பேசினார்.

அவர் எழுந்து தலையணையில் சாய்ந்து அமர உதவி செய்துவிட்டு, ''நீங்க காபி குடிங்க நான் சுடு தண்ணீர் எடுத்திட்டு வரேன்'' விலகிய சில நிமிடங்களில் ஒரு பெரிய கிண்ணத்தில் மிதமான சுடு தண்ணீரும், வெண்ணிற துணி கொண்டு அவர் கை, கால்களை அழுந்தத் துடைத்தாள்.

இருண்டு கிடந்த வீட்டில் குத்து விளக்கு ஏற்றியது போன்ற ஒரு பரவச உணர்வு அவர் மனதை ஆட்சி செய்ய விழிகளை மூடிக் கொண்டார்.




''ஆபீஸ் வேலை எல்லாம் எப்படி போவுது, மது. பிஸினஸ் பத்தி சொல்லவே வேணாம். உங்க மாமா கிட்டே எல்லாம் கத்துக்கிட்டு இருப்பே. அதுக்காக வேற படிப்பு எல்லாம் படிச்சிருக்கே'' டாக்டர் பேசியதை மௌனப் புன்னகையாய் ஏற்றவாறு.

''அப்பாவோட உடல்நிலையில் மாற்றம் எதுவும் தெரியலையே அங்கிள்.''

''ம். கொஞ்ச, கொஞ்சமாகத்தான் முன்னேற்றம் வரும். மருத்துவத்தையும், தாண்டி தானும் பிழைக்கணும், உயிர் வாழணும் என்ற ஆசைப்படணும் இல்ல.''

''என் என்னவாம் அவருக்கு?'' சலிப்பாய் கேட்க,

''உனக்கு ஒரு கல்யாணம் பண்ணணும்னு ஆசைப் படறார்..''

''வாட்..?''

''என்ன விளையாடறாரா? இதுக்காகத்தான் என்னை வரச் சொன்னாரா?'' கோபமாய்ப் படபடத்தான்.

''யோசிச்சுப் பாரு மது. ஒரு தந்தைக்கு இருக்க வேண்டிய நியாயமான ஆசைதானே இது. மருக எப்பவோ, வரா போறா! இத்தனை பெரிய பங்களாவில் அவர் மட்டும் தனியே! உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி இந்த வீட்ல இருக்க வைக்கணும். இந்த வீட்ல பேர பசங்க ஓடி, ஆடி விளையாடணும்'' மேலே பேச முயன்றவரை குறுக்கிட் டான்.

''எனக்கு இதுல கொஞ்சம் கூட இஷ்டமில்லை அங்கிள். அவர் குணமாகி ஆபீஸ் போற வரைக்கும் தான் இங்கே இருப்பேன். அவர்க்கு ஆபீசை கவனிச்சிக்கிற மாதிரி ஆன அடுத்த நிமிஷம் நான் லண்டனுக்கு கிளம்பிடுவேன்.'' முயலுக்கு மூணுகால் என்ற உடும்புப் பிடியிலே இருக்கும் அவனிடம் மேலே பேச முடியாமல் மௌனம் காத்தார். டாக்டர் வேலாயுதம்.



அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வெகுநேரம் படுக்கையிலே கிடந்து தாமதமாய் எழுந்தவன் விழிகள் தாயின் படம் பார்க்க, மனம் லேசானது போன்ற உணர்வில் எழுந்தான்.

''உள்ளே வரலாமா?'' மெல்லிய குரல் காற்றோடு மிதந்து வர புருவத்தை உயர்த்தியவாறு, ''யெஸ்'' என்றான்.

உள்ளே காபி தட்டோடு வந்தவளைப் பார்த்ததும் விழிகள் விரிந்தது.

பனியில பூத்த ரோஜாவாய் முகமெங்கும் வியர்வை பூக்கள் பூத்திருக்க தப்பு செய்த சிறுமி போல தலைகுனிந்து பணியாய் நின்றிருந்தவளை பார்த்தவாறு காபி கப்பை கையில எடுத்துக் கொண்டான்.

''யாரு நீ புதுசா? பேரென்ன?'' கேட்டவாறு காபியை குடிக்க ஆரம்பித்தான்.

''நான் தாயம்மா பொண்ணு. இங்க வேலைக்கு வந்து நாலு நாளாகுது. என் பேர் அன்பரசி'' ரகசியம் பேசுவது போல் ஒப்பித்தவளை ஏளனமாய் ஏறிட்டான். ஏனோ வேலைக்காரங்க என்றாலே எரிச்சலும் கோபமும் அவனுக்கு வரும்.

வீட்டு வேலைக்காரியாய் வந்து தன் அப்பாவை வளைத் துப் போட்டு தன் வாழ்க்கையையே மாற்றி போட்டதி லிருந்து வேலைக்காரப் பெண்கள் என்றாலே மோசமான வர்கள், பணத்துக்காக என்ன வேணும்னாலும் செய்யும் சுயநலவாதிகள் என்ற எண்ணம் அவன் ஆழ் மனதில் ஊறிப் போயிருந்தது.

கோபத்தில் முகம் இறுக திரும்பியபோது அவள் அங்கே இல்லை.

அதன் பிறகு காலை வேலைகளை முடித்துக் கொண்டு தந்தையின் உடல்நிலை பற்றி விசாரித்து அவர் உணவருந்தியதைக் கேட்டுவிட்டு தானும் சாப்பிட டைனிங் டேபிளில் முனைப்பு அமர்ந்து உணவருந்திய போது மஞ்சுவும் அவள் கணவன் கிஷோரும் வந்தனர்.

''ஹலோ! வாங்க எப்படியிருக்கீங்க, சாப்பிடுங்க'' வரவேற்று பேசியவாறு உணவை முடித்துக் கொண்டு எழுந்தான், மதுசூதனன்.

''ம். சாப்பிட்டுதான் வரோம். நீங்கதான் கல்யாணத்துக்கு வரலியே! அப்புறம் எப்படி நான் தான் மஞ்சு கணவன்னு தெரிஞ்சுக்கிட்டீங்க...'' ஆச்சரியமாய் கேட்டான் கிஷோர்.

''கல்யாண சிடி பார்த்தேன். ஐயாம் ஸாரி! அப்பா மேல உள்ள கோபத்தால கல்யாணத்துல கலந்துக்க முடியலை'' வருத்தமாய் பேச,

''என்னதான் அப்பா மேல கோபம் இருந்தாலும் நல்லது கெட்டது காரியங்களில் கலந்துக்கிறதுதான் மனுஷ இயல்பு'' கிஷோர் பேச முகம் மாறியது மதுவுக்கு.

ஆனாலும் சட்டென இயல்பானான்.

''பழசை எல்லாம் விட்டுத் தள்ளுங்க. இப்பவாவது அண்ணன் வந்தாரே அதுவே போதும்.'' இறுக்கமான சூழ்நிலையை இயல்பாக்க முயன்றாள்.

''மஞ்சு உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்னு சொல்லுங்க. அதையெல்லாம் தாயம்மாவை செய்யச்



சொல்றேன்'' கலகலப்பாய் பேசியவளை, ''அப்ப கூட நீ செய்து போட மாட்டே...'' கணவன் கேலியில் முகம் சிவந்தாள்.

''ஆமா! எதையாவது புதுசா செஞ்சா இது சரியில்லை! அது சரியில்லேனு குறை சொல்லீங்க. அதனால தான் எதுவும் செய்ய ரிஸ்க் எடுக்கிறது இல்லை!'' பேசியவளைத் தொடர்ந்து,

''சரி, நான் மாமாவைப் பார்த்துட்டு வாரேன்...'' என நகர்ந்தான் கிஷோர்.




''ஒரு விஷயம் சொல்லணும் அண்ணா!'' தயக்கமாய் பேச ஆரம்பித்த மஞ்சுவை புரியாமல் பார்த்தான்.

''என்ன விஷயம் எதுவானாலும் பரவாயில்லை. சொல்லு.''

''அப்பா எங்களுக்கு கொடுத்த கம்பெனி நஷ்டத்துல போகுது. இவரும் ஒழுங்கா ஆபீஸுக்குப் போறதில்லை. வேலை பார்க்கிறவங்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியலை! அதான்! சிவநேசன் அங்கிள் கிட்ட வித்துட்டு ஒரு அமௌண்ட் வாங்கிடலாம்னு!'' தயக்கமாய் பேசி முடித்தாள்.

''ஆமா! கம்பெனியை கூட பார்த்துக்க முடியாம என்ன பண்றார் உன் புருஷன்'' கோபமாய் கேட்க, தலைகுனிந்தாள்.

''நான் பார்த்துக்கிறேன். நஷ்டத்துல ஓடற கம்பெனி பிஸினசை லாபத்துல,கொண்டு வர்றதைப் பத்தி நான் பார்த்துக்கிறேன், ஆமா! பணம் வாங்கி என்ன பண்ணப் போறீங்க, வேற ஏதாவது பிஸினஸ் ஆரம்பிக்கப் போறாரா? உன் புருஷன்..'' கேட்டான்.

''இல்ல. அவரோட நண்பரும், இவரும் சேர்ந்து ஒரு சினிமா படம் எடுக்கலாம்னு..''

''வாயை மூடு! ஒழுங்கா, பிஸினசை பார்த்துக்க முடியாதவன் சினிமா படம் எடுத்து சம்பாதிக்க போறானா! அதுக்கெல்லாம் திறமை வேணும். அது மட்டும் இல்லை - அது சூதாட்டம். புதை குழி மாதிரி மீண்டு வர முடிய லைனா உள்ளே இழுத்துக்கும்'' கோபமாய் பேசியவனை அதிர்ச்சியாய்ப் பார்த்தாள்.

முகம் மாறிப் போனது. எள்ளும் கொள்ளும் வெடிக்க அண்ணனிடம் தன் கோபத்தை காட்ட முடியாமல் இரைந்து கத்தினாள்.

''தாயம்மா! எய் தாயம்மா! வந்து அரை மணி நேரம் ஆகுது. காபி குடுக்கணும்னு தோணாதா?'' சமையல் அறைப் பக்கம் திரும்பியவாறு கத்த.

அடுத்த சில நொடிகளில் காபி தட்டோடு வெளி வந்தாள் அன்பரசி. முகத்தில் பயமும் பதட்டமும் திட்டு வாங்களோ என.

மாமாவின் உடல் நிலை பற்றி விசாரித்துவிட்டு வந்த கிஷோர் பார்வை அவள் கால் முதல் தலை வரை மேய்ந்தது. ஜொள்ளு விட்டவாறு.



''யாரு மஞ்சு! இந்தப் பொண்ணு?'' கேட்டவாறு காபி டம்ளரை எடுத்துக் கொள்ள..

''ம்... தாயம்மாவோட பொண்ணு. கிராமத்துல தனியா விட்டுட்டு இருக்கிறதை கூட மாட வேலை செய்ய வச்சுக்கலாம்னு கேட்டா. சரின்னு சொல்லிட்டேன்..'' ஏளனப் பார்வையோடு சொல்லி முடித்தாள், கணவனின் பார்வையை உணராமல்.

''காபி குடித்துட்டே இல்லே! போலாம். இன்னும் என் நின்னுட்டே இருக்கே'' கடின குரலில் மது கூற. முகம் மாற வேகமாய் உள்ளே மறைந்தாள் அன்பரசி.

''இதோ பாரு மஞ்சு பொறுப்போடு இருந்தா தான் பணம் சம்பாதிக்க முடியும். கம்பெனியை நானே பார்த்துக்கறேன், வேற ஏதாவது ஐடியா இருந்தா சொல்லு பணம் தர்றேன்.''

இனி பேச ஒன்றுமில்லை என்பது போல அறையை நோக்கி நடக்க அதிர்ந்து போய் நின்றனர் கிஷோரும் மஞ்சுவும்.

தந்தை சேர்த்து வைத்திருக்கும் ஏகப்பட்ட சொத்துக்கள் தனக்கும், தங்கைக்கும் மட்டுமே சொந்தம். கோவிச்சுக் கிட்டு போன அண்ணன் திரும்ப மாட்டான் என்ற எண்ணம் அவளுள் இருந்தது. அம்மா இறந்தபோது ஏதோ கடமைக்காக வந்து போனவன் தன் திருமணத்துக்குக் கூட வரவில்லை. அதற்காக அவள் வருத்தப்படவும் இல்லை. ஆனால்! திடீர்னு டாக்டர் அங்கிள் போன் செய்து அண்ணன் வரப் போகும் விஷயத்தைச் சொன்னபோது அவளால் நம்ப முடியவில்லை. ஆனால்! இப்போது பேசியதை அவளால் ஜீரணிக்க முடியாமல் தந்தையிடம் கூறினாள்.




''இதோ பார் மஞ்சு. உன் புருஷன் மட்டும் கம்பெனியை ஒழுங்கா கவனிச்சிருந்தா, அதே மாதிரி இன்னொரு கம்பெனிக்கு முதலாளியா ஆயிருக்கலாம். வருஷத்துக்கு நாற்பது ஐம்பது லட்சம் லாபம் வரும். ஆனா! பொறுப்பில்லாம ஊர் சுத்திக்கிட்டு, குடிச்சிட்டு, கண்டபடி செலவு செய்யறதை என் கண்ணால பார்த்தேன். அவசரப்பட்டு உன் காதலுக்கு சம்மதம் தந்தது தப்போன்னு நினைக்கிறேன்.'' மூச்சு லேசாய் வாங்க அயர்ச்சியாய் விழிகளை மூடிக் கொண்ட தந்தையை கோபத்துடன் வெறித்தாள்.

பூச்செடிகளுக்கு நீர் விட்டுக் கொண்டிருந்தாள் அன்பரசி. மனம் மட்டும் மதுசூதனை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தது. எந்நேரமும் முகத்தில் கோபம் கொண்டு காட்சி அளிக்கிறானே. சிரிக்கவே மாட்டானா? அவன் தந்தை திருமணத்தால் தன் மாமா கூட சிறு வயதிலே லண்டன் சென்று விட்டது. அதற்குப் பிறகு தந்தையின் உடல் நலம் கருதி திரும்பி வந்து இருக்கிறது எல்லாம் தாய் கூறியது நினைவில் ஓடியது.

பொதுவாய் அந்த வீட்டில் ஏழெட்டு வேலைக்காரங்க இருந்தாலும் ஆறு மணிக்கு எல்லாம் வேலையை முடித்துக் கொண்டு சென்று விடுவார்கள். மறுநாள் காலை எட்டு மணிக்குத்தான் வருவார்கள். ஆனால், தாயம்மா மட்டும் விதிவிலக்கு. அவளுக்கு வேற வீடோ, சொந்த பந்தங்களோ இல்லாததால் தோட்டம் அருகில் இருந்த சிறிய வீட்டில் அவளைத் தங்கிக் கொள்ள சொல்லியிருந்ததால் இன்று



வரை அங்கேயே வாசம் தொடர்ந்தது. கூடவே மகளும் தங்கிக் கொள்வதை யாரும் எதுவும் சொல்லவில்லை.

செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சியவாறு நகர குண்டு மல்லி செடியில் கொத்தாய் மல்லி பூத்திருக்க வாசம் பரவியிருந்தது. அதைக் கண்டதும் நேற்று நடந்த நிகழ்ச்சியில் முகம் சிவந்தது. அவளுக்கு அவமானத்தில். தினமும் தோட்டத்தில் மலரும் குண்டு மல்லி பூக்களை நெருங்க தொடுத்து விடுவாள். தாயம்மா ஹாலில் இருக்கும் மதுசூதனின் தாய்ப் படத்திற்கு தினமும் பூ மாலை போடணும்னு விஸ்வநாதன் கூறியிருந்ததால் சைமன் தாத்தா தினமும் குண்டு மல்லி பூச்சரத்தை போட்டு விடுவார். அன்று சைமன் தாத்தாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் வேலைக்கு வரவில்லை.

மேஜை மேல் இருந்த பூச்சரத்தை போட போட்டோவை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு எட்டாமல் போக ஓரமாய் இருந்த சிறிய ஸ்டூலை எடுத்து பூச்சரத்தை போட முயன்ற விநாடியில் ஸ்டூல் தலைகீழாக கவிழ பயமும், அதிர்ச்சியும் சேர கீழே விழப் போகிறோம் என பதட்டமாய் சாய்ந்த விநாடியில் இரு கைகள் அவளை பூமாலையாய் தாங்கிப் பிடித்தது. அவளை அணைக்கும் விதமாய் மாரோடு சேர்த்து பிடித்திருந்தான். இருவருக்குமே முதல் ஸ்பரிசம். என்னென்னவோ உணர்வுகளைக் கொட்டிக் கவிழ்த்தது. தவித்தவாறு கீழே நிற்க முயற்சித்தவளை கீழே நிறுத்தினான். என்ன பேசுவது என புரியாமல் சிவந்து தலை குனிந்தாள்.

''இப்படியெல்லாம் சலனப்படுத்தி என்னைக் கைக்குள்ள போட்டுக்க சொன்னாங்களா உங்கம்மா'' மிக

மெல்லியதாய். ஆனால் விஷத்தைக் கக்கும் பாம்பைப் போன்று அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை கண்டு அதிர்ந்து போனாள். சட்டென கண்கள் கலங்கி முகம் சிவந்து போனாள். அவமானத்தில் ஒரு பக்கம் தொங்கிய பூசாரத்தை சரியாக போட்டுவிட்டு திரும்பினான். "நான் எந்த பெண் கிட்டேயும் ஏமாற மாட்டேன்" என்றவாறு அதை பார்வையிலும் காட்டியவாறு அவன் சொல்ல, அந்த நிமிடமே இந்த பூமிக்குள் புதைந்து விடக் கூடாதா என்று ஏங்கினாள், அன்பரசி.

"அம்மா! வேற எங்கியாவது வேலை தேடிப் பார்க்கட்டுமா?" மெதுவாய் கேட்ட மகளை ஏறிட்டாள், தாயம்மா.




"ஏம்மா! என்ன ஆச்சு மஞ்சமா ஏதாவது சொன்னாங்களோ இல்லை சின்ன ஐயா மது தம்பி ஏதாவது திட்டினாரா?" அவள் மனதை படித்தவாறு கேட்க.

வேணாம், விஷயத்தைச் சொல்லி தாய் மனதை கஷ்டப்படுத்த விரும்பாமல், "அதெல்லாம் இல்லை. சும்மாதாம்மா!" ஏதேதோ சொல்லி மழுப்பியவாறு சென்றவளை யோசனையாய்ப் பார்த்தாள்.

பக்குவப்பட்ட அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. சீக்கிரமா மகளுக்கு திருமணம் செய்து வைக்கனும். கூழோ, கஞ்சியோ குடிச்சிட்டு புருஷன் கூட நிம்மதியா இருக்கனும். இப்படி தான் நினைக்க முடிந்தது, தாயம்மாவால்.



அன்று லண்டனிலிருந்து அத்தையும் மாமாவும் பேசியது மனசுக்கு நெகிழ்வாய் இருந்தது. மதுவுக்கு தந்தையின் உடல் நிலை பற்றி விசாரித்தது. இவன் கூட இல்லாமல் பிரியாவுக்கு கை உடைந்த மாதிரி இருக்கு என சொன்னது நினைவில் ஓட புன்னகைத்தவாறு அமர்ந்திருந்தான். தங்கை இறந்ததும் மச்சான் உறவு அறுந்திடும் என்ற எண்ணத்தோடு தேவனுக்கு விஸ்வநாதனைப் பார்க்க மனமில்லை என்றாலும் தங்கை வயிற்றில் பிறந்த செல்வத்தைப் பார்க்கவே சென்னை வந்தார். மங்கை வரவேற்று அழைத்தாலும் மனம் இடம் கொடுக்காமல் மதுவைத் தூக்கிக் கொஞ்ச, "மாமா, மாமா எனக்கு இங்க இருக்கப் பிடிக்கலே. நான் உங்க கூடவே வந்துடறேன். இங்க இருந்தா நான் சீக்கிரம் செத்துப் போயிடுவேன்" பிஞ்சு உள்ளம் புலம்பியதை பார்க்கையில் மனம் வலித்தது தேவனுக்கு. இந்த சின்ன வயசிலே இத்தனை கஷ்டப் படறானா? என்ன பேசி புரிய வைப்பது, என்ன சொல்வது என புரியவில்லை தேவனுக்கு.

"என் கூட அழைச்சிட்டுப் போகட்டுமா?" என விஸ்வநாதனைக் கேட்க இடமாற்றம் அவனை ஓரளவு மாற்றக் கூடும் என்ற எண்ணத்தோடு தலை அசைத்தார். ஆனால்! அதற்குப் பிறகு அவர் வந்து அழைத்தபோது கூட தந்தை கூட செல்ல மறுத்து விட்டான். அப்போதைக்கு தேவனுக்கு குழந்தை இல்லாதது மருமகனே மகனாய் மாறினான். அதன் பிறகு பிரியா பிறந்தபோது கூட இரண்டாவது குழந்தையாகவே நினைத்தனர். அந்தளவு பாசம் காட்டி வளர்த்து, ஆளாக்கி, தொழில் கற்றுக் கொடுத்து எல்லாம் செய்தனர். அவனும் அதற்கு விதிவிலக்காய்

இல்லாமல் அவர்கள் மீது பாசத்தைக் கொட்டி வைத்தான். பிரியாவிடம் ஒரு படி மேலாகவே அன்பு செலுத்தினான். அவ்வப்போது போன் செய்து தந்தை, தங்கைகள் பற்றி விசாரித்தாலும் அதில் கடமையை தவிர பாசம் அதிகம் இல்லாமல் போனதற்கு காரணம் அவன் இல்லை.

ஆனால் தந்தைக்கு திடீரென்று உடல்நிலை மோசமானது பற்றி டாக்டர் போன் செய்தபோது இத்தனை வருடம் கோபம், வெறுப்பு எல்லாம் மறந்து உடனே சென்னைக்கு கிளம்பி விட்டான்.

வந்த அன்றே வீட்டின் நிலைமை உணர்ந்து கொண்டான். ஒரு பெண் இருந்து ஒரு குடும்பத்தை நிர்வகிக்கா வீடு ஆளுக்கொரு திசையாய் ஆட்டம் கண்டு நிலை தடுமாறி கொண்டிருப்பதை உணர்ந்தவனாய் யோசிக்க ஆரம்பித்தான்.

காலையில் கிளம்பிப் போனால் அலுவலக வேலைகளை முடித்துக் கொண்டு சாயங்காலம் திரும்பியவனின் தினசரி வேலை தந்தையிடம் அரைமணி நேரம் பேசிவிட்டு தன் அறைக்கு திரும்புவான். இத்தனை வருடமாய் அவர் மனதில் இருக்கும் குற்ற உணர்ச்சியை போக்கும் விதத்தில் கலகலப்பாய் ஆபீசில் நடந்த விஷயங்களை மட்டுமில்லாமல் அனைத்து விஷயங்களையும் பற்றி பகிர்ந்து கொண்டவனாய்த் திரும்புவான். அன்றும் அப்படித்தான் ஏழு மணி அளவில் அவர் அறைக்குள் நுழைந்தான்.

விஸ்வநாதனின் கை, கால்களை வெண்ணிற துணியால் அழுந்த துடைத்துக் கொண்டிருந்தாள். மிதமான வெந்நீரில் தொட்டு. அன்பரசி.



அவனைக் கண்டதும் தலைகுனிந்தவாறு தன் வேலையிலே கவனமாய் இருந்து சீக்கிரமாய் வெளியேறினாள். வேலையை முடித்துக் கொண்டு, "உங்களுக்கு டிபன் எடுத்திட்டு வரேன்" என்றவாறு.

வேகமாய் வெளியேறியவளை முறைப்புடன் பார்த்தான். அன்று நடந்த நிகழ்ச்சியிலிருந்து அவனை முடிந்தவரை பார்க்காமல் ஒதுங்கி தன் வேலைகளைக் கவனித்தாள். அரை மணி நேரம் கழிந்து அவன் தன் அறைக்கு சென்றிருப்பான் என நினைத்தவாறு டிபனோடு சென்றவள் அவன் அப்படியே அமர்ந்திருந்தது அந்த மின் விசிறியின் காற்றிலும் அவளுக்கு வியர்த்தது.

என்ன செய்வது என புரியாத உணர்வு தேகமெங்கும் ஓட தடுமாறியவளை உணர்ந்தவனாய் "எனக்கு காபி எடுத்திட்டுவா" என கூறியவாறு தந்தையிடம் பேசி விட்டு வெளியேறினான், அறையை விட்டு. வேகமாய்!

என்ன சொல்வானோ! என்ற எண்ணம் படர, காபியுடன் கதவைத் தட்ட, கதவு ஒருக்களித்திருக்க, தயக்கமாய் நுழைந்தவள் யாரையும் காணாமல் சுற்றும் முற்றும் பார்வையை ஓட விட்டாள். முதல் முறையாய் அவன் அறையில்! ஒருபுறம் கம்ப்யூட்டர் அழகாய் வைக்கப் பட்டிருக்க, கொஞ்சம் தள்ளி செல்ப் மாதிரி இருந்த இடத்தில் வரிசையாய் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தது. இயல்பாகவே அவளுக்கு புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம். என்னென்ன புத்தகம் என பார்க்க மனம் பரபரத்தது. அடக்கினாள். எங்கே போனான்? டீபாய் மேல் காபியை வைத்து விட்டு திரும்பியவளின் எதிரே நின்றான் மதுசூதனன். குளித்து விட்டு வந்தான் போலும். சோப்பின்

வாசம் நாசியை தொட, மேலே எதுவும் அணியாததால் மேனியெங்கும் நீர்த் துளிகள். மார்பு ரோமத்தில் துளி துளியாய் தண்ணீர். அரை நிர்வாணத்தில் நின்றவனை ஏறிட முடியாமல் தலைகுனிந்தாள். முகம் சிவந்து, மறுகணமே அவள் நிலை உணர்ந்து அருகில் இருந்த டவலை எடுத்து தோளை மூடிக் கொண்டான்.

''ஆமா! ஏன் என்னைப் பார்த்து பயப்படறே. ஒளியற மாதிரி கூடத் தெரியுது நான் உண்மையை சொன்னதாலா?'' நமுட்டுச் சிரிப்புடன் கேட்டவனைப் புரியாமல் பார்த்தாள்.

''என்ன உண்மை?'' மெதுவாய் கேட்க,

ஏளனமாய்ப் பார்த்தவன், ''எப்படி உன்னால இப்படி எல்லாம் நடிக்க முடியுது'' கேட்டவனின் பார்வையை உணர்ந்தவளுக்கு புரிய கோபமும், அவமானமும் தாக்க விழிகள் சிவந்தது.

அதாவது இவனை மயக்கி, கைக்குள்ளே போட்டுச் சொத்து, சுகத்தை அடைய ஆசைப்படுவதாக உளறுவதை கேட்கையில் வேதனையாய் இருந்தது.

பாசமும், பரிவும் காட்டி மகளைப் போல் அன்பு காட்டும் தந்தை எங்கே? தலைகீழாய் அர்த்தம் கற்பிக்கும் மகன் எங்கே? மனம் என்ன, இவனிடம் என்ன பேச என்பது போல் வேகமாய் விலகி நடந்தவளை கைப்பிடித்து இழுத்து நிறுத்தினான்.

அழுத்தமான அவன் பிடி கையை வலிக்க வைக்க, ஏற்கனவே அவன் பேச்சில் கோபமாய் இருந்தவள், சட்டென மறு கையால் அவனை அறைந்து விட்டாள்.



இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்காதவன் ஸ்தம்பித்து போனான். சட்டென வேகமாய் வெளியேறினாள். சமையலறைக்குள் நுழைந்தவளால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. ''ஏன்?'' இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான், அவன் தந்தை மகனைப் பற்றி உயர்வாய் பேசும் போதெல்லாம் இனம் புரியாத சந்தோஷம் அவள் நெஞ்சில் மேடை போட்டது. தந்தை மறுமணம் செய்தது பிடிக்காமல் கோபித்து போனவன் தன் மனைவியாக வருபவளை கண்ணுக்குள் வைத்து நேசம் காட்டுவான் என உயர்வான எண்ணங்களை அவள் மேல் வைத்திருந்தாளே! தன் சித்தியாய் வந்த பெண்ணால் தன் வாழ்க்கைச் சூழல் மாறிப் போனதில் பெண்களை வெறுக்கிறானோ! பணத்துக்காக எதுவும் செய்வார்கள் என தப்பான அபிப்ராயம் செய்து கொண்டானோ! பலவாறு எண்ணி அழுதவளின் விழிகள் சிவந்து போனது. அதேசமயம் மனம் குரல் கொடுத்தது. ஆனாலும் ஒரு ஆண் மகனை கைநீட்டி அடித்தது தப்பு என, புரியாமல் குழம்பியவளை விஸ்வநாதனின் இருமல் குரல் செவியைத் தட்ட, வேகமாய் அவர் அறைக்கு சென்றாள்.

''தண்ணீர் குடிங்க'' என்றவாறு டம்ளரில் ஊற்றி அவரிடம் நீட்ட, அவள் முகத்தைப் பார்த்தவர் திடுக்கிட்டார்.

''ஏம்மா அழுதியா?'' கேட்க.

''இல்லியே! கண்ல தூசி விழுந்திடுச்சு. வேற ஒண்ணுமில்லை..'' முந்தானையை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்தாள். எந்த விஷயத்தை மறைக்கிறாள்? ''மருத ஏதாவது திட்டினானா? இல்லை, மது ஏதாவது

சொன்னாளா? கூப்பிடு கேட்கிறேன்'' என்றவாறு அழைக்க முயற்சிக்க,

''அய்யோ! யாரும் எதுவும் சொல்லலை. உண்மை யிலேயே தூக்க தான் விழுந்திடுச்சு'' மெதுவாய் சிரிக்க முயல, ''இப்பதான் சரி! இந்த சிரிப்பு முகத்துல எப்பவும் இருக்கணும். கல்லூரியில படிச்சிட்டு ஜாலியா எஞ்ஜாய் பண்ண வேண்டிய வயசில இந்த கிழவனுக்கு சேவை செய்துட்டு...'' மேல பேச முடியாதவரை குறுக்கிட்டாள்.

''அப்படியெல்லாம் பேசாதீங்க... எங்கப்பாவாக இருந்தால் செய்ய மாட்டேனா?'' மென்மையான குரலில் கூறியவளை மனம் நெகிழப் பார்த்தார்.

'இவருக்காக இங்கே இருப்பதா? இல்லை, அவனுக்காக வேறு வேலை தேடிக் கொண்டு வீட்டிலிருந்து போய் விடலாமா? ஆனா படித்துவிட்டு நிறையப் பேர் வேலைக் காகச் சுற்றுகின்றனர். வெறும் பனிரெண்டாம் வகுப்பு படித்தவளுக்கு என்ன வேலை கிடைக்கும். இதேபோல வீட்டு வேலைக்கு போக வேண்டியதுதான்' நினைத்துக் கொண்டாள்.

அதன் பிறகு நாட்களில் ஆபீஸ் வேலைகளின் மும்முரத்தில் தாமதமாக வீடு வந்தவன் கண்களில் அவள் படவில்லை. மட்டுமில்லாமல் அவனும் அவளிடத்தில் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை.

மாலை நேரத்தில் பைலில் பார்வையை ஓட்டி எழுதிக் கொண்டிருந்தவன் அருகில் சென்று மன்னிப்பு கேட்டாள். அவள் அப்படி நடந்து கொண்டதற்காக, அவன் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. மறுத்துப் பேசவும் இல்லாமல்



மௌனம் காக்க மனம் வலிக்க நகர்ந்தாள். தன்னை நல்லவிதமாக நினைக்கப் போவதில்லை இவன் என்ற எண்ணமே வலிக்கச் செய்வதாய்.

நாட்கள் மெல்ல நகர்ந்தது, சோம்பலாய்.




அன்று டாக்டர் வேலாயுதம் வந்திருந்தார். நண்பனின் உடல் நிலையை பரிசோதித்தவரின் முகம் மலர்ந்தது.

''நல்ல முன்னேற்றம் தெரியுது. மது கூடிய சீக்கிரம் எழுந்து நடமாடுவார்.?''

''தேங்க்ஸ் அங்கிள்'' மனம் மகிழ நன்றி சொன்னான்.

''என்னோட மாத்திரை, மருந்து மட்டுமில்லை. அன்போட கவனிப்பு, நீ கூட இருக்கிறது, எல்லாம் சேர்ந்து அவரை குணமாக்கியிருக்கு'' என்றவாறு மேலும் அவர் உடல் நிலை பற்றி, நடந்து கொள்வது பற்றி அவனிடம் பேசிக் கொண்டிருக்கையில், காபியை நீட்டினாள், அன்பு.

அவரும், மதுவும் எடுத்துக் கொண்டதும் வேகமாய் விலகினாள்.

''ஆமாம்! என்ன பிரச்சனை அன்புக்கு? வேற வேலை கிடைக்குமா?''ன்னு கேட்டான்.

''என்ன சொல்றீங்க அங்கிள்?'' புருவத்தை உயர்த்தி னான் வியப்பாய்.

''ஆஸ்பிட்டலில் கூட்டி பெருக்கும் வேலை கூட பரவாயில்லைனு சொன்னாள். ஏம்மா! நீ திட்டுனியா! இல்லை மத்த ஏதாவது சொன்னாளா?'ன்னு கேட்டேன்.''

யாரும் எதுவும் சொல்லலை. அப்படி. இப்படினு மழுப்பிட்டா. ஏதாவது பிரச்சனையா?''

''ப்ச் இல்லை அங்கிள். அன்னிக்கு திட்டிட்டேன். கோபத்துல? அதனால கேட்டிருப்பா. மத்தபடி ஒண்ணுமில்லை. நான் பார்த்துக்கிறேன், அங்கிள்'' முதன் முறையில் அவன் மனதில் அவளைப் பற்றி புது எண்ணம் வானவில்லாய் தோன்றியது. ஏனோ! அது அவனுக்கு பிடித்திருந்தது. அன்று அறைந்தபோது கோபத்தின் உச்சியில் இருந்தான். வேகமாய் அறையை விட்டு வெளிவந்து அவளைத் தேடியபோது அழுத கண்களைத் துடைத்தவாறு தந்தையின் அறைக்குள் நுழைந்தவளை பார்க்கையில் அவன் கோபம் மெழுகைப் போல் கரைந்து போனது. மெல்லிய மாற்றம் அவனுள் மெல்ல உதயமானது.

அன்று ஞாயிற்றுக்கிழமை அன்பரசியின் பிறந்த நாள். கிராமத்தில் தாத்தா கூட இருக்கும்போது கோவிலுக்கு போயிட்டு தாத்தாவிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு மானசீகமாய் தாயிடம் வாழ்த்துக்கள் பெறுவாள். ஆனால்! இன்று தான் முதல் முதலாய் தாயின் அருகிலே தன் பிறந்த நாளை கொண்டாடப் போகிறாள்.

பெரிதாய் கொண்டாட அவள் ஒண்ணும் விஐபி வீட்டுப் பெண் இல்லியே! அதைப் பற்றி அவள் கவலைப்படவும் இல்லை.



டிரங்க் பெட்டியில் தாயின் நூல் சேலை எடுத்தாள். ''உங்கப்பா எனக்கு முதல் முதலா வாங்கித் தந்த சேலை. ஒரு தடவை தான் கட்டினேன். அதன் பிறகு உங்கப்பா போன பிறகு அவரோட நினைவா வச்சிருக்கேன். அதைக் கட்டிக்கிட்டு கோவிலுக்குப் போயிட்டு வா!'' தாயின் வார்த்தைகள் செவியில் ஓட, இதழில் புன்னகையும், கூடவே 'தந்தையின் முகம் கூட பார்க்காத பாவி ஆயிட்டேன்' என்ற வேதனையும். ''மகராசியா வாழணும்'' தாயம்மா மகளை வாழ்த்தி அணைத்துக் கொண்டாள்.

பக்கத்து தெருவில் இருக்கும் அம்மன் கோவிலில் அர்ச்சனையை முடித்துக் கொண்டு திரும்பியவளை உரசியவாறு நின்றது அந்தக் கார்.

கோபத்துடன் திரும்பியவள் காரிலிருந்து இறங்கிய கிஷோரைக் கண்டதும் கோபத்தை மௌனமாய் விழுங்கினாள்.

கண்களில் போட்டிருந்த கூலிங் கிளாசை கழட்டியவாறு அருகில் வந்தான்., ''ஹலோ அன்பு'' ஆர்ப்பாட்டமாய் அவனை அழைத்தது பிடிக்கவில்லை. என்றாலும் தான் வேலை செய்யும் வீட்டின் மருமகனாயிற்றே! நினைத்தவாறு மௌனம் காத்தாள்.

ஜொள்ளு விடும் பேச்சும், தலை முதல் பாதம் வரை உரசும் வெறித்த பார்வையும் கொஞ்சம் கூட பிடிக்காது அவளுக்கு. ஆனாலும் சகித்துக் கொள்ள வேண்டும். என்ன செய்வது? ஏழையாக, பிறந்து விட்டாளே!

''கோவிலுக்கா போயிட்டு வரே'' கேட்டான்.

"அதான் தெரியுது இல்ல. அப்புறம் என்ன கேள்வி?" தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டாள்.

"நான் வீட்டுக்குத்தான் போறேன். வா கார்ல ஏறு வீட்டுல விட்டுறேன்" அழைத்தான்.

"பரவாயில்லை நான் நடந்தே வரேன். நீங்க போங்க." வலுக்கட்டாயமாக புன்னகைக்க முயன்றாள்.

"இதோ பார் அன்பு. உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். வீட்டுல பேச முடியாது. கார்ல ஏறு. பேசிக்கிட்டே போகலாம். நான் சொல்லப் போற விஷயத்தைக் கேட்டதும் துள்ளிக் குதிப்பே. சந்தோஷத்தில பறப்பே" அவன் பேச, பேச நெஞ்சினில் கிலி பிறக்க பயம் படர்ந்தது அவளுள்.

"முதன் முதலா சேலை கட்டியிருக்கே போலிருக்கு. ரொம்ப, ரொம்ப அழகா இருக்கே. தேவதை மாதிரி" பேச பேச, எரிச்சலில் குமைந்தாள்.

தன் மகனை மணமுடித்து வைப்பட்ட சொத்துக்களைக் கொடுத்தார் விஸ்வநாதன் ஐயா! ஆனால் அதை எல்லாம் ஊதாரித்தனமாய் பொறுப்பில்லாமல் அழித்துவிட்டு அடுத்த பெண்ணிடம் கண்டபடி பேசும் இவனை என்ன செய்வது. மஞ்சம்மாவுக்கு இதெல்லாம் தெரியாதா! அப்படி என்ன பேசப் போகிறான். தெரிந்து கொள்ள அவனோடு பேசிவிட்டால் தீரும் என்பதால் மௌனமாய் காரில் ஏறிக் கொண்டாள்.

வேண்டா வெறுப்பாய் ஒரு நண்பனை ஏர்போர்ட்டில் சீஆப் செய்துவிட்டு திரும்பிய மனுவின் விழிகளில் கிஷோரும் அன்பும் காரில் செல்வது விழுந்தது. ஆத்திரம் அலையாய்



விழிகளில் சிவக்க வெகுண்டான். தன் மனதில் பூட்டி வைத்திருந்த பனித்துளி போன்ற இனம் புரியாத உணர்வு பறந்தோட காலியான மனதுடன் கனத்தது. நண்பனை வேண்டிய இடத்தில் விட்டு விட்டு வீடு வரப் போகும் அவர்களுக்காக காத்திருக்க ஆரம்பித்தான். கொதிக்கும் மனநிலையோடு.

நேரம் கடக்க ஆரம்பிக்க உள்ளே வந்தான், கிஷோர் கூடவே அவளும்.

"ஹலோ கிஷோர்" அவனை அழைத்தவாறு அவன் பக்கம் திரும்பினான். "எங்கே போய் சுத்திட்டு வரே. வீட்டையும் அப்பாவையும் பார்த்துக்கத்தான் உன்னை வேலைக்கு வச்சிருக்கு" கடுகடுக்கப் பேச, மனம் வலித்தது.

"இல்லை கோவி...'' பேச முயன்றவளை இடைமறித் தான்.

"சூடா காபி எடுத்திட்டு வா" அதட்டினான்.

விழிகளில் எட்டிப் பார்த்த கண்ணீரை மறைத்தவாறு மௌனமாய் சமையலறைக்குள் நுழைந்தாள்.




ஏழ்மையாகப் பிறந்து வேலைக்கா
ஆனால், இந்த மாதிரி பணக்காரங்ககிட்
பெரும்பாடுபட்டுத்தான் வாழணும் போல

இந்தே நிமிடத்தில் காபி தட்டோ
வெளிப்பட்டான். "சரி நான் வரேன் மது

அவனிடம் விடை பெற்றவாறு காபி டம்ளரை டீபாய் மீது வைத்து விட்டு அவள் பக்கம் திரும்பிய கிஷோர் கண் ஜாடையில் ஏதோ சொல்லியதை மது கண்டும் காணாததைப் போல் அமர்ந்திருந்தாள். கிஷோர் சென்றதும் அவளை அழைத்தான். எதிரே நின்றவளை விழிகளால் விழுங்கினான். மிக எளிமையான தோற்றம். அழகான மேனி. பழைய சேலை ஆனாலும் அடக்கமாய் அழகாய் கட்டியிருந்தாள். சேலை விலகிய பளீர் என தெரிந்த கொடி இடை இதுதானோ என நினைக்க வைக்கும் இடை. அவன் பார்வையை உணர்ந்தவளின் கை தன்னிச்சையாய் சேலையை இழுத்து இடையை மூட, சின்ன சிகப்பு பொட்டு அதன் மேல் விபூதியும், கீழே குங்குமமும் அவள் முகத்தை மேலும் அழகாய் காட்ட, சிவந்த இதழ்கள் லேசாய் நடுங்கியதோ, என நினைக்கத் தோன்றியது அவனுக்கு. ''என்கிட்ட பலிக்கலைனு கிஷோர் கிட்ட டிரை பண்றியா? அவனுக்கு கல்யாணம் ஆயிடுச்சு. அதுமட்டும் இல்லை. அவன்கிட்ட பணம் எதுவும் இல்லை இப்போதைக்கு!'' வேகமாய் எழுந்து கோபத்தோடு பேசியவனை முறைத்தாள். வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுகிறானே! ஏன்? தன்னை தப்பான பார்வையிலே பார்க்கிறான். தவிப்பில் ''முட்டாள் தனமா உளறாதீங்க..'' ஆத்திரத்தில் படபடத்தாள்.

உடம்பெல்லாம் கோபம் பரவ, ''நானா முட்டாள், உண்மையைச் சொன்னா உடம்பெல்லாம் எரியுதோ!'' கேட்டவனிடம் மறுத்து வாதாட அவள் மனமோ, உடலோ இடம் தரவில்லை. ஏற்கனவே கிஷோர் சொன்ன விஷயத்தில் அதிர்ந்து போயிருந்தாள். இப்ப, இவன் வேற, மனம் புண்ணாய் வலித்தது.



''இப்ப, என்ன அதுக்கு உங்க கிட்ட பலிக்கலை.

''அதான்! கிஷோரை மடக்கி போடலாம்னு'' வேகமாய் வார்த்தைகள் வெளிவர,

ஒரு கணம் உடம்பெல்லாம் விறைத்தது அவளுக்கு. பாறாங்கல்லை மனதில் கட்டி வைத்தது போன்ற வலியில் துடித்துப் போனாள்.

''என்கிட்ட நிறையப் பணம் இருக்கு. என் தங்கை வாழ்க்கைக்கு குறுக்கே வர நான் அனுமதிக்க மாட்டேன். உனக்கு தேவைப்பட்டதை நான் தர்றேன். அதே சமயம் எனக்கு வேணும்ன்றதை நீ கொடு. உன்கிட்ட இருக்கிற அழகான இளமை..'' அவன் பேசியவாறு அவளைத் தொட முயல, கோபத்தில் கையை ஓங்கி விட்டாள்.

இடையிலே கையை பிடித்துக் கொண்டான். ''எல்லா நேரத்திலும் நான் ஒரே மாதிரி இருக்க மாட்டேன்'' பேசியவாறு அவளை இழுக்க தடுமாறி விழுந்தவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

தாயின் மடியில் ஆறுதல் தேடும் பிள்ளை போல் அவன் மார்பில் கதகதப்பாய் முகம் பதிய இறுக்கி அணைத்த வனின் கைகள் அவள் தேகமெங்கும் படர, இப்படி யெல்லாம் நடந்து அவளை கைக்குள்ளே போட்டுக்கப் பார்க்கிறேன்னு சொன்னவன்தானே! இப்ப, அதுதான் உண்மை என்று முடிவே கட்டிடுவான்ற நினைப்பு தோன்ற, கஷ்டப்பட்டு விலக முயற்சித்தவளின் விலகல் புரிய மேலும் இறுக்கினான். மெல்ல அவள் முகம் நிமிர்த்தி இதழின் மீது இதழ் பதிக்க முயன்றவன், அவள் அழுகையைக் கண்டு துணுக்குற்றான். கண்ணீர் கன்னம்

வழிய அழுதவளை விலக்கி நிறுத்தினான். ''ஏய்! என்னாச்சு?'' படபடத்தான். அதிர்ந்து அவன் கேள்விக்குப் பதில் பேச முடியாமல் விலகி மறைந்தாள்.

சில நொடிகள் அசையாமல் நின்றவன் மனதில் ஆயிரம் எண்ணங்கள் குடையாய் விரிந்தது. கிராமத்து வீட்டில் ஓலைப்பாயில் படுத்தபோது இருந்த நிம்மதியும், சந்தோஷமும் இப்போது இல்லை அன்புக்கு. அழுகையில் கரைந்தாள். அதுவும் நேத்து மஞ்சு சொன்னதை நினைக்கையில் வேதனையில் வெந்தது மனசு.

''அப்பா, வரவா அந்த அன்புக்கு ரொம்பதான் இடம் கொடுக்கிறீங்க. வேலைக்காரி மாதிரியா நடந்துக்கிறா'' கோபமாய் பேசிய மகளை ஏறிட்டார்.

''யாரை எப்படி நடத்தனும்னு எனக்குத் தெரியும். அன்பா நடந்துக்கிறவங்க கிட்ட அன்பைத்தான் கொடுக்க முடியும்.'' அமைதியாய் சொல்ல, ''நீங்க பேசறதைப் பார்த்தா, நாங்க உங்க மேலே பாசமா இல்லைனு சொல்ற மாதிரி இருக்கு'' படபடத்தாள்.

''யார் யார் எப்படி பட்டவங்கன்னு அவங்கவங்க மனசாட்சிக்குத் தெரியும்.''

பேச பேச, நிலைமை தெரியாமல் மாத்திரை கொடுக்கணுமே என்ற எண்ணத்தோடு அறைக்கு வந்த அன்பை விரோதம் கலந்த வெறுப்பைப் பார்வையில் கொட்டினாள் மஞ்சு.

''வேண்டாம்! இனியும் இங்கிருப்பது நல்லதல்ல. அவனுக்கும் தன் மீது தப்பான எண்ணம். மனசுக்கும் பிரச்சனை. மேலும் பிரச்சனை பெரிதாகும் முன் வேறு



எங்கியாவது வேலை தேடிக்க வேண்டியதுதான் என நினைத்தவளை உடனடியாக செயல்படுத்தும்படி இருந்தது மஞ்சு செய்த காரியம்.




தாரிணிக்கு தாங்க முடியவில்லை. மஞ்சுவை சிநேகம் பிடித்துக் கொண்டு அடிக்கடி மதுவைச் சந்திக்க வீட்டுக்கு சென்றாலும், எதுக்கும் பிடி கொடுக்காமல் பேசுவதும், அவளைக் கண்டாலே ஏதோ சொல்லிவிட்டு தன் வேலைகளை கவனிக்கச் செல்வதும் அவளுக்கு பிடிக்கவில்லை. எப்படியாவது தன் காதலை சொல்லிவிட வேண்டும் என தவித்துக் கொண்டிருந்தாள். ஆனால்! அவன் பார்வையில் இருப்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அதுவும் அவன் எதிரே வேலைக்காரியாக இருந்தாலும் அன்பரசி நடமாடுவது சுத்தமாகப் பிடிக்கவில்லை. தன் மீது படுவதை விட அவள் மீது தான் அவன் பார்வை அதிகமாகப் படுவது போல் ஒரு உணர்வு. முதலில் அவளை வீட்டை விட்டு அனுப்ப வேண்டும் என்ற எண்ணமே அதிகமாய் ஆட்டிப் படைத்தது. இன்று எப்படியாவது தன் காதலைச் சொல்லிடணும் என்ற முடிவோடு தான் மதுவின் வீட்டுக்கு வந்தாள். விஸ்வநாதனிடம் நலம் விசாரித்துவிட்டு மஞ்சு கூட பேசிட்டு இருந்தாள். அவன் வரும் பாதையை எதிர்பார்த்து வாசலையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏய் அன்பு காபி எடுத்திட்டுவா" அதட்டினாள், மஞ்சு. அடுத்த சில நிமிடங்களில் அழகு மயிலாய் காபி தட்டோடு வந்த அன்புவின் அழகைப் பார்த்து திகைத்தாள். நாகரிக உடையில் வெளிப்படும் தன் அழகை விட பழைய சேலையில் அவள் அழகு அதிகமாகவும், அடக்கமாகவும் இருக்க மனம் எரிந்தது தாரிணிக்கு.

காபி தட்டை நீட்டியவளின் விரல்களின் விளிம்பை விட சுண்டு விரலில் போட்டிருந்த மோதிரம் மஞ்சுவைக் கோபப்படுத்தியது.

இது அப்பா பத்திரப்படுத்தி வைத்திருந்த வைர மோதிரமாச்சே. அவருடைய முதல் மனைவியின் ஆசை பரிசு. அவள் நினைவாக வைத்திருக்கிறேன். மற்ற எந்த நகை வேணும்னாலும் எடுத்துப் போட்டுக்கோன்னு சொன்னது செவியில் ஒட ஆத்திரத்தில் முகம் இருண்டது.

"ஏய்! இது அப்பாவோட மோதிரமாச்சே! உன் கையில எப்படி? அவர் தூங்கும்போது பீரோவைத் திறந்து எடுத்துக்கிட்டியா? அப்பவே எனக்குத் தெரியும்" படபடத்தவாறு வார்த்தைகளை நெருப்பாய்க் கொட்ட அதிர்ந்தாள் அன்பு.

"என்னம்மா! இது சேலையிலே! ரொம்ப அம்சமா அழகா இருக்கே... 'ம்' எவன் கொடுத்து வச்சிருக்கானோ மனைவியா அடைய" சிரிப்பும், கிண்டலுமாய் கூற புன்னகைத்தவாறு "இன்னிக்கு என்னோட பிறந்த நாள் ஆசீர்வாதம் பண்ணுங்க" என்றவாறு அவர் கால்களை தொட்டு வணங்க,



சிலிர்த்தார். மனம் குளிர வாழ்த்தியவாறு "அந்த பீரோவைத் திறந்து சிறிய தங்கப் பெட்டி இருக்கும். எடுத்திட்டு வாம்மா" என்றவாறு தலையணை அடியில் இருந்த சாவியை எடுத்து நீட்ட,

அதில் இருந்த மோதிரத்தை எடுத்து அவர் அன்பாய் கொடுத்தபோது திகைத்துப் போனாள்.

"அய்யோ! இதெல்லாம் வேணாம். உங்க வாழ்த்துக்களே போதும்" மறுத்தாள், திடமாக.

"இதை கொடுக்கிறதால என் சொத்து ஒன்னும் அழிஞ்சிடப் போறதில்லை, வாங்கிக்கோ. அப்ப, என்னை அப்பா மாதிரி நினைக்கிறேன்னு சொன்னது சும்மாவா," கேட்டவாறு நீட்டியவரை ஏறிட்டாள்.

"இல்லை! அதுவந்து..." மேலும் தயங்கியவளின் கையை பற்றி உள்ளங்கையில் மோதிரத்தை வைத்து மூடினார். அவள் அப்போதும் தயங்க,

"சரி, என் விருப்பத்துக்காக இன்னைக்கு மட்டும் போட்டுட்டு நாளைக்கு கழட்டி கொடுத்துடு. சரியா" புன்னகைத்தவரிடம் தலையாட்டினாள்.

"அடிபாவி! இதையெல்லாம் என்னை நம்பச் சொல்றியா? திருட்டுக் கழுதை. தங்க இடம் கொடுத்து, சாப்பாடு போட்டு... உண்ட வீட்டிலே கை வைக்கப் போறியா! இன்னும் என்னென்ன திருடினே!" அவள் கையைப் பிடித்து இழுக்க,

விழிகளில் அழுகை கொப்பளித்து ஓடவா, நடுரோட்டில் சேலையை அவிழ்த்த மாதிரி, துடித்துப் போனாள் அன்பு அவமானத்தில்.

''இவங்க மாதிரி வேலைக்காரங்களுக்கு அதிக இடம் கொடுக்கக் கூடாது மஞ்சு.'' தாரிணி எடுத்துக் கொடுக்க, மேலும் ஆத்திரமானாள். இவளுக்காக தந்தை தன்னை உதாசீனப்படுத்தியது நினைவுவர மேலும் ஆத்திரமாய் வர,

''ப்ளீஸ் கையை விடுங்க. நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை'' கையை உருவ முயன்றவாறு அழுதவளை பட்டென அறைந்து விட்டாள் மஞ்சு. அறையும் அதே விநாடியில் அறையிலிருந்து வெளிவந்த மதுசூதனன் அதிர்ந்து போனான். மஞ்சு வேகமாய் கத்தியவாறு அருகில் வர,

'உள்ளேதான் இருந்தானா, இத்தனை நேரம்' சட்டென எழுந்தாள் தாரிணி.

''அறிவிருக்கா உனக்கு. அப்படி என்ன செய்தான்னு அவளை அடிச்சே!'' முகம் சிவக்க கோபத்தை அடக்க முடியாமல் ரௌத்ரமாய் கேட்க, ''இந்த நிமிடமே தன் உயிர் பிரிந்து விடக் கூடாதா? எத்தனை பெரிய அவமானம். அடுத்தவர் மத்தியில்?'' அழுகையோடு விலகியவளை கைப்பிடித்து நிறுத்தினான்.

''நில் அன்பு'' அதட்டினான்.

முதல் முறையாய் அவன் உதட்டில் அவள் பெயர்.

அந்த சூழ்நிலையிலும் நினைக்காமல் இருக்க முடிய வில்லை அவளால்.

''உண்மையை தெரியாம பேசாதே அண்ணா'' காரணத் தைக் கூற,



''இந்த சின்ன விஷயத்துக்காக அடிச்சே. அப்பாதான் கொடுத்தாருனு சொன்னா, இந்த அறையை நீ வாங்கிக் குவியா'' நாடி நரம்பெல்லாம் ஓடிய கோபத்தை அடக்க முடியாமல் கேட்க, முகம் சிறுத்துப் போனது மஞ்சுவுக்கு.

''வேலைக்காரிக்காக உங்க தங்கையை ஏன் திட்டறீங்க?'' தாரிணி மெதுவாய் கேட்டாள்.

வெறுப்பாய் அவளைப் பார்த்தவன், ''இது எங்க குடும்ப விஷயம். ப்ளீஸ்'' என்றவாறு ''அன்பை பத்தி எனக்குத் தெரியும். இந்த மாதிரி, நகை, நட்டு, பணத்துக்கு அலையறவளோ, ஆசைப்படறவளோ இல்லை. என்ன! அவளோட குணமே தங்கம்தான்''

இன்னும் கோபம் குறையாதவனாய் அழுத்தமாய், பேச பேச முகம் சிவந்து போனாள், தாரிணி. கூடவே மஞ்சுவும்.

''தப்பு யார் செய்தாலும் தப்புதான். ஆனா! அன்பு சொன்னது உண்மை. புரிஞ்சுதா.'' மஞ்சுவிடம் கடுகடுத்தவாறு திரும்பினான்.

அன்புவின் நிலையைப் பார்க்க, பார்க்க உள்ளம் கொதித்தது. அடித்து அணைத்து ஆறுதல் சொல்ல மனம் பதைத்தாலும் சூழ்நிலை கருதி கட்டுப்படுத்தினான், தன் உணர்வுகளை.

''வெரி! வெரி சாரி அன்பு!'' கண்களில் மென்மையை தாங்கியவாறு அவள் பக்கம் திரும்பி கூற, பொங்கிய அழுகையை அடக்கியவாறு மறைந்தாள்.

'சே' வெறுப்பாய் அவனும் செல்ல, திகைத்துப் போனாள் மஞ்சு.

'சே' தான் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல முடியாத சூழ்நிலைக்கு காரணமான மஞ்சு மேலயும் அன்பு மேலயும் கோபம் படர மஞ்சுவிடம் சொல்லி விட்டு கிளம்பினாள் தாரிணி.

முதுகு குலுங்க, அழுது கொண்டிருந்தவளைத் தொட்டு திருப்பினான். "இனியும் இங்கிருக்க நீ விரும்ப மாட்டே இன்னும் ஒரே ஒரு வாரம் பொறுத்துக்க. நானே ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு பண்றேன். ப்ளீஸ் அன்பு. மஞ்சு நடந்துக்கிட்ட விதத்துக்காக நான் வெட்கப்படறேன். வேதனைப்படறேன். ப்ளீஸ்!" தழுதழுப்பாய் கூறிய வனிடம் எதுவும் பேச முடியாமல் தலையாட்டினாள்.

"அப்புறம் பிறந்த நாள் வாழ்த்துக்கள்" என்றவாறு அவள் கையைப் பற்றி உதட்டைப் பதித்து சொல்ல, திகைத்து நின்றிருந்தாள், அவன் செய்கையில்.




இரண்டு நாளாக உடல் நிலை சரியில்லாததால் தாயம்மா வேலைக்கு வராமலே அறையில் படுத்துக் கிடந்ததால் மஞ்சு மகளை அறைந்த விஷயம் தெரிய வாய்ப்பில்லாமல் போனது.

'அம்மாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா ஒரு நிமிஷம் கூட இந்த வீட்ல இருக்க மாட்டாங்க. அதுக்கு முன்னாடியே இந்த வீட்டை விட்டுப் போகணும். ஆனா! எங்கப் போறது? முதல்ல ஒரு வேலை தேடிக்கணும்!' முடிவு செய்தவாறு நகர்ந்தவளின் நினைவில் மதுசூதனின்



சிரித்த முகம் நின்றது. "என்னை விட்டுப் போயிடுவியா!" குறும்புத் தனம் மின்ன கேட்க, "நீங்க கோபுரத்துல இருக்கீங்க. நான் கீழே இருக்கேன். அண்ணாந்து உங்களைப் பார்க்கத்தான் முடியும். உங்களை உரிமைக் கொண்டாட முடியாது." நினைக்க நினைக்க மனம் புண்ணாய் வலித்தது. எந்த நிமிடத்தில் அவனை மனதில் நிறைத்தாள். அவளுக்கே புரியாத புதிர். வார்த்தைகளால் அவளை வறுத்தெடுத்தாலும், அவன் மீது வெறுப்பு வரவில்லை. முதல் ஸ்பரிசத்தின் போதே அவள் மனமும் அவனைச் சேர்ந்துக் கொண்டதோ!

இயலாமையில மீண்டும் அழுகை வந்தது. தன் காதலை அவனிடம் சொன்னால்? என்ன பேசுவான்? 'ஓகோ! என் சொத்து பணம் எல்லாத்தையும் அடைய இப்படி ஒரு வழி இருக்கே, பரவாயில்லை. என் வார்த்தையை உண்மைன்னு நிருபிச்சிட்டே' ஏளனமுமாய் எகத்தாளமுமாய் புருவத்தை உயர்த்தியவாறு அவன் கேட்பது போல கற்பனை வர நெருப்பில் குளிப்பது போல வேதனையில் வெந்தாள். 'வேண்டாம் என் காதல் என்னுள்ளே கரைந்து போகட்டும். நடக்காததை பத்தி பேசுவதில் பிரயோசனம் இல்லை இனி! இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் முள்ளில் நிற்பது போலதான்.' ஒரு முடிவாய் நகர்ந்தாள்.

அந்தப் பெரிய அடுக்குமாடி கட்டிடத்தின் உச்சியில் மலர் மருத்துவமனை சில்வர் எழுத்துக்கள் வெயில்பட்டு மின்ன, பெரிய கேட் முன்பு ஆட்டோவிலிருந்து இறங்கினாள், அன்பு. ஆட்டோக்காரரிடம் பணத்தைக் கொடுத்து விட்டு உள்ளே நுழைந்தாள்.

ரிசப்ஷனிஸ்ட் அழகான ஆங்கிலத்தில் அவளிடம் "என்ன வேணும்?" என கேட்க,

"டாக்டர் வேலாயுதத்தைப் பார்க்கணும், ப்ளீஸ்..."

"அப்பாயின்ட்மென்ட் இருக்கா?"

"இல்லை! ஆனா! அன்பு வந்திருக்கேன்னு சொன்னா, கூப்பிடுவார். இதோ! அவரோட விசிட்டிங் கார்டு" நீட்டினாள்.

வீட்டில் விஸ்வநாதனை கவனிக்கும்போது 'ஏதாவது அவசர தேவையின்னா, போன் பண்ணு' என விசிட்டிங் கார்டு கொடுத்திருந்தது அவளுக்கு உதவியது. "நேராய் போய் இடதுபக்கம் முதல் ரூம்" அந்த பெண் சொல்ல நன்றி சொல்லியவாறு நீண்ட காரிடாரில் நடக்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு இடத்திலும் பணத்தின் செழுமை மின்னியது. டாக்டர் வேலாயுதம் எம்.எஸ். பித்தளை எழுத்துக்கள் மின்னிய கண்ணாடிக் கதவை மெல்ல தட்டினாள்.

"யெஸ்!" உள்ளேயிருந்து குரல் கேட்க, கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

"வணக்கம் டாக்டர்..." புன்னகையோடு கூறியவளை ஆச்சரியமாய் ஏறிட்டார்.

"வா! அன்பு ஆச்சரியமா இருக்கே, உட்காரு!" என்றவாறு எழுந்து வந்தார். "ஏதாவது முக்கியமான விஷயமா?" கேட்டார்.

"ஆமா டாக்டர் அங்கிள்" என்றவாறு முதுகை காட்டி அமர்ந்திருந்தவனை தயக்கமாய் பார்த்தாள்.



"இல்லை! அவங்க போனதும் வரேன். வெளியிலே வெயிட் பண்றேன்" என்றவாறு திரும்ப முயற்சித்தாள்.

"நீ வந்த விஷயத்தைப் பேசு. நான் வெளியில இருக்கேன்" என முகம் காட்டி எழுந்தவனைக் கண்டு அதிர்ந்து போனாள். மதுசூதனன் சற்றும் எதிர்பார்க்க வில்லை அவள்.

"முதல்ல உட்காரு. வெயிலிலிருந்து வந்திருக்கே. கூல்டிரிங்ஸ் குடி" அருகிலிருந்த பிரிட்ஜைத் திறந்து குளிர்பானத்தை கண்ணாடி தம்ளரில் ஊற்றி நீட்ட தயக்கமாய் வாங்கிக் கொண்டாள்.

"அப்புறம் மது" என்றவாறு அவன் பக்கம் திரும்பினார்.

"பிசியோதெரபிஸ்டை... வரவேணாம்னு சொல்லிட்டேன். முன்னை விட நல்ல மாற்றம். சுவரை பிடிச்சிட்டு அறைக்குள்ளேயே லேசாய் நடக்க பழகறா. கூடிய சீக்கிரம் நல்லா நடக்க ஆரம்பிச்சுடுவா" பேச பேச, அம்மாவோட உடல்நிலை பற்றி விசாரிக்க வந்திருக்கானா - எண்ணம் அவளுள்.

அவரிடம் மேலும் சில வார்த்தைகள் பேசிவிட்டு வெளியேறினான், மது.

'அப்பாடா! எப்படி அவன் எதிரே வேலை கேட்டு பேசுவது' என குழம்பியவளின் உள்ளம் தெளிய,

"இந்த ஆஸ்பிட்டலில் ஏதாவது வேலை இருந்தா போட்டு குடுங்களேன்" ஒரு வழியாய் கேட்க வந்த விஷயத்தைக் கேட்டு முடித்தாள், தயக்கமாய்...

"எம்மா இந்த முடிவு? வீட்ல ஏதாவது பிரச்சனையா?"

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. அங்கிள்'' மென்று விழுங்க...

''ம், சரி! சொல்ல விரும்பலேன்னா வேண்டாம். நாளைக்கு டெல்லி போறேன். வந்ததும் இங்கேயே வேலையில சேர்த்துக்கிறேன். அதுவரைக்கும் அங்கேயே இரு. சரியா?'' கேட்டவரிடம் தலையாட்டினாள்.

''தேங்க்ஸ் அங்கிள்'' எழுந்தாள்.

இருப்பவர் இல்லாதவர் என பாரபட்சம் காட்டாமல் நேசம் காட்டும் அவரைப் பெருமிதமாக நினைத்தாள்.

''நான் கிளம்பறேன்'' என்றவளிடம் ''ஒரு நிமிஷம், இரும்மா!'' என்றவர் ''மது உள்ளே வரலாம்!'' எனக் குரல் கொடுக்க கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான், மதுசூதனன்.




''நீ வீட்டுக்குத்தானே போறே. அன்பை வீட்ல விட்டு விட முடியுமா! உனக்கு வெளியில வேலை இருக்கா..''

''இல்லை. அங்கிள்! நான் அழைச்சிட்டு போயிடறேன். வீணா எதுக்கு வெயில்ல போகணும்'' அனுசரணையாய் பேச,

''நான் ஆட்டோவில போயிடறேன். உங்களுக்கு எதுக்கு சிரமம்'' மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

''இதுல! என்ன சிரமம்மா!'' டாக்டர் பேசியவாறு மதுசூதனனைப் பார்க்க ''யெஸ் அங்கிள்! நான் ஒண்ணும்



தூக்கிக்கிட்டு நடக்கப் போறதில்லை. கார்ல வர்றதுக்கு என்ன?'' மெல்லிய புன்னகையை உதிர்த்தவாறு கேட்டான்.

மேலும், மேலும் மறுத்து சங்கடத்தை உண்டு பண்ண விரும்பாமல் டாக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தாள்.

கார் பக்கத்தில் தயங்கி நின்றவளை புரியாமல் ஏறிட்டான். ''என்ன ஆச்சு?''

''உங்க கூட வர்ற அளவுக்கு தகுதி இல்லை. எனக்கு. அப்புறம்..'' மேலே பேசுமுன் குறுக்கிட்டான்.

''ஷட்டப்..'' அவன் கத்தலில் அதிர்ந்து போனாள்.

''இப்ப, என்ன சொல்லிவிட்டாள். உண்மையைத்தானே சொன்னாள். ஏன்? இத்தனைக் கோபம். ப்ளீஸ்! எல்லாரும் பார்க்கிற மாதிரி நடந்துக்க வேணாம்னு நினைக்கிறேன்'' மெல்லிய குரலில் பேசியவாறு முன் கதவைத் திறந்து விட்டான்.

தயக்கமாய் ஏறிக் கொண்டாள்.

கார் வேகமாய் நகர்ந்தது. மனதில் ஏக்கமும், எண்ணங்களும் அலைபாய விழிகள் கசிய பெருமூச்சுடன் வேடிக்கை பார்க்கும் சாக்கில் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

என் தந்தை வேலைக்காரியை மணம் முடித்ததற்கே தள்ளி வைத்தவன், தன்னை எப்படி? மேலே யோசிக்க பெரிய ஜுவுளிக் கடையில் இல்லையில்லை கடலில் நிற்க, ஏன்? என்பது மாதிரி அவனைப் பார்த்தாள்.

''கொஞ்சம், சேலைகளும், சுடிதார் செட்டும் எடுத்துட்டு போலாம்'' என்றவாறு இறங்கினான்.

''ஓ. தங்கைக்கு துணி எடுக்க போறானா?'' எண்ணம் படர மௌனமாய் பின் தொடர்ந்தாள். கடையின் பிரம்மாண்டத்தையும், தேர்வு செய்யும் ஜனத்திரளையும் கூட ஓடி தொந்தரவு தரும் சில குழந்தைகளையும் ஆர்வமாய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க அவனே சில புடவைகளையும், விலையுயர்ந்த சுடிதார் செட் சிலவற்றையும் தேர்வு செய்தான்.

கடை முதலாளியிடம் பில்லை செட்டில் பண்ணியவாறு அவரிடம் சகஜமாய் பேசி சிரிக்க, விழிகள் விரிய அந்த சிரிப்பு தரும் அவன் முக அழகையும், கம்பீர தோற்றத்தையும் பார்த்து ரசிக்க போலாமா! அவன் குரல் அழைக்க, முகம் சிவக்க தலை குனிந்தவாறு தலையாட்டினாள்.

பொது இடத்தில் இப்படியா! அவனையே பார்த்துக் கொண்டு நின்று விட்டாள்? அவமானம் பிடுங்கித் தின்ன பாழாய்ப் போன மனசு கேட்க மாட்டுதே! தவித்து தடுமாறியவளின் நிலை கண்டவனாய், குறும்பு சிரிப்பு உதடுகளில் தவழ விழிகளில் பளிச்சிட காரில் ஏறினான், ஜவுளி பெட்டிகளை பின் சீட்டில் போட்டவாறு.

அதே சமயம் எரிக்கும் விழிகளால் அவர்களைப் பார்த்தாள், மஞ்சு. 'இந்தளவு ஆகிப் போச்சா?' மனசுக்குள் தீப்பற்றி எரிந்தது அவளுக்கு.






''உங்கம்மாவுக்கு உடம்பு பரவா யில்லையா! மல்லிகாம்மா சொன்னாங்க, உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லைனு.'' கேட்டவளைப் பார்த்தவாறு தலையாட்டினான்.

''இப்ப, பரவாயில்லை'' முணுமுணுத்தாள்.

ஏனோ மனதுக்கு இதம் தந்தது அவன் பேச்சு.

பேச எவ்வளவோ இருந்தும் மௌனத்தை உடைத்து அவமானப்பட அவள் தயாரா இல்லை. அவனுக்கோ இது சரியான நேரமாய் தோணவில்லை.

''என் மேல உனக்கு நம்பிகை இல்லையா?'' பட்டென கேட்ட வார்த்தை புரியாமல் எதிட்டாள்.

''இல்லை! டாக்டர் அங்கிள் கிட்ட வேலை கேட்ட விஷயத்தைச் சொல்றேன். நான் ஒண்ணும் நீங்க பேசியதை கேட்கலை'' இதமாய்ப் பேசினான்.

'இதுக்கு என்ன பதில் சொல்வது?' நினைத்தவாறு ''உங்களுக்கு எதுக்கு சிரமம்...'' தயங்கியவாறு சொல்ல, அவன் முகம் சுருங்கியது. மேலே எதுவும் பேசாமல் கார் ஓட்டறதில் கவனம் செலுத்துவது போல் பாவனை செய்தவாறு அழகாய் காரை ஓட்டினான்.

காரை விட்டு இறங்கி நடந்தவளை அழைத்தான் திரும்பி என்ன என்பது போல பார்த்தவளிடம், ஜவுளிகள் அடங்கிய பெட்டியை அவளிடம் நீட்டினான்.

''என்கிட்டே எதுக்கு? உங்க தங்கைக்குத்தானே...''

''அப்படினு நான் சொன்னேனா? உனக்காகத்தான்... ப்ளீஸ்... வாங்கிக்க - நான் அப்புறமா...'' மேலே அவனை பேச விடாமல் கேட்டாள்.

''உங்க தங்கை அடிச்சதுக்கு பரிகாரமா இதை...''

''ஸ்டாப் இட்!'' முகம் சுருக்க விழிகள் கோபத்தை வெளிப்படுத்த சில விநாடிகளில் அவன் முகமே மாறிப் போனது. ஆத்திரத்தின் உச்சியில்.

அவளுக்கே சற்று பயமாய் இருந்தது. அவன் நிலை கண்டு. அவசரப்பட்டு வார்த்தைகளை விட்டு விட்டாளோ என நினைக்கத் தோன்றியது. படபடத்தது நெஞ்சம்.

''இவ்வளவு கேவலமாக என்னை எடை போட்டிருக்கே...'' கேட்டவாறு ஜவுளி அடங்கிய துணி பெட்டிகளை காரின் பின் சீட்டில் விசிறி அடித்தவாறு வேகமாய் வீட்டுக்குள் நுழைந்தான். உள்ளம் அழ அதிர்ந்து நின்றாள்.

''அப்பா! நான் சொன்னதைக் கேட்டீங்களா! என்ன நடக்குது தெரியுமா?'' - ஆத்திரமாய் படபடத்த மஞ்சுவை நிதானமாய் ஏறிட்டார், விஸ்வநாத்.

''என்ன நடக்குது?'' கேட்டவரிடம் தான் பார்த்த விஷயத்தைக் கூற,

''அதுக்கா இந்த ஆர்ப்பாட்டம் பண்றே. பாவம்! அவ உன்னை விட சின்ன பொண்ணுதானே! நானும் கவனிச்சேன். நாலைஞ்சு செட் துணிகளையே மாத்தி மாத்தி கட்டறதை. உங்கம்மா வேலைக்காரங்களை கூட வேலைக்காரங்களா பார்க்க மாட்டா. சமமா வச்சுதான் பழகுவா. ஆனா! நீ மட்டும் ஏன் இப்படி நடந்துக்கிறே...''



பேசிக் கொண்டிருக்கும் போதே உள்ளே நுழைந்தான் மதுசூதனன்.

''என்ன என் பெயர் அடிபடுது?'' கேட்க,

''பாவம்பா! அந்த அன்புப் பொண்ணு. கிராமத்துல இருந்து வந்தவ. வெளியில எங்கியாவது அழைச்சிட்டுப் போகச் சொன்னேன், மஞ்சுவை. முடியாதுன்னு சொல்றா!'' பேச்சைத் திசை திருப்ப,

''சாயங்காலம், ஆபீசிலிருந்து வந்து அழைச்சிட்டுப் போறேம்பா!'' என்றவாறு அவரின் உடல்நிலை, ஆபீஸ் நிலவரம் பற்றி பேச, ஆத்திரமாய் அறையை விட்டு வெளியேறினாள் மஞ்சு.




மஞ்சுமா உன்னை அடிச்சிட்டாங்களாமே! ஏன்? என்கிட்டே சொல்லலை. பரிவும் வேதனையுமாய் கேட்ட தாயைப் பார்க்கையில் நெகிழ்வில் விழிகள் கசிய ''இல்லம்மா! அவங்க மேல காபியை ஊத்திட்டேன். கை தவறி... அதான்! பரவாயில்லம்மா! எனக்கு ஒரு அக்கா இருந்து அடிச்சா நான் கோபப்படுவேனா?'' தாயை சமாதானப்படுத்தும் விதமாய் பேசினாள், அன்பு.

''இருந்தாலும் மஞ்சம்மா வர வர பேசறதும், நடந்துக்கிறதும் எனக்கு என்னவோ பயமா இருக்குமா! நாம வேற எங்கியாவது வேலை தேடிக்கலாம். ரொம்ப வலிக்குதாடா!''

தாய் பாசத்தை வெளிக்காட்டியவளாய் மகளை அணைத்து கேட்க.

"ப்ச் அதெல்லாம் அப்பவே ஓடிப் போச்சு. ஆனாலும் ஒரு விஷயம் உங்க ஆசைப்படி இன்னும் ஒரு வாரம் கழிச்சு நாம வேற வீட்டுக்கு வாடகை போறோம். வேலையும் வேறதான். டாக்டர் அங்கிள் ஆஸ்பிடல்ல." மகளின் பேச்சில் ஓரளவு சமாதானம் பரவியது. ஆனாலும் மகளை அடித்தது, மனம் வலிக்கச் செய்தது. கண்ணீர் பெருகி விழிகளை மகள் அறியாமல் முந்தானையால் துடைத்துக் கொண்டாள். நல்ல மனுஷன் கிட்டே தன் மகள் வாழ்வு சிறப்பாய் அமையனும் என எப்போதும் போல நினைத்தவாறு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

சேலை பழசாய் இருந்தாலும் அவள் கட்டியதில் அவள் அழகு சேலைக்கும் வந்ததோ என நினைக்கத் தோன்றியது, மதுவுக்கு. கழுத்திலும், காதிலும் சிறு நகைகள் அவள் அழகை அதிகமாக்கியதோ! இல்லை? அவளால் அந்த நகைகள் பேறு பெற்றதோ! நினைக்க நினைக்க வியப்பில் ஆழ்ந்தான் மதுசூதனன். அவன் பார்த்தவரையில் பெண்கள் எல்லோரும் ரோஸ் பவுடரும், உதட்டுச் சாயமும், தூக்கி அடிக்கும் மேக்கப்போடு அங்கம் தெரிய உடுத்தியிருக்கும் துணிமணிகளோடுதான் பார்த்திருந்தான். ஆனால்! பாவாடை தாவணியில் மஞ்சள் குளித்த முகமும், அமைதியான தோற்றமும் அவனை நிரம்பவே கவர்ந்தாள், அன்பு. அவளைப் பற்றி நினைக்க நினைக்க இனம் புரியாத சந்தோஷம் அவன் நாடி நரம்பெங்கும் ஓடியது.

தன் தந்தையைக் கவனித்துக் கொள்வதில் அன்பும், கருணையும், பணத்துக்காக மானத்தை இழக்க விரும்பாத



குணம் அவளுடைய முதலாளி எங்கிருந்தாலும் தப்பாய் அவன் தொட்டதை எதிர்த்து அடித்தது. அவனையும் அறியாமல் கன்னத்தை தடவியது அவன் கைவிரல்.

ஆனால்! மஞ்சு அவனை அறைந்த போதுதான், அன்பு மீது இருந்த காதலை உணர்ந்தான். அன்று முழுதும் தூக்கம் வராமல் தவித்தான். தன்னை அடித்தது போன்ற வலியில் துடித்தான். தன் மார்பில பொத்தி அணைத்து ஆறுதல் சொல்ல மனம் நாடியது. தன் காதலை எப்படி சொல்வது? ஏற்றுக் கொள்வாளோ, தன் மீது தப்பான அபிப்ராயம் வைத்துக் கொண்டிருக்கிறாளோ, நினைப்பே இம்சையாய் சண்டித்தனம் பண்ணியது. அப்படி அவள் மறுத்து விட்டால் மேலே நினைக்க பிடிக்கவில்லை. சந்தோஷமும், வருத்தமும் கலந்த உணர்வு அவனை ஆட்டிப் படைத்தது. இனியும் இந்த தவிப்புடன் இருக்க முடியாது. எப்படியாவது தன் காதலை தெரிவிக்கணும் என்றுதான் நினைத்தான். மனதில் சட்டென தோன்றியதால் தான் அழகாய் அவளுக்காகத் துணிமணிகளை தேர்வு செய்து அவள் எதிர்பார்க்காமல் அவளிடம் கொடுத்தான். ஆனால்! இப்படி நினைப்பாள் என கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை, அவன்.

பிடிவாதமாய் வேறு வேலை தேடிக் கொண்டு போகும்முன் தன் காதலைச் சொல்லி இந்த வீட்டிலே மகாராணி போல வைத்துக் கொள்ளணும் என்ற ஆசை அலை பாய்ந்தது.




''அன்பு! சீக்கிரம் கிளம்பு. வெளியில போகணும். நான் குளிச்சிட்டு வந்துர்றேன'' ஆபீசிலிருந்து வந்த உடனே அவளிடம் சொல்லியவாறு மாடி ஏறிய, மதுசூதனனை ''ஒரு நிமிஷம்'' என்றாள்.

'இது என்ன? பொண்டாட்டியிடம் சொல்வது போல் அதிகாரமாய் கூறினால் அடி பணியணுமா?' நினைத்தவாறு, ''எனக்கு வேலை இருக்கு சமையலறையில்'' முணு முணுத்தவாறு சிறு கோபம் தொனிக்க ஏறிட்டாள்.

''நீ மட்டும் இங்கே வேலை செய்யலை. மல்லிகம்மா, எல்லாத்தையும் பார்த்துக்குவாங்க, நான் கூப்பிட்டதும் ஒரு வேலைக்காகத்தான்'' சொல்லி விட்டு வேகமாய் சென்றுவிட அப்படியே நின்றிருந்தாள்.

எளிமையான தோற்றத்தில் இயல்பாய் இருந்தவளின் பாங்கு மிகவும் அழகாக இருக்க,

அவன் கூட வெளியே செல்லும் சந்தோஷம் இருந்தாலும், சந்தோஷப்பட முடியாமல் குழம்பிப் போனவளை கிஷோரின் குரல் அழைத்தது.

''ஹலோ அன்பு! என்ன பண்றே! வர வர உன் அழகு கூடிட்டேப் போகுது! சினிமா பட வேளையில அடிக்கடி வர முடியல. சீக்கிரம் கிளம்பு'' என்றவனைக் கோபமாகப் பார்த்தாள்.

'என்ன நினைச்சிட்டு இருக்காங்க என்னைப் பற்றி எல்லோரும்'. எரிச்சலை அடக்கியவாறு 'எங்கே?' கேட்டாள்.



''என்ன இப்படிக் கேட்டுட்டே! உன்னோட ரேஞ்சே மாறப் போகுது. புகழ், பணம், அந்தஸ்து, வழிய பேசியவாறு அந்தப் பெட்டியை நீட்டினான்.

''என்ன அது?''

''இது மாடர்ன் டிரஸ். இதைப் போட்டுக்கோ, சேலை, பாவாடை, தாவணி எல்லாம் சரிவராது'' பேசியவனை குறுக்கிட்டாள், கோபத்துடன்.

''ப்ளீஸ்! நான்தான் இதுலே இஷ்டமில்லைனு சொன்னேனே.. பிறகு ஏன் என்னைக் கட்டாயப்படுத்தறீங்க'' மனம் வலிக்க நைந்த குரலில் பேசியவனை புன்னகை வழியே பார்த்தான்.

''இந்த வாய்ப்பு கிடைக்காதானு்னு ஏங்கறவங்க எத்தனையோ பேர். ஆனா! என் கூட பட வேலையில் ஈடுபட்டிருந்தவங்களுக்கு உன்னை அறிமுகப்படுத்தனும். நல்ல வாய்ப்பு அன்பு!'' என்றவாறு அவளைத் தொட வருவது போல நீண்டது அவனது கைகள். மெல்ல பின்னோக்கி அன்பு நகர. இந்தக் காட்சியைக் கண்ட மஞ்சு கொதித்துப் போனாள்.

ஆத்திரமாய் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தாள்.

''அடிப்பாவி! மாயக்காரி என் அண்ணனை வளைச்சு போட்டது பத்தலையா! இவரையும் வளைச்சுப் போட்டுட்டியா, மூதேவி பிடிச்சவளே!'' கணவன் பக்கம் திரும்பியவள், ''ஓகோ! துணி எல்லாம் வாங்கித் தர்ற அளவுக்கு ஆகிப் போச்சா. ஏண்டி! அண்ணன் வாங்கிக் கொடுத்தது

பத்தலையா! இந்த அழகை காட்டி ஆண்கள் எல்லோரையும் வளைச்சுப் போட்டு பணம் சம்பாதிக்க... ஆசைப் படறியே..''

''ஷட்டப் மஞ்சு!'' வெளிவந்த மதுசூதனன் ஆவேசமாய்க் கத்தினான்.

''உன் மனசுல என்ன நினைச்சுட்டு இருக்கே'' ஆத்திரமாய் பேச, விழிகள் அருவியாய் கொட்ட அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல் சிலையானாள், அன்பு.

''அண்ணா! இவ செஞ்ச காரியத்தைப் பார்த்தீங்களா?'' கண்ணீர் வராத கண்ணைக் கசக்கியவாறு புலம்பினாள்.

''வெளியே போடி! உங்கம்மாவையும் கூட்டிட்டு? உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ற உன்னை எல்லாம் ஒரு நிமிஷம் கூட வீட்ல வைக்கக் கூடாது'' அன்புவைப் பிடித்துத் தள்ள முயற்சிக்க,

''ஸ்டாப் இட் மஞ்சு!'' அதட்டினான் மதுசூதனன்.

சைமனின் உதவியோடு நடைப் பழகிக் கொண்டிருந்த விஸ்வநாதனுக்கு நடக்கும் விஷயம் புரியவில்லை. என்றாலும் அன்புவின் அழுகை தோற்றம் கோபத்தை வரவழைத்தது.

''அன்பு நில்லு!'' மதுசூதனன் அழைக்க காதில் வாங்காமல் அழுகையோடு ஓடியவளைத் தடுத்து நிறுத்தியது.





18

பக்கத்து வீட்டில் வசிக்கும் நல்லமுத்துவின் குரல் ''அன்புக்கா! மார்க்கெட் போயிட்டு வர்ற வழியில உங்கம்மாவை வேன் மோதிடுச்சு. ஆஸ்பிட்டலில் சேர்த்துட்டு போன் பண்ண நம்பர் தெரியலை. அதான்.. நேர்ல...'' மேலே பேசமுன் அழுகையோடு குறுக்கிட்டாள்.

''எந்த ஆஸ்பிட்டல்?'' கேட்டவாறு வெளியே ஓடியவளைப் பின் தொடர்ந்தான், மதுசூதனன்.

''கார்ல ஏறு அன்பு. யோசிக்க நேரமில்லை. ப்ளீஸ்..'' ஆழ்ந்த குரலில் சொல்லியவனுக்குப் பதில் கூறாமல் ஏறிக் கொண்டாள். அழுது வழியும் கண்களோடு. நடந்ததை உணர முடியாத பிரமை நிலையில் அவள் அவளுக்கும் இருக்கும் ஒரே ஆதரவு தாய் தானே! கடவுளே! அம்மாவுக்கு ஏதும் ஆகிவிடக் கூடாது. மனம் பிரார்த்தித்துக் கொண்டது. அழுதழுது கண்ணீர் வற்றிப் போனது.

''அழாதே அன்பு. பயப்படற மாதிரி எதுவும் நடக்காது'' அவன் ஆறுதலைக் கேட்கும் நிலையில் அவள் இல்லை.

''தலையில் பலத்த அடி பட்டிருக்கு. உடனே ஆபரேஷன் பண்ணனும். ரத்தம் நிறைய போயிடுச்சு. ஏபி நெகட்டிவ் ஆஸ்பிட்டலில் இல்லை. வேற இடத்தில் கேட்கணும்.''

டாக்டர் பேச, பேச, ''உடனே ஆபரேஷன் பண்ணுங்க டாக்டர். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. என் ரத்தமும் அதே குரூப்தான் டாக்டர். நான் தர்றேன்..''

''அப்படியா! உள்ளே வாங்க!'' டாக்டர் பின் தொடர்ந்தான் மதுசூதனன்.

ஆனால் எதற்கும் பலன் அளிக்காமல் மகனை தன்னந்தனியாக விட்டுட்டு இறைவனடியைச் சேர்ந்து விட்டாள் தாயம்மா.

கூட இருந்து கடைசி காரியங்கள் எல்லாவற்றையும் அவனே கவனித்துக் கொண்டது மட்டுமில்லாமல், தாயம்மாவின் உடலுக்கு அவனே கொள்ளி வைத்தான். சாவில் மூன்றாம் மனுஷியாய் நின்ற மஞ்சு, அதன் பிறகு அந்த வீட்டை எட்டிப் பார்க்கவில்லை. கிஷோர் அவளிடம் சொல்லியிருந்தான். அன்புவை கதாநாயகியாக ஆக்குவது, அதற்காகத்தான் துணி வாங்கிக் கொடுக்க முயன்றது. அதை அவள் தப்பாய்ப் புரிந்து கொண்டது. என சொன்னாலும் மனம் பொறாமையில் வெந்தது. தன் கணவன் கூட அவள் அழகை புகழ்ந்துக் கூறுவதைக் கண்டு.

விஷயத்தைக் கேள்விப்பட்ட தாரிணி அன்று வீட்டுக்கு வந்திருந்தாள்.

'என்னவோ தன் தந்தை இறந்தது போல் இவ்வளவு சோகம் ஏன்? மதுவுக்கு வேலைக்காரி அம்மாவுக்கு இவர் ஏன் கொள்ளி வைக்கனும்' நினைத்தவாறு ''மது நீங்க ஏன்! எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கீங்க, அவ வேலைக்காரி...''

''ஷட்டப் தாரிணி!'' வேகமாய் சொல்ல, முகம் சிவந்தாள். அவமானமாய் உணர்ந்தாள்.



''நான் அன்பை விரும்பறேன், அவளைத்தான் கல்யாணம் செய்துக்கப் போறேன்'' அமைதியாய் மதுசூதனன் சொல்ல,

''வாட்'' அதிர்ந்தாள். தடதடத்த நெஞ்சத்தை அமைதிப் படுத்த முயன்றவாறு, ''அவ வீட்டு வேலைக்காரி, உங்க வசதி, அந்தஸ்து, படிப்பு, இதுக்கெல்லாம் அவ தகுதி யானவ இல்லை. ப்ளீஸ் மது நல்லா யோசிச்சு பாருங்க'' நயந்துபேசினாள்.

''நீ சொன்ன, படிப்பு, அந்தஸ்து வசதி இதெல்லாம் இல்லாம இருக்கலாம். ஆனா! அதையெல்லாம் விட பண்பு, அடக்கம், அமைதி, பொறுமை, இருக்கிறவங்க இல்லாதவங்கன்னு பார்க்காம எல்லார்க்கிட்டேயும் ஒரே அன்பு காட்டற பண்பு இதெல்லாம் நிறையவே இருக்கு. அதுவே போதும்னு நான் நினைக்கிறேன். இனி அன்பைப் பத்தி யார் என்ன சொன்னாலும் நான் சும்மா இருக்க மாட்டேன்'' அழுத்தமாய் கூறியவாறு ''எனக்கு நிறைய வேலை இருக்கு'' என்றவாறு அவளைப் போகாமல் போகச் சொல்ல, உடம்பெல்லாம் எரிய மனசு பூரா குரோதம் பொங்கி வழிந்தது. ஆனாலும் அவன் விருப்பம் இல்லாத அவள் காதல் செல்லா காசுதானே.

''நீங்க வாழப் போற வாழ்க்கை நல்லாவே இருக்காது'' மனம் எரிய சாபம் விட்டு புகைய, ''அதே சமயம் உன்னை விட எல்லாத்திலும் சிறந்தவளா எனக்குனு ஒருத்தன் வருவான்'' என்ற ரீதியில் வேகமாய் வெளியேற, எதிரே வந்த அன்பை அவள் பார்த்த பார்வைக்கு தீப்பற்றும் சக்தியிருந்தால் நிச்சயம் அன்பு எரிந்து சாம்பலாய்ப் போயிருப்பாள்.

என் இத்தனை கோபம் என்ன நடந்தது அன்புக்கு புரியவில்லை ஒன்றும். அதே சமயம் உடலும், மனமும் ஓய்ந்து போயிருந்தது. கண்களின் கீழ் கருவளையம் விழுந்து பார்க்கவே பரிதாபமாக இருந்தாள்.

"நடந்ததை நினைச்சு நினைச்சு வருத்தப்படாதே! நாங்க எல்லாம் உனக்கு இருக்கோம். இந்த பாலையாவது குடி." மல்லிகாவிடம் இருந்து பால் டம்ளரை வாங்கி நீட்டினார் விஸ்வநாதன்.

"எனக்குப் பிடிக்கலை..." தயக்கமாய் கூறியவளை, "மாமான்னு சொல்லு, ஒண்ணும் தப்பில்லை..." மெதுவாய் புன்னகைத்தவாறு, "நீ சாப்பிடலைனா நான் மதுவை வரச் சொல்றேன்" என்றவாறு மகனை அழைக்க திரும்ப, "கொடுங்க" என வாங்கிக் கொண்டாள்.

குழந்தைக்கு சாப்பாடு ஊட்டுவதைப் போல சிரிப்பும், கதையும் கூறி கொஞ்சலாகப் பேசி சாப்பிட வைத்து விடுவான், இந்த இரண்டு தினமாய் அவள் நிலையை உணர்ந்து. ஆனால்! எத்தனை நாளைக்கு இப்படி இங்கேயே இருக்க முடியும். அப்பாவுக்கும் பிள்ளைக்கும் பாசம், பரிவு, நட்பு, சிநேகம் எல்லாம் கலந்த உறவாய் மீண்டும் இணைந்து விட்டனர். அவளிடம் மதுவும் அவள் தந்தையும் காட்டும் பரிவு பிடிக்காமல் மஞ்சு கோவித்துக் கொண்டு போய்விட்டாள். தன் மீது இருக்கும் தப்பான அபிப்பிராயம் போகப் போவதில்லை அவளுக்கு. அதுமட்டும் இல்லாமல் இங்கே தொடர்ந்து இருப்பதை அவள் விரும்ப மாட்டாள். அவளுக்கு மட்டும் இங்கே இருக்க என்ன இடம் இருக்கிறது. மதுசூதனன் செய்த உதவிகளுக்கு நன்றி என ஒரே வார்த்தையில் கூற



முடியாது. உதவிக்கும் அப்பாற்பட்ட விஷயம் அல்லவா ரத்தம் கொடுத்தது. தாயின் உடலுக்கு கொள்ளி வைத்தது. உறவுகள் மட்டும் செய்யும் காரியம் அல்லவா நினைக்க, நினைக்க வலியில் மனமே ரணமாய் மாறிப் போனது. இனி இந்த பட்டணத்தில் இருந்து சாதிக்கப் போவது என்ன? அதுவும் இந்த வீட்டில் இருந்தால் அஸ்திவாரமே இல்லாத காதலுக்காக கண்ணீர் விட்டே கரைந்து விடுவாள்! அதுமட்டும் இல்லாமல் மஞ்சுக்கும் மதுவுக்கும் இருந்த சிறு இடைவெளி இப்போது இவளால் அதிகமாகி விட்டது. பிஸினஸ் பண்ணுவதாக இருந்தால் பணம் கொடுப்ப தாகவும், சினிமா படம் எடுப்பது, அது சம்பந்தமாய் எதாவது செய்வதாக இருந்தால் பணம் தர முடியாது, என கண்டிப்பாய் மது கூறியதாக பேச்சுவாக்கில் விஸ்வநாதன் கூறியிருந்தது வேறு அவளால்தானோ என நினைக்க வைத்தது மட்டு மல்லாமல் வருத்தத்தையும் தந்தது. இதற்கெல்லாம் ஒரே முடிவு, அவள் இங்கிருந்து செல்வதுதான். ஆனால்! யாரைத் தெரியும். இந்த ஊரில் எங்கு போவது? யோசித்து அந்த முடிவை எடுத்தாள்.




போன் அலற எடுத்தாள் மஞ்சு. எதிர்முனையில் அவள் தங்கை அஞ்சு பேசினாள். முதலில் தங்கையின் நலம் பற்றி விசாரித்து விட்டு, வீட்டில் நடந்த விஷயங்களைக் கூறி புலம்பத் தொடங்கிய அக்காவைக் குறுக்கிட்டு நிறுத்தினாள்.

''அஞ்சு, எனக்கு எல்லாம் தெரியும்'' என்றவாறு பேச்சை நிறுத்த.

''ஏய்! உனக்கு எப்படி?'' ஆச்சரியமாய் கேட்டாள்.

''இரண்டு தடவை அண்ணன் என்னை வந்து பார்த்துட்டு படிப்பைப் பத்தி, என்னோட நலம் பத்தி விசாரிச்சுட்டு, என் கூட காலையிலிருந்து பொழுது வரைக்கும் இருந்துட்டு போனார். எவ்வளவு ஜாலியான டைப் தெரியுமா? அண்ணன். அவர் விரும்பற பெண்ணை சேர்த்து வைக்காம... பட்! இதெல்லாம் அண்ணா சொல்லலை. டாக்டர் அங்கிள் சொன்னார்.''

''அவ வேலைக்காரிடி. நம்ம அந்தஸ்து, கௌரவம்...''

''ஓகோ! நம்ம அம்மா 'சீமான் வீட்டுப் பெண்ணா... அவங்களும் வேலைக்காரியா இருந்தவங்கதான். அப்பா, நம்ம அம்மாவைத் தாலி கட்டாம வப்பாட்டியா கூட வச்சிருக்கலாம். ஆனா! தாலி கட்டி மனைவியா ஏத்துக்கிட்டது அவரோட நல்ல குணத்தைக் காட்டுது. அது மட்டுமா. நமக்கு என்ன குறை வச்சார். நீ விரும்பின கிஷோரை மணம் முடிச்சு வச்சார். கேப்பட்ட சொத்துக்களை சீதனமாத் தந்து. ஆனா! உன் புருஷன் சரியில்லாததால் எல்லாத்தையுமு அழிச்சிட்டே நிற்கிறார்.

நம்ம சொத்து, சுகம், சொந்தம் இதெல்லாம் வேணாம்னு பெத்த அப்பாவை ஒதுக்கி வச்சிட்டு போன மது அண்ணாவை திரும்ப கொண்டு வந்து சேர்த்தது, அவர் அப்பா மேல வச்ச பாசம். ஆனா! நீயே.. உன்னை அக்கான்னு சொல்லவே எனக்கு பிடிக்கலை. நீ என்ன செய்திருக்க...



அப்பாவுக்கும் அண்ணாவுக்கும்... யோசிச்சுப் பாரு...''
தங்கை பேச, பேச பேச்சிழந்து போனாள் மஞ்சு.

நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள் மஞ்சு தங்கை சொன்ன விஷயம் ஒவ்வொன்றும் அவளை யோசிக்க வைத்தது. எனக்கு கீழே பிறந்தவள் எனக்கு புத்தி சொல்கிறாள். அஞ்சு சொன்னது எதுவும் தப்பில்லையே! அப்பாவுக்கு பிறகு அவர்களுக்கு இருக்கும் ஒரே சொந்தம் அவள்தானே! நானே அஞ்சுவை பற்றிபோனில் பேசிதான் தெரிந்து கொள்கிறேன். ஆனால்! நேரில் சென்று தங்கையைப் பார்த்து, பேசி, அவளுடன் உணவருந்தி, அவளுக்குப் பரிசு பொருட்கள் வாங்கிக் கொடுத்து இருக்கிறான். ஆனால்! நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன்? தந்தை மட்டும் தன் தாயை இரண்டாம் தாரமாய் மண முடிக்கவில்லை என்றால், அவள் வாழ்வும் வேலைக்காரியாக தானே! மேலே நினைக்க நினைக்க அவளுக்கே அவளைப் பிடிக்கவில்லை. தப்பை உணர்ந்தவளாய் எழுந்தாள். முதலில் அண்ணனிடம் மன்னிப்புக் கேட்கணும். அன்புக்கிட்டேயும் கூட

நான்கே நாட்களில் நிறைய மாறியிருந்தாள் அன்பு. ஏற்கனவே மெலிந்த தேகம் மேலும் மெலிய தூசு படிந்த ஓவியமாய் முகம் மாறியிருக்க கண்களில் ஒளி இழந்திருக்க மனம் மரத்துப் போயிருந்தது.

வீட்டை விட்டு வெளியேற விஸ்வநாதனோ, மதுசூதனனோ நிச்சயம் சம்மதிக்க மாட்டார்கள். அதனால்தான் கடிதமாய் எழுதி விட்டு கிளம்பியிருந்தாள். வேறு போக்கிடம் எதுவும் தெரியாததால் அவள் பிறந்த ஊரை விட்டு வளர்ந்த ஊருக்கே திரும்பி விட்டாள். கூட இருந்த

தாத்தாவின் நினைவும் தாயின் பிரிவும் அவளை வாட்டி எடுத்தது. வேதனையின் வெப்பத்தில் வெந்தவளுக்கு மதுசூதனனின் முகமும், நினைவும் குளிர்ந்த சாரலை அள்ளி தெளித்து ஆறுதல் அளித்தது. அவள் திரும்பியதை தெரிந்து விஷயத்தை கேட்டு வருத்தப்பட்டாள், பண்ணையாரின் மனைவி வள்ளி. தன் வீட்டிலேயே இருத்திக் கொண்டாள். மனம் இரங்கி, வீட்டு வேலைகளையும், மற்றபடி வீட்டில் இருந்த ஆடு, மாடுகளையும் கவனித்துக் கொண்டாள், அன்பு.

''அன்பு! உன்னைப் பார்க்க பட்டணத்திலிருந்து வந்திருக்காங்க. சீக்கிரம் வா'' பண்ணையார் மனைவி அழைக்க, ''யாரு!'' என்றவாறு தண்ணீர் பிடித்து ஊற்றிக் கொண்டிருந்ததால் தூக்கிச் செருகிய பாவாடையை இறக்கியவாறு முன்னறைக்கு வந்தவள் அங்கிருந்தவர்களைக் கண்டதும் அதிர்ந்துபோனாள். சற்றும் எதிர்பார்க்கவில்லை, அவர்களை. மதுசூதனன், அவன் தந்தையும், கூட மஞ்சு மூவரும் அமர்ந்திருந்ததைக் கண்டு.

அந்த நிலையில் அன்பைக் கண்ட மதுவின் நெஞ்சம் பதறியது. எண்ணக் குமுறல்கள் வெளிக்காட்டாமல் அமர்ந்திருந்தான். முகத்தில் அமைதியைக் காட்டி. மஞ்சு எழுந்து அன்புவின் அருகில் வந்தாள்.

''என்னை மன்னிச்சுடு அன்பு. எவ்வளவோ தப்பு பண்ணிட்டேன். உன் விஷயத்தில் ப்ளீஸ்! விழிகள் கசிய நெகிழ்ந்து பேசியவளைக் கண்டதும் அன்புக்கும் மனம் நெகிழ 'சே சே நீங்க என்ன தப்பு செய்தீங்க' அவளைத் தாங்கி பேச கட்டிக் கொண்டாள், மஞ்சு.



''அன்புக்கு நல்ல வாழ்க்கை அமையுதுன்னா, அதைக் கேட்டு சந்தோஷப்படற முதல் ஆள் நானும் எங்க வீட்டுக்காரரும்தான்'' உண்மையான மகிழ்ச்சி பூக்க அனைவருக்கும் டீ கொடுத்தவாறு பண்ணையாரின் மனைவி பேசினாள்.

என்ன சொல்றாங்க? ஒன்னுமே புரியவில்லை அன்புக்கு. என்ன பேசுவது என புரியாமல், நகர்ந்தவளைப் பின் தொடர்ந்தான், மதுசூதனன்.

''நீ இத்தனை அவசரக்காரியா இருப்பேன்னு நினைக்கவில்லை'' அடி குரலில் சீறியவனை எதிட்டாள், மௌனமாய்.

''ஒன்னும் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம். கிளம்பு'' அழுத்தமாய் பேசியவனிடம் ''எங்கே?'' எனக் கேட்டாள்.

''விளையாடறியா! இல்லை, நானே சொல்லணும்னு எதிர்பார்க்கிறியா, பரவாயில்லை, நானே சொல்றேன். உன்னை நேசிக்கிறேன், கல்யாணமும் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்'' வார்த்தைகள் கோபமாய் வெளிவர, ''அதுக்கு நான் தகுதி ஆனவ கிடையாது. எந்த விதத்துலயும் உங்களுக்கு சமமானவள் நான் இல்லை'' உள்ளுக்குள் பூவும், மொட்டும் மலர்ந்ததை வெளிக் காட்டாமல் பேச முயற்சித்தாள்.

தன் தாய்க்கு ரத்தம் கொடுத்து, மகனாய் கொள்ளி வைத்தவன், தன் மனம் விரும்பும் காதலன். ஆனால்! மேலே நினைக்க முடியாமல் விழிகள் கசிய முகத்தை திருப்பிக் கொண்டாள். அவள் எதிரே வந்தவன் ஒரு

கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான். அழுகையை அடக்க முயற்சி செய்தவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

உடலும் மனமும் நெகிழ மெல்ல விலக முயற்சித்தவளை விடவில்லை, அவன்.

''நீ கஷ்டப்பட்டு உன் காதலை மறைக்க முயற்சி செய்யாதே! நீயும் என்னை விரும்பறதை இந்த அழகிய விழிகள் எத்தனையோ தடவை காட்டி கொடுத்திடுச்சு. ஆனா! எத்தனையோ தடவை உன்னை அவமானப்படுத்தி, திட்டியிருக்கேன். அதுக்குக் காரணம் அப்பா செய்துகிட்ட இரண்டாம் திருமணம். எங்கம்மாவுக்கு செய்த துரோகமா நினைச்சேன். அந்த கோபம் வேலைக்காரங்க மேல காட்டி என்னோட கோபத்தைக் குறைக்க நினைச்சிட்டேன். அதுவும் மஞ்சு உன்னை அடிச்சப்ப எப்படி துடிச்சுப் போனேன் தெரியுமா? அன்னிக்குத்தான் முழுசா உன் மேலே எனக்கிருந்த காதலை புரிஞ்சுக்கிட்டேன். ஆனா! மஞ்சு தங்கையிருந்தால் என்னால ஒண்ணும் செய்ய முடியலை. இதுவே வேற யாராவது உன் மேலே கை வைத்திருந்தால் கதையே மாறி போயிருக்கும்'' காதலும், கனிவுமாய் பேச பேச அவனை மறுக்கும் பிடிவாதத்தை தாங்கி பிடிக்க முடியவில்லை அவளால்.

''உன்கிட்டே சொல்லணும்னு முயற்சி செய்தப்பதான் அத்தைக்கு விபத்து நடந்து..'' மெதுவாய் நிறுத்தினான், பேச்சை.

தன் தாயை உறவாய் நினைத்து உரிமையாய் பேச நெகிழ்ந்தாள். தேகமெங்கும் மெல்லிய உணர்வு



வழிந்தோடியது. மனம் முழுதும் மல்லிகையாய் வாசம் பரப்ப இதமாய் நெகிழ்ந்தாள்.

''மனசொடிஞ்சிருக்கிற சமயத்தில் இதைப் பத்தி பேச வேணாம்னு நினைச்சு என்னை அடக்கிட்டேன். ஆனா! அதுக்குள்ளே கடிதம் எழுதி வச்சிட்டு... எங்கே போனேன்னு தெரியாம நான் தவிச்ச தவிப்பை வார்த்தையால சொல்ல முடியாது. அப்பா கூட நான் உன் மேல வச்ச காதலை புரிஞ்சுக்கிட்டு, உன்னை அழைச்சிட்டு வரணும்னு தவிச்சார். ஆனா! நீ வலியும், வேதனையுமாய் பேச பேச மனம் கனத்தது அவளுக்கு.

தயக்கமாய், ''ஆனா, நான் அதிகம் படிக்காதவ, மத்த எல்லா விதத்திலும் உங்களுக்கு பொருத்தமா இருக்க தகுதி இல்லாதவ..''

''ஷட்டப்...'' கோபத்துடன் முகம் சிவக்க அவளை விலக்கி வேகமாய் நடக்கத் துவங்க, உயிரே விலகியது போல துடிக்க சட்டென அவளையும் அறியாமல் ''நானும் உங்களை விரும்பறேன்... மது!'' அழுகையோடு அவள் குரல் செவியைத் தொட அப்படியே அசையாமல் நின்றான்.

ஓடிப்போய் அவனைக் கட்டிக் கொள்ள, ஒரு நொடி கருதியவள் மறுகணம் இறுக்கி அணைத்துக் கொண்டான். மெல்ல முகம் நிமிர்த்தி அவள் ரோஜா இதழில் உதட்டை பதித்தான், அழுத்தமாய். மெழுகாய் கரைந்து அவனுள் காதலை பதிவு செய்தாள். தன் காதலை உணர்த்தும் வண்ணம் அவன் கன்னத்தில் இதழ் பதித்து சிவந்த முகத்தை அவன் பரந்த மார்பில் மறைத்துக் கொண்டாள்.

மென்மையில் அவன் மனம் கனிந்தது. அவள் மலரினும் மென்மையானவள். இவளை கண்ணின் மணி போல காப்பேன். தன் தாயின் நினைவு மீது முடிவு செய்தவனாய் தன் உயிரில் சேர்த்தணைத்தான்.

'ம்க்கும்' கனைக்கும் குரல் கேட்டு சட்டென முகம் சிவந்தவாறு பதறி விலகினாள். அசடு வழியும் முகத்தை திருப்பிக் கொண்டான் அவன். சற்று தள்ளி விஸ்வநாதனும், மஞ்சுவும்.

அனைவரும் உள்ளே நுழைந்தனர்.

"இதைப் போட்டு கூட்டிட்டு வாடா என் மருமகளை!" வைர மோதிரத்தை விஸ்வநாதன் நீட்ட, இந்த மோதிரத் திற்காகத்தானே மஞ்சு அன்று, பழைய நினைவில் தேகம் சற்றே மிரள, "ப்ளீஸ் அண்ணி! பழசை மறந்துடுங்க" அவள் மனதைப் படித்தவளாய் உறவாய் மனம் திறந்து மஞ்சு கூற புன்னகையோடு நிமிர்ந்தாள். மனம் தெளிந்த நீராய்.

அனைவரின் மத்தியிலும் அந்த மோதிரத்தை திருமண அச்சாரமாய் அன்புவின் அழகான விரலில் அணிவித்தான், மதுசூதனன், மனம் மகிழ.

"விரைவில் திருமணப் பத்திரிகையோடு வரேன்." மது கூற பண்ணையாரிடமும், அவர் மனைவியிடமும் விடைபெற்றுக் கொண்டனர் அனைவரும்.

பண்ணையாரின் மனைவி பூ, பழம், புடவை அன்புக்கு பரிசளித்து அனுப்பினாள். வாழ்த்துக்களோடு மஞ்சும் விஸ்வநாதனும் பின்சீட்டில் ஏறிக் கொள்ள, முன்னாடி கார் ஓட்டிய மதுவின் அருகில் அன்பு.



அன்புவின் கையை எடுத்து தன் கையில் பதித்து கொண்டவன் ஏக்கமாய் பெருமூச்சு விட, "என்ன?" என விழிகளாலே கேட்டாள் அன்பு.

"வருங்கால மனைவிகிட்ட கொஞ்சி பேச முடிய லையே!" குறும்புத்தனம் ஒலிக்க புன்னகையோடு பேச,

"நீங்க பேசறதை கொஞ்சறதை நாங்க பார்க்கலை, நாங்க கண்ணையும், காதையும் மூடிக்கிறோம்" சிரிப்பாய் மஞ்சும், விஸ்வநாதனும் கூற,

அசடு வழிந்த மதுவின் தோளில் சிவந்த முகத்தை மறைத்துக் கொண்டாள் அன்பு. கிராமத்துத் தென்றல் காற்றும், மெல்லிய சாரலும் அவர்களை வழியனுப்பி வாழ்த்த கார் விரைந்தது.



# உள்ளம் நிறைந்த உதிராத பூ...



1

இன்னும் நம்ப முடியவில்லை, தன் கழுத்தில் புதிதாய் கட்டப்பட்டிருக்கும் மறுதாலியை கைகளால் தடவுகிறாள், இசையா. கோவிலில் வீற்றிருக்கும் முகாம்பிகை அம்மனை பார்த்தவாறு விழி மூடி திறந்தாள். கும்பிட்டவாறு அம்மனின் பார்வை அர்த்தத்துடன் பார்ப்பது போன்ற பிரமை அவளுள். சற்றே ஓரக் கண்ணால் தாலி கட்டிய கணவனைப் பார்த்தாள். அழகான ஆண்மை ததும்பும் அவன் முகத்தில் மருந்துக்குக் கூட சிரிப்பு இல்லை. கோபத்தையும், எரிச்சலையும் அடக்கி வைத்திருப்பதாக தோன்றியது அவளுக்கு. சற்றே பயம் பரவியது அவளுள், என்னைப் போலவே அவனுக்கும் இந்த கல்யாணத்தில் இஷ்டமில்லையோ! மனம் பரபரவென யோசிக்க,

அடுத்து செய்ய வேண்டிய சில சடங்குகளை ஐயர் ஆரம்பித்து கொடுக்க அவளின் கவனம் திரும்பியது.



காலில் மெட்டியை அணிவித்தான், உதய். மெல்லிய தீண்டலை மனம் உணரவில்லை. அதையும் மீறி அன்றைய நிலையில் இதயம் கனத்தது. சடங்குகள் முடிய ஐயர்க்கு தாராளமாய் பணம் கொடுத்தார், உதய்யின் தந்தை வேதாசலம்.

கோவிலை விட்டு வெளியே வந்தனர் மணமக்கள். மணமக்களுக்கு உரிய சந்தோஷமோ, சிரிப்போ, சீண்டலாய் பேசியவாறு வரும் ஆர்வமோ எதுவும் இல்லை, இருவருக்கும். பலபல எண்ணங்கள் இசையாவினுள் மட்டும் இல்லை! அவனுள்ளும்.

கலங்கிய கண்களை துடைத்துக் கொண்டார் மாணிக்கம். தன்னந்தனியாகவே வாழ்வு கருகி விடுமோ! மகளின் வாழ்க்கை என தினம் தினம் வேதனைப்பட்டு வெந்தவர்க்கு மகளின் மறு திருமணம் மனதை குளிர வைத்தது. போதும் இனி! இவர் வாழ்வு முடிந்தால் கூட கவலை இல்லை. அம்மா! தாயே நன்றி. மனமுருக அம்மனுக்கு நன்றி தெரிவித்தார், விழிகள் கசிய.

நிலவு ராணிக்கு நட்சத்திரப் படை வீரர்கள் அணி வகுக்க அழகாய் வான ஊர்வலத்தை ஆட்சி செய்தது. விழிகளுக்கு மென்மையை கொண்டு ரம்யம் செய்த இரவு பொழுது.

மெல்லிய பருத்தி சேலை இசையாவின் மேனியில் படர்ந்திருக்க முகம் மட்டும் பயமும், பதட்டமும். "அம்மா எனக்கு பயமாய் இருக்கு... இதெல்லாம் அப்புறமாய்..." தயக்கமாய் விழிகள் கசிய பேசிய மகளின் மனதை உணர்ந்தவளாய், பழசை மறந்திடு. புது வாழ்க்கையில் உன்னை ஈடுபடுத்திக்கோ. எல்லாம் ஆண்டவன் செயல்.

பயப்படாதே. அறிவுரையும், ஆறுதலுமாய் பேசியவாறு பால் சொம்பை மகள் கையில் கொடுத்தாள், மங்கையர்க்கரசி.

தன் நண்பனும் சம்பந்தியும் ஆன மாணிக்கத்திடம் பேசிக் கொண்டிருந்த வேதாசலம், எழுந்து வந்தார். ''ஒரு நிமிஷம் இப்படி வாம்மா!'' மருமகளை அழைத்து பேசியதைக் கேட்டதும் பயத்தில் பதறியது அவள் பெண் மனம்.

''என்ன மாமா இது? எத்தனை பெரிய விஷயம். இதைப் போய் அவர்கிட்ட சொல்லாம மறைச்சிட்டீங்களே? நீங்க உண்மையை அவர்கிட்ட சொல்லி அவர், சரின்னு சொன்னதா சொன்னீங்களே'' முகம் வியர்வையில் குளிக்க, சற்றே படபடத்தது தேகம்.

''கொஞ்சம் படியாத குணம் படைச்சவன்மா. அவன் இந்த கல்யாணத்துக்கே அவன் சம்மதிக்கலை. சூழ்நிலை அப்படி. ஆனா! ஒரு தந்தையா அவனை அப்படியே விட முடியாது. ஆனா! நீதான் என் வீட்டு மருமகளா வரணும்னு நான் முடிவு பண்ணிட்டேன். கொஞ்ச நாள் கழிஞ்சதும் உன் மேல அவன் அன்பு வைத்த பிறகு சொல்லிக்கலாம்னு சொல்லலை. ஆனா! நிச்சயம் புரிஞ்சுப்பான். என் நண்பர் மகள், என்னோட மருமகள் எப்போதும் சந்தோஷமாய் இருக்க நான் என்ன வேணும்னாலும் செய்வேன். ஆனா! அதுல ஒரு சுயநலம் இருக்கு. என் மகனோட வாழ்க்கையும் சேர்த்து சிறக்க, போம்மா!'' என்றவாறு நகர்ந்தார்.

இப்படி ஒரு சிக்கலில் மாட்டி விட்டுட்டாரே, இவர்! மனம் நொந்தது. எதிர்பார்ப்பும் சந்தோஷமும் பரவ வேண்டிய



தருணத்தில் பயமும் படபடப்பும் அவள் மனதை மிரட்டியது. மனதை மறைத்தவாறு அறைக்குள் நுழைந்தாள் அவளும், அவள் தங்கை சுமத்திராவும் இருக்கும் அறை, இன்று அவர்களுக்காக சிறு மாற்றம் செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தது. ஊதுவத்தியின் வாசமும், அவள் சூடியிருந்த மல்லிகை பூவின் மணமும் கலந்து இதமான நறுமணத்தை அறை முழுதும் தெளித்தது. பழங்களும், இனிப்புகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த டீபாய் மீது ஓரமாய் பால் சொம்பை வைத்தாள், தயக்கமாய்.

சிகரெட் பிடித்தவாறு ஏதோ யோசனையில் இருந்த வனை இசையாவின் கை வளையல்கள் சத்தம் அவளை நினைவுக்குக் கொண்டு வந்தது. காலில் விழப் போனவளை தடுத்து நகர்ந்தான். ''மரியாதை மனசுல இருந்தா போதும். இதுல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை'' என்றவாறு சிகரெட்டை அணைத்து தூரமாய் போட்டான்., ''உண்மையைச் சொல்லணும்னா எனக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமில்லை. அப்பா வீட்டை விட்டு போயிடுவேன்னு மிரட்டினதால சம்மதிக்க வேண்டியதாப் போச்சு'' முகம் இறுக அழுத்தமாய் சொல்ல, 'ஓ வழக்கமான பிள்ளைங்க தான் வீட்டை விட்டு போயிடுவேன்னு மிரட்டுவாங்க. இப்போ தலைகீழாய் நடந்து இருக்கு.' மனதுள் நினைத்தாள்.

''அதுக்குக் காரணம் நான் ஒரு பெண்ணை காதலிச்சேன். அவ பேரு ரேஷ்மா'' சொல்லியவாறு பூவை ரசிப்பது போல் அவள் பாதம் முதல் தலை வரை பார்வையால் உரசினான். இனம் புரியாத உணர்வில் தலை குனிந்தவளுக்கு உட்காரலாம் போல தோன்றியது. அவள் மனதை படித்தானோ இல்லை! அவனே சொன்னானோ

''உட்கார்'' என்றவாறு கட்டிலின் ஓரமாய் நகர மௌனமாய் அமர்ந்தாள்.

''உன் பேரழகால் எத்தனை பேர் மயங்கி காதல் மனு போட்டாங்க?...ம்..'' ஆராயும் விதமாய் பேசியவனைக் கண்டு எரிச்சல் வந்தாலும் அடக்கிக் கொண்டாள். ஒரு ஆண் எந்த விஷயத்தையும் ஒளிவு மறைவின்றி கூறி விடலாம். ஆனால்! பெண் அப்படி இல்லை. அதுவும் அவன் மனம், குணம் எதுவும் தெரியாமல் எதையும் பேசிவிட முடியாது. நினைப்பு ஓட அழைத்தான்.

''என்ன பதிலே காணோம்... நீ யாரையாவது விரும்பி இருந்தா சொல்லு. நான் ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டேன்..'' அவன் குரல் அவளை பேச வைக்க முயற்சித்தது.

''நான் யாரையும் காதலிக்கலே! ஆனா கல்யாணம் முடிச்ச விதவையானவள். அதை உங்கப்பா மறைச்சிட்டார், உங்ககிட்டே. இந்த விஷயம் தெரியும்போது உங்க மனநிலைமை எப்படி மாறும்னு எனக்கு தெரியாது. படபடவென உள்ளம் பொரிந்தது. கணவன் ரகு கூட வாழ்ந்த சில நாட்கள் கூட ஒரு நண்பனைப் போலதான் பழகினாள். கணவன் என்ற உரிமை இருந்ததே தவிர, காதல் என்று அவளால் சொல்ல முடியவில்லை. அவனைப் பற்றிய நினைவில் கொஞ்சம் கனக்க விழிகள் கசிந்தது.

''நான் யாரையும் காதலிக்கலை'' மெதுவாய் பேசும் போதே குரல் உடைந்தது.

''ஓ'' ஏளனமாய் கேட்டவன், ''பெண்களின் அழகு ஆபத்தானதுன்னு சொல்ல கேட்டிருக்கிறேன். ஆனா! இது



உண்மைன்னு என் வாழ்க்கையில் தெரிஞ்சுக்கிட்டேன். அதனால எனக்கு பெண்கள் என்றாலே எரிச்சலும் கோபமும்தான் வருது. மற்ற பெண்களை விட நீ வித்தியாசமானவள்னு எங்கப்பா சொன்னார். எனக்கு அப்படி தோணலே..'' தோளை குலுக்கினான்.

''ஒருவேளை உன் அழகை தவிர மற்ற விஷயம் ஏதாவது என்னைக் கவர்ந்தால்..'' பேச்சை நிறுத்தி ''பார்க்கலாம்'' என்றவாறு கட்டிலின் மேல் இருந்த போர்வையும், தலையணையும் எடுத்து கீழே போட சட்டென எழுந்து கொண்டாள். அவன் படுக்க வசதியாக நகர்ந்து கட்டிலில் சாய்ந்தான். இரு கைகளையும் தலையின் கீழ் வைத்தவாறு விட்டத்தில் ஓடிய மின் விசிறியை வெறித்தான். நினைவுகளில் மனம் ஆசை போட்டது.



## 2

ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம். காபியை குடித்தவாறு பேப்பரை பார்த்துக் கொண்டிருந்தார் வேதாசலம். பெரும் பணக்காரர். திறமையும், பிஸினஸ் மூளையும் இருந்ததால தொழிலில் வெற்றி மேல் வெற்றியும் ஏகப்பட்ட சொத்துக்கள் மட்டும் இல்லாமல் பெரும் புள்ளிகளுக்கு தெரிந்த தொழிலதிபர். ஒரே மகன் உதய்சரண். அவனுக்கு ஐந்து வயதாகும் போது திடீரென்று ஏற்பட்ட காய்ச்சலில் படுத்த பார்வதி, எத்தனையோ வைத்தியம் பார்த்தும் பலன் இல்லாமல் போய்விட, மனைவியின் பிரிவை தாங்க முடியாமல் சிந்தனையை

தொழிலில் காட்டினார். அதன் பலன் வெற்றி மேல் வெற்றி. இப்போது மகனும் சாதித்துக் கொண்டிருந்தான். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்ற பழமொழிக்கேற்ப.

இந்த காலத்துப் பசங்க மாதிரி தன் மகனும் காதலில் விழுந்து விடும் முன் திருமணம் செய்துவிட பெண் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அப்பா!'' குரல் கேட்டு நிமிர்ந்தவர் புருவத்தை உயர்த்தினார். மகன் அருகில் நின்ற பெண்ணைப் பார்த்து.

ஆணழகனாய் வெள்ளை சட்டும், வெள்ளை பேண்டும், அதை கருப்பு பெல்ட்டால் இன் செய்திருந்த விதமும் உதய்க்கு இந்த ஆடையால் அழகா, இல்லை உதய்யால் ஆடைக்கு அழகா என்பது போல இருந்தான். மாநிறமும், நெற்றியின் ஓரம் தொட்டு பார்த்த முடியும். ஆளை ஊடுருவும் விழியும், கூர் நாசியும் அழகான மீசையும் எந்தப் பெண்ணையும் சலனப்பட வைக்கும் கம்பீரமானவன். ஆனால்! அவன் அருகே முட்டி தெரியும் மிடியும் இறுக்கிப் பிடித்த டாப்சும், பளிச்சிட்ட மேக்கப் முகத்துடன், உதட்டு சாயம் பளிரிட பரபரவென ஆராயும் கண்களும் ஏனோ! காரணம் இல்லாமலே அவருக்குப் பிடிக்காமல் போனது முதல் பார்வையிலே.

''அப்பா! ரேஷ்மா, இவளை தான் ஆறு மாசமா காதலிக்கிறேன். நீங்க எனக்கு பெண் பார்த்துட்டு இருக்கிற விஷயம் நேத்துதான் தெரிஞ்சது. அதான்!'' தடுமாற்றத்தை மறைத்தவாறு பேசிய மகனை ஏறிட்டார்.

சிறு வயதில் தாயை இழந்ததால் தாய் காட்ட வேண்டிய அன்பையும் தந்தையின் கண்டிப்பையும் காட்டி வளர்த்தார்.



அதேபோல மனைவி இருக்கும் போதே அடுத்த பெண்ணை நாடும் ஆண்கள் மத்தியில் இன்னொரு திருமணம் செய்யாமல் தனக்காகவே வாழும் தந்தையிடம் பாசமும், அவர் சொல்லி எதையும் மீறாமல் செய்யும் கொள்கையும், மதிப்பும் வைத்திருந்தான். தன்னைப் புரிந்து தன் காதலுக்கு சம்மதம் தெரிவிப்பார் என்ற நம்பிக்கையில் ரேஷ்மாவை அழைத்து வந்திருந்தான்.

''உட்காரும்மா'' வேதாசலம் முடிக்கும் முன்னே எதிரே உள்ள சோபாவில் அமர்ந்தாள். விழிகள் அலை பாய்ந்தது.

''அப்பா! முன்னாடி நாகரிகமாய் நடந்துக்க தெரியாம? இது என்ன, நாகக்காய் மறுத்து கொஞ்ச நேரம் நிற்கக் கூடாதா?'' முணுமுணுத்தான், தனக்குள்ளே!

''தாயம்மா!'' அவர் குரல் கொடுத்ததும் காபி தட்டோடு வெளிவந்தாள், வேலை செய்பவள். ''காபி எடுத்துக்கம்மா!'' என்றவாறு அவளை பற்றிய விவரங்களைக் கேட்டார்.

ஒரு பெரிய ஹோட்டலில் ரிசப்ஸனிஸ்டாக வேலை செய்வதையும், தாய் தந்தை இருவரும் சின்ன வயதிலே இறந்து விட்டதையும், தூரத்து சொந்தமான மாமாவின் நயவில் படித்து, இப்போது ஹாஸ்டலில் தங்கி வேலைக்குப் போவதையும் அறிந்து கொண்டார்.

அவருக்கு வரும் மருமகள் பணம் படைத்தவளாக இருக்க வேண்டாம், நல்ல குணம் படைத்தவளாக இருக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால்! இவள் இந்த குடும்பத்துக்கு ஏற்ற குத்து விளக்காய் தோன்றவில்லை, அவருக்கு. மகனின் தப்பான தேர்வை எப்படி சரி செய்வது என யோசித்து அந்த முடிவை கூறினார்.

இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை உதய். தோழனைப் போல பழகிய தந்தையிடம் இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காதவன் அதிர்ந்து போனான். அதைப் போலவே ரேஷ்மாவின் மன நிலையும். பட்டென எழுந்து கொண்டாள். வேகமாய் கிளம்பியவளைப் பின்தொடர்ந்தான், உதய். ''ப்ளீஸ் ரேஷ்மா நில்லு. அவசரப்படாதே! பொறுமையாய் நான் சொல்றதைக் கேளு'' படபடத்தவனை கோபமாய்ப் பார்த்தாள்.

விழிகளில் திமிரும், ஆணவமும் பளபளத்தது.

''என்ன கேக்கணும்? சீக்கிரம் சொல்லுங்க'' படபடத்தாள்.

''ஏன்! இப்படி கோபப்படறே! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அவரோட சொத்துல பங்கு தரமாட்டேன்னுதானே சொன்னார். என் மேல நம்பிக்கை இல்லையா! என்னால அவரைப் போல பணம் சம்பாதிக்க முடியும். அதுக்கான தன்னம்பிக்கையும், படிப்பும், அறிவும் இருக்கு. என்னால சொந்தக் கால்ல நிக்க முடியும்'' பேச பேச குறுக்கிட்டாள்.

''நான் நிறைய யோசிக்கணும், உதய். நான் நாளைக்கு பிரண்ட் கல்யாணத்துக்கு பெங்களூர் போறேன். வர ஒரு வாரம் ஆகும். கல்யாணம் முடிஞ்சு அப்படியே சுத்தி பார்த்துட்டு வரலாம்னு பிரண்ட்ஸ் எல்லாம் பிளான் போட்டிருக்காங்க. வந்ததும் இதப்பத்தி பேசலாம். ஆனாலும் உங்கப்பாவுக்கு மூளை மழுங்கிப் போச்சா? சொத்தெல்லாம் பிள்ளைக்குக் கூட கொடுக்காம தர்ம ஸ்தாபனங்களுக்கு எழுதி வைக்க போறதா சொல்றாரே!''



ஆத்திரமாய் பேசியவளைக் குறுக்கிட்டான். ''ப்ளீஸ்! அப்பாவை பத்தி எதுவும் சொல்லாதே'' அவன் முகம் இறுகிப் போயிருந்தது.

''நான் வரேன்'' கோபமாய் போனவளை மீண்டும் அழைக்கவில்லை, அவன்.



3

இசையாவின் விழிகளில் கண்ணீர் பொங்கியது. ''டேய் என்னடா இது! இசையா என் மருமக இல்ல. மக. சின்னக் குழந்தையாட்டம் கண் கலங்கிட்டு'' மாணிக்கம் அருகில் வந்து உற்சாகமாய் பேசிய நண்பனின் கைகளைப் பிடித்து கண்களில் ஒத்திக் கொள்ள முயல இழுத்துக் கொண்டார் வேதாசலம்.

''என்னடா இது!'' கோபமாய்ப் பார்த்தார்.

''இல்லைடா! மறுபடியும் என் பெண்ணை பூவும் பொட்டுமாய் பார்க்க காரணம் நீயும், மாப்பிள்ளைக்கும் உள்ள நல்ல மனசுதான்டா காரணம்..'' தழுதழுத்தார்.

''போதும்... போதும்... இப்படியே பேசிட்டு இருந்தா நான் நண்பனாய் இருக்க மாட்டேன். சம்பந்தியாய் மாறிடுவேன்'' கேலியாய் கோபப்பட புன்னகை பூக்க வழியனுப்பி வைத்தனர் மணமக்களை மாணிக்கமும், அவனின் தாயும்.

''பழசையெல்லாம் நினைச்சு குழப்பிக்காம, மாப்பிள்ளை மனம் கோணாம நடந்துக்கணும்'' தாயின் அறிவுரையில்

தலையை ஆட்டியவாறு அழுகையை துடைத்தவாறு காரில் ஏறிக் கொண்டாள். இசையா. புன்னகையோடு மாமனாரிடம் விடை பெற்றுக் கொண்டான் உதய்.

"எதுக்கு அழுறும். நான் உன்னை கடிச்சா தின்னப் போறேன். பெண்கள் எல்லாம் ஆண்களை அழ வைப்பவர்கள்" கடின குரலில் அவளுக்கு மட்டும் கேட்குமாறு முணுமுணுக்க திகைத்தாள். அவனையும் அறியாமல் பயம் படர்ந்தது. கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் தவித்தாள்.

அந்தப் பெரிய பங்களாவைப் பார்த்து விழிகள் மருண்டது. இசையாவுக்கு இத்தனை பெரிய வீட்டை எதிர்பார்க்கவில்லை. அவள் தயக்கம் படர நின்றவளை,

"என்னம்மா இது! ஏன் பயப்படறே! வலது காலை எடுத்து வச்சு உள்ளே வாம்மா!" வேதாசலம் கூற தாயம்மா ஆரத்தி எடுத்து வழிவிட உள்ளே நுழைந்தனர், மணமக்கள்.

அடுத்தடுத்து அறைகளும், பெரிய ஹாலும், ஆங்காங்கே அழகாய் வைக்கப்பட்டிருந்த அலங்கார பொருட்களும், புதிதாய் விளையாட்டு பொருள் பார்க்கும் சிறுமி போல வியப்பாய் பார்த்தாள். இவ்வளவு பெரிய பணக்காரர்கள் இவர்கள் என எதிர்பார்க்காதவளுக்கு அச்சம் தோன்றியது என்னவோ உண்மை. இரண்டு நாட்கள் மெல்ல கழிந்திருந்தது. புது கணவனாய் கொஞ்சி, சீண்டி பேசவில்லை என்றாலும் அளவாய் பேசினான் உதய். அதற்கான காரணத்தையும் புரிந்து கொண்டால் எதுவும் தோன்றவில்லை, அவளுக்கு. தெளிவாய் மகனின் நிலையைப் பற்றி கூறியிருந்தார், வேதாசலம்.



அவன் அவளை நெருங்கியிருந்தால் தவித்து துடித்திருப்பாள். அவள் உடலும், மனமும் இந்த கல்யாணத்தையே ஏற்றுக் கொள்ளாதபோது உறவை மட்டும் எந்த அவள் மனம் பக்குவப்படவில்லை.

கல்யாணமாகி இரண்டே வாரத்தில் கணவனை இழந்த மகளை நினைத்து தினம் தினம் வேதனையில் மனம் வெந்து உடலையும் வருத்திக் கொண்ட தந்தையின் மனம் மகிழ்ச்சியில் நிறைய வேண்டும் என்ற எண்ணத்துக்காகவே இந்த திருமணத்திற்கு சம்மதித்தாள். என்றாலும் அவள் தங்கையின் காதல் நிறைவேற வேண்டுமெனில் அவள் திருமணம் நடக்க வேண்டும் என்ற இன்னொரு காரணத்துக்காகவும்தான், மனம் ஏக்க பெருமூச்சில் நினைவுகள் விழிகளை மறைத்தது.



4

மாணிக்கத்திற்கு சொந்த ஊர் திருச்சி பக்கத்தில் ஒரு கிராமம். பள்ளிக்கூட ஆசிரியர் ஆனவருக்கு நிறைவான பணி. குறைவான சம்பளம் என்றாலும் மனம் நிறைவாய் குடும்பம் நடத்தினாள் அவர் மனைவி. இரு பெண்களையும் அடக்கம், பண்பு, பாசம், பணிவு எல்லா குணங்களையும் கொண்டு அழகாய் வளர்த்தார்.

பெரிய பெண் இசையா கல்லூரி படிப்பையும், சின்னவள் சுமித்ரா பள்ளிப் படிப்பையும் முடித்திருந்த நேரம் அது.

தூரத்து உறவினர் மூலம் வரன் வர அதுபற்றி யோசிக்க ஆரம்பித்தார்.

''அப்பா! நான் மேலே எம்.எஸ்சி படிக்கப் போறேன். அப்புறம் கொஞ்ச நாளைக்கு வேலைக்கு போயிட்டு கல்யாணம் செய்துக்கிறேன், ப்ளீஸ்பா..'' கொஞ்சிய மகளின் அழகை பெருமையாய் ரசித்தவாறு, ''நல்ல இடம்னு புரோக்கர் சொல்றார். பார்ப்போம்டா!'' மகளின் தலையை பாசத்துடன் வருடினார்.

மாப்பிள்ளையாக வந்த ரகுநாதன் களையாக இருந்தான். அமைதியானவனாகவும் தெரிந்தான். திருச்சியில் நல்ல உத்தியோகத்தில் இருக்கான்.

''நீங்க வரதட்சணையாக ஒரு பைசா கூட தரவேண்டாம். உங்க இஷ்டப்படி செய்ங்க. என்னா! கொண்டு வர்ற போற நகை நட்டை என் பையன் போட்டுக்கப் போற தில்லை. எனக்கு பெண் குழந்தை இல்லை. உங்க பெண்ணை என் மக மாதிரி பார்த்துக்குவேன்'' ரகுநாதனின் தாய் மீனாட்சி பேசிய கற்கண்டு பேச்சில் மயங்கினார், மாணிக்கம். மகளுக்கு நல்ல வாழ்க்கை அமைந்து விட்டது என எண்ணி பூரித்தார்.

அதேசமயம் ரகுநாதனின் தம்பி சுரேஷ் பாவாடை தாவணியில் கதவோரம் நின்றவாறு பெண் பார்க்கும் வைபவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சுமித்ராவை மனதில் பத்திரப்படுத்திக் கொண்டான். கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். ''நீ என்னம்மா சொல்றே. மாப்பிள்ளையும், அவரோட அம்மாவும் ரொம்ப நல்ல மாதிரியா தெரியறாங்க. கல்யாணத்துக்கு அப்புறம்



உன் விருப்பப்படி படிக்கலாம். வேலைக்குப் போலாம்னு சொல்றாங்க. நீ என்னம்மா சொல்றே?'' மகளிடம் கேட்டார் மாணிக்கம்.

அம்மாவிடம் தன் மறுப்பை கூறிய இசையாவால், தந்தையின் ஆசையை நிராகரிக்கவோ, மறுத்து பேசவோ இஷ்டமில்லாததால் மௌனமாய் தலையை ஆட்டினாள்.

''எதைப் பத்தி தீவிர சிந்தனை, அநான்! அப்பாவும், பொண்ணுமா சேர்ந்து எங்கப்பாவை உங்க வலையில விழ வச்ச அது மூலமா என்னையும் விழ வச்சிட்டீங்க. அப்புறம் என்ன யோசனை'' கடின குரலில் கேட்டவாறு தோளை உலுக்கிய கணவனின் செய்கையில் நினைவுகள் சட்டென விலக விக்கித்து விதிர்த்துப் போனாள்.

''கேட்டா பதில் சொல்ல மாட்டியா!'' மீண்டும் அவன் குரல் கேட்டது.

என்ன சொல்வது என புரியாமல் திகைத்தவாறு ''இல்ல.. அப்பாவைப் பத்தி'' தட்டு தடுமாறினாள், பேச முடியாமல்.

''எனக்கு மட்டும் ஏன்? இத்தனை கஷ்டங்கள். மனம் விநாடியில் நினைக்க விழிகள் கலங்கியது. அவள் நிலையைக் கண்டவன் ஒரு விநாடி தன் மேல் கோபம் கொண்டவனுக்கு ரேஷ்மாவின் பேச்சு செவியில் ஒலிக்க எரிச்சலானான். ''என் முன்னாடி அழாதே! இதை வச்சி உங்களுக்கு தேவையானதை சாதிக்க நினைக்கிறீங்க. சே'' ஏளனமாய் பேசியவன், ''ஆபீஸிலிருந்து வந்தவனுக்கு காபி கூட கொடுக்கணும்னு சொல்லி தரலியா உங்க வீட்ல! இல்ல நான் கேட்ட பிறகுதான் தாணுமா!'' ஏளனமாய்க் கேட்டான்.

ஏதோ யோசனையாய் தளர்வாய் சோபாவில் சாய்ந்தான், உதய்.



5

''என்னடி ஆச்சு! உனக்கும் உதய்க்கும் சண்டையா? இல்லை காதல் ஊடலா!'' சிரித்தவாறு ரேஷ்மாவைப் பார்த்தாள் ராணி, அவளுடைய தோழி.

காதோரம் ஓடிய முடியை தள்ளி விட்டவளாய் அலட்சியமாகச் சிரித்தாள் ரேஷ்மா.

''ப்ச உங்கிட்ட சொல்றதுக்கு என்ன? உதய் என்னைக் கல்யாணம் செய்துகிட்டா சொத்தெல்லாம் அநாதை ஆசிரமத்துக்கு எழுதி வச்சிடுவேன்னு அவங்கப்பா சொல்லிட்டார். ஆனா! சொத்தை விட நான்தான் முக்கியம்னு உதய் சொல்றார். அவங்கப்பாவை மீறி என்னைக் கல்யாணம் செய்துக்க ரெடியா இருக்கார். ஆனா! எனக்கு இஷ்டமில்லை. உதய் சாதிப்பார். திறமை இருக்கு. ஆனா! நாலு சுவத்துல தொடங்கப் போற காதல் கல்யாணத்தை விட பேரும் புகழும் பணமும் எல்லாம் சேர்ந்து கிடைக்கப் போற வாழ்க்கைதான் எனக்கு வேணும். உங்கப்பா மேல் கேஸ் போடலாம்னு சொன்னதுக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா உதய்க்கு. அவனை விட்டா என் அழகுக்கு நிறைய பேர் வருவாங்க...'' திமிரும் கர்வமுமாய் ரேஷ்மா பேசியதைக் கேட்டு அதிர்ந்து



போனான், உதய். அவளைப் பார்த்துப் பேச வந்தவனுக்கு அவள் பேச்சு அதிர்ச்சியைத் தந்தது. இவள் அழகை மட்டுமே பார்த்து ஆசைப்பட்டவனுக்கு அவள் மன அழுக்கு புரிய தன் மேலேயே கோபம் வந்தது. இவளையா நான் விரும்பினேன், என்ற எண்ணமே கசப்பு மருந்தை குடித்தது போல முகம் மாறியது. புத்திசாலி முடிவுகளால் எத்தனையோ அலுவலக விஷயங்களில் சாதித்தவன், ஒரு பெண்ணிடம் தோற்றது வேதனையாய் இருந்தது என்பதை விட வெளியில் சொல்லவே அவமானமாய் உணர்ந்தான்.

''என்னா! இருபதாயிரம் ரூபாய்ல ஒரு செல்போன், ஒரு தங்க நெக்லஸ், வைர மோதிரம் இதெல்லாம் கிடைச்சது உதய்யால...'' மேலே பேசுவதைக் கேட்க முடியாமல் ஆத்திரத்தையும், அவமானத்தையும் அடக்கியவாறு வீடு வந்தான், வெறுப்பாய். மகனின் முக மாறுதலை உணர்ந்த நடந்த விஷயத்தை ஊகித்துக் கொண்டார், வேதாசலம். ஒரு பார்வையாலே ரேஷ்மாவின் மனதை தெரிந்து கொண்டுதானே அப்படி ஒரு குண்டை போட்டார். அவருக்குப் பிறகு சொத்தெல்லாம் ஆளப் போகும் மகனின் வாழ்க்கை வசந்தமாய் வீச நல்ல மனைவி அமைந்தால் தானே சந்தோஷமாய் மலரும் மகனின் வாழ்க்கை. ஆனால்! மேலே ஏதாவது நடக்குமுன் மகனின் திருமணத்தை நடத்தி விட மும்முரமாய் இருந்தார். அப்போதுதான் தன்னுடைய பழைய தோழனைப் பல வருடங்களுக்குப் பின் சந்தித்தார்.



6 -

மகளின் வாழ்வு சிறக்க வேண்டிக் கொள்ள தாய் இல்லாத போது தந்தை தானே அந்தப் பொறுப்பை செய்ய முடியும். மனமுருக இறைவன் சன்னிதியிலும் நின்றிருந்தார். தரிசனம் முடிந்து கோவில் மண்டபத்தில் அமர்ந்தவரின் சிந்தனையில் மகள் திருமணம் பற்றியே!

நேற்று கூட விஸ்வநாதன் அலுவலக பேச்சின் போது அவர் மகளை உதய்க்கு மனைவியாக்குவது பற்றி ஜாடையாய் விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். அவரும் வேதாசலத்தை போலவே அந்தஸ்தும் செல்வாக்கும் மட்டுமின்றி, தொழிலதிபரும் கூட. யோசனையாய் நிமிர்ந்தவரின் அருகில் அமர்ந்தவரை ஏறிட்டார். தளர்ந்திருந்த தேகமும், ஒளியிழந்த கண்கள் கசிய, முகம் நிறைய சோகத்தோடு பித்துப் பிடித்தவர் போல அமர்ந்தவரின் தோற்றம் அவரைப் பரிதாபப்பட வைத்தது. 'பாவம்! என்ன கஷ்டமோ!' நினைத்தவாறு அவரை உற்றுப் பார்த்தார். எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே. அவருடைய பால்ய வயது தோழன் மாதிரியே! சந்தேகமாய் அவரை அழைத்தார்! உங்க பேரு மாணிக்கம் தானே!''

சட்டென கலைந்தவராய் நிமிர்ந்தார், அந்த மனிதர். ''ஆமாம்! நீங்க..'' கேள்வியாய் பார்க்க, சட்டென உற்சாகமானார் வேதாசலம்.

''டேய்! என்னை தெரியலை, வேதா, வேதான்னு கூப்பிடுவே, மறந்திட்டியா! பள்ளியில படிச்ச, கல்லூரியிலும் நம்ம நட்பு தொடர்ந்ததே. நீ டீச்சர் டிரெயினிங்



படிக்கப் போயிட்டே. நான் பிஸினஸ் பக்கம் போயிட்டேன்'' அவர் பேசப் பேச முகம் மலர்ந்தது, மாணிக்கத்துக்கு.

பழைய ஞாபகங்களில் மனம் மென்மையாக வேதாசலத்தின் கைகளை எடுத்து தன் கைகளில் இணைத்துக் கொண்டார். ''எப்படியிருக்கே வேதா? பல வருடங்களுக்குப் பிறகு பார்த்த நண்பர்கள் தங்கள் பழைய ஞாபகங்களை பகிர்ந்து கொண்டனர். சிறு பிள்ளைகள் போல் சந்தோஷப்பட்டனர்.

''ஒரு நாளைக்கு கண்டிப்பா வீட்டுக்கு வாறும் வேதா'' மாணிக்கம் விலாசம் சொல்ல,

''இப்பவே வர்றேன். உன்னை வீட்ல விட்டுட்டு உன் பெண்ணைப் பார்த்துட்டு போறேன்'' வேதாசலம் பேசியவாறு எழுந்திருக்க கூடவே எழுந்தார் மாணிக்கமும். சற்று முன் தெளிந்த முகம் மீண்டும் கருங்கி வேதனையில் குளித்தது.

''என்னடா! ஏதாவது பிரச்சனையா?'' வேதாசலம் கேட்டதுதான் தாமதம். உடைந்து போய் அழத் தொடங்கினார், சிறு பிள்ளையாய்!

''டேய்! என்ன இது சின்ன குழந்தையாட்டம். எல்லோரும், பார்க்கிறாங்க பாரு. முதல்ல கார்ல ஏறு'' தோளை அணைத்தவாறு சமாதானப்படுத்தியவாறு காரில் அமர வைத்துவிட்டு தானும் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது.

திருமணம் இனிதே முடிந்தது. ஊரும், தெருவும் வியக்கும்படி திருமணத்தை நடத்தினார், மாணிக்கம். ஓடி ஓடி வேலைகள் பார்த்தார். கூட அவ்வப்போது ரகுவின்

தம்பி சுரேஷும் அவரின் வேலைகளைப் பகிர்ந்து கொண்டான். அண்ணி, அண்ணின்னு பாசமாய் பேசி பழகினான். தனக்கு ஒரு தம்பி இல்லாத குறையைப் போக்கியது போல இருந்தது இசையாவுக்கு. சில நாட்கள் அவ்வப்போது வீட்டுக்கு வரும்போது பேசியதில் அவன் குணம், பண்பு, பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. என்றாலும் சுமித்ராவில் மனதில் அமர்ந்தான், அழகாக.

மாமியார் மீனாட்சி ஜோசியத்தில் ரொம்ப நம்பிக்கை உள்ளவங்க என்பதை தாலி கட்டிய சில மணி நேரங்களிலே புரிந்து கொண்டாள், இசையா.

"உனக்கு ஒண்ணும் வருத்தமில்லையே!" மீனாட்சி பாந்தமாய்க் கேட்க, "எதுக்குத்தே!" புரியாமல் எறிட்டாள், இசையா.

"இல்லை! சாயங்காலத்தில் இருந்து ஒரு வாரத்துக்கு நாள் சரியில்லையாம்! அதுதான்! ஒரு வாரம் கழிச்சு சாந்தி முகூர்த்தம் வச்சிக்கலாம்னு" பேச, பேச,

"அதெல்லாம் ஒண்ணுமில்லை" முகம் அந்தி வானமாய் சிவக்க வெட்கத்துடன் முணுமுணுத்தாள்.

ஒரு வாரம் நண்பனைப் போல் நடந்து கொண்டான் ரகுநாதன். அவ்வப்போது பேசிச் சிரித்தாலும், யாருக்கும் தெரியாமல் சீண்டுவதோ, சிலிர்க்க வைப்பதோ எதுவும் செய்யாமல் அம்மா பேச்சுக்குக் கட்டுப்பட்டவனாய் இருந்தான். நீல வண்ண பட்டுச் சேலையில் மகாலக்ஷ்மி போல் அழகையும், அமைதியும் மின்ன மருமகளின் கூட நடந்தாள், மீனாட்சி.



பக்கத்துத் தெருவில் இருக்கும் அம்மன் சன்னிதிக்கு இருவரும் சென்றனர். இந்த ஒரு வாரத்தில் தன் மகளைப் போல பாசமாய் கவனித்து அன்பாய் நடத்தினாள் மீனாட்சி.

இரண்டு நாட்கள் அண்ணியின் சமையலை ருசித்து பாராட்டியும், அரட்டை அடித்தும் கலகலப்பாய் இருந்து விட்டு, மற்றவர்களின் மனதையும் சந்தோஷப்படுத்தி விட்டு, இனியும் லீவு போட முடியாது என கிளம்பி விட்டிருந்தான் சுரேஷ். எத்தனை நல்ல மனம் படைத்தவர்கள். மனம் சந்தோஷத்தில் விம்ம, கடவுளுக்கு நன்றி கூறியது உதடுகள் முணுமுணுத்தது. இசையாவுக்கு.



## 7

பயங்கர கோபத்தில் இருந்தான், உதய். மனம் ஆத்திரத்தில் கொதித்தாலும் காரை நிதானமாகவே ஓட்டினான்.

அலுவலகத்துக்கு வந்த முக்கியமான பிஸினஸ் நண்பரை விமான நிலையத்தில் வழி அனுப்பி விட்டு திரும்பிக் கொண்டிருந்தான். இந்த சில நாட்களாக இசையாவை கவனித்துக் கொண்டுதான் இருந்தான். முகத்தில் அமைதி. பெரிய பணக்கார வீட்டின் மருமகள் என்ற திமிர்த்தனமான தோற்றம் இல்லாமல் கழுத்தில் தாலி கொடி மட்டும் பட்டோ, பகட்டோ இல்லாமல் எளிய சேலை. அவள் மேனியில், தந்தையிடம், வேலைக்காரர்களிடமும் புன்முறுவலுடன், நானும் எளிமையானவள் தான் என்ற விதத்தில் பேசுவதும், நடந்து கொள்வதும் அவனுக்கு

மேலும் அவளை கவனிக்கத் தோன்றியது. மெட்டியின் ஓசையுடன் வீட்டில் ஒரு பெண் வளைய வருவது வீட்டிற்கு அழகு மட்டுமில்லை. பொறுப்புகளும் அந்தப் பெண்ணிற்கு கூடிப் போவது மட்டுமல்லாமல் அலுவலக விஷயங்களில் ஆண்களால் முழு ஈடுபாட்டு டன் செயல்பட முடிகிறது.

இவள் ரேஷ்மாவை போல் இல்லை. அப்பா சொன்ன மாதிரி வித்தியாசமானவள்தானோ என நினைக்கத் தோன்றியது உதய்க்கு. மனதில் இருந்த சஞ்சலம் மறைந்து நிம்மதி பரவிய உணர்வில் இருந்த போதுதான் ரேஷ்மா அவனைச் சந்தித்தாள். அவள் பேசிய பேச்சுக்கள் செவியில் ஓட கோபமாய் வெறுப்புடன் உதடுகளை ஏளனமாய் வளைத்தவாறு நகர ஆரம்பிக்க, "ஒரு நிமிஷம் உதய்!" அழைத்தவளைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை என்றாலும் அசையாமல் நின்றான். "என்ன?" என பார்வையால் கேட்டவாறு.

"எப்படியோ, அப்பாவுக்கு ஏத்த பிள்ளையா கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க. ஆனா! உங்களுக்கு நல்ல மனைவி அமைஞ்சிருக்காங்க. முன்னாள் காதலனுக்கு ரத்தம் கொடுத்து, கழுத்து செயினை அடகு வைத்து பணம் கட்டி, என்ன கரிசனம், ஆஹா! ஏன் அவங்க செலவுக்குக் கூட பணம் தர மாட்டீங்களா! ஏளனமும், பொறாமை உணர்வும் விழிகளில் தீயாய் பரவ ஆக்ரோஷமாய் சொல்லியவளின் பேச்சை மேலும் கேட்க பிடிக்காமல் அகன்றான்.

மனம் எரிந்தது. கடைசியில் நீயும் அவ்வளவுதானா! வெறுப்பாய் இருந்தது. நான் யாரையும் காதலிக்கலைன்னு பொய் சொன்னியா! ஏன்? நான் சொன்ன மாதிரி நீயும்



சொல்லியிருக்கலாமே! ஒருவேளை அவனது பொழுது போக்கிற்காக காதலித்தாயா? கழுத்து செயினை அடகு வைத்து, ரத்தம் கொடுத்து நினைக்க நினைக்க முகம் இறுக அழுத்தமாய் கார்க் கதவை அறைந்து சாத்தி கிளம்பினான், வீட்டுக்கு.

சிலையாய் அமர்ந்திருந்தாள் இசையா. சுரேஷுக்கு எதுவும் ஆகக் கூடாது. கடவுளை நினைத்து மனம் பிரார்த்தித்துக் கொண்டது.

பெங்களூரில் வேலை பார்த்தவன் இங்கே எதுக்கு வந்தான் என புரியவில்லை அவளுக்கு. ஆனாலும் அடிபட்டு நினைவை இழக்கும் முன்பு தன் வீட்டு தொலைபேசி எண்ணை கொடுத்திருந்தான். எப்படித் தெரியும்? இந்த வீட்டின் தொலைபேசி எண். அதுவும் புரியவில்லை. என்றாலும் அவசர அவசரமாய் எதிர் முனையில் சொன்ன தகவலை வைத்துக் கொண்டு அந்த ஆஸ்பிட்டலுக்குச் சென்றாள்.

நிறைய ரத்தம் வெளியேறி விட்டது. தலையில் அடிபட்டதால் ரத்தம் ஏத்தணும். அதனால பிளட் பேங்கில் கேட்டிருக்கோம். இன்னும் கிடைக்கலை. டாக்டர் பேச்சில் அவனுடைய பிளட் குரூப்பும், என் ரத்தமும் ஒரே குரூப் என்பதை தெரிந்தவள், தன் ரத்தத்தை எடுத்துக்கச் சொன்னாள். அவசர அவசரமாய் பதட்டத்துடன் வந்ததால் பணம் எடுத்துட்டு வரவில்லை என்பதை உணர்ந்தாள்.

தன் கழுத்திலே கிடக்கணும்னு ஆசையாய் தந்தை வாங்கிப் போட்ட மெல்லிய செயின் தாலி கயிறை உரசிக் கொண்டு கிடக்க கழட்டினாள். எதிரே இருந்த அடகுக்

கடையில் அடகு வைத்து பணம் வாங்கிக் கொண்டாள். டாக்டர் சொன்ன மருந்து மாத்திரைகளை வாங்கினாள்.

''தலையில் பலமா அடிபட்டதால சின்னதா ஒரு ஆபரேஷன் பண்ணியிருக்கோம். கண் விழிக்க இரண்டு நாள் ஆகும்.'' டாக்டர் சொல்ல, நிம்மதி பெருமூச்சு விட்டாள். உயிருக்கு ஆபத்தில்லை என உணர்ந்து.

தனக்காகப் பரிந்து பேசி நியாயம் உணர்ந்து தன் தாயையே ஒதுக்கி வைத்தவன், பண்பும், பரிவும் கொண்ட நல்ல மனிதன். ஆனால்! இதையெல்லாம் தன் தந்தை உணரவில்லையே! என்ற ஏக்கப் பெருமூச்சுடன் திரும்ப அருகில் விழிகள் சிவக்க நாடி நரம்பெல்லாம் கோபத்தில் புடைக்க இரை தேடும் புலியின் முகம் போல் ஜ்வலிக்க நின்றிருந்தான் அவள் கணவன்.

வண்ண கனவுகளும், கற்பனைகளும் எண்ணத்தில் உலவ உடலும், மனமும் சிவந்து குழம்பி நெகிழ அறைக்குள் நுழைந்தாள், இசையா. சீண்டி, சிணுங்க வைக்கும் கதைகள் சொல்லி அவளை சிவக்க வைக்கக் கூட தோழிகள் இல்லை என்றாலும் சந்தோஷத்தையும் மீறி ஒருவித படபடப்பும் லேசாய் வலம் வர செய்தது, அவள் மனதில்.

கதவருகே நயக்கத்துடன் நின்ற மனைவியின் பேரழகை ரசித்தவாறு அவளருகே வந்த ரகு பால் சொம்பை வாங்கி அருகிலிருந்த பழங்கள் வைக்கப்பட்டிருந்த டீபாய் மீது வைத்துவிட்டு திரும்பினான். அவளின் தோள் தொட்டு கட்டிலின் மீது அமர வைத்து தானும் அமர்ந்து கொண்டான், அவளை உரசியவாறு.



இனம் புரியாத சுகம் உடலெங்கும் பரவ ஆரம்பித்தது அவளுக்கு. மெல்ல கிசுகிசுத்தான். ''ஏற்கனவே ஒரு வாரம் அம்மா தள்ளி வச்சிட்டாங்க... இனியும் என்னால கையை கட்டிக்கிட்டு இருக்க முடியாது..'' முகமெங்கும் சந்தோஷம் பூத்துக் குலுங்க அவளை அணைத்துக் கொண்டான். அவள் முகமெங்கும் முத்திரை பதித்தவாறு படர்ந்த அவன் முகமும், கைகளும் விறைத்தது. வியர்வைத் துளிகள் அவன் முகம் முழுதும் பூக்க வலியில் நெஞ்சில் கை வைத்து துடித்தான். திடுக்கிட்டவாறு என்ன ஆச்சுங்க! பயத்தில் புரியாமல் பதறினாள்.

''அந்த மாத்திரையை எடு.'' சுவர் ஓரமாய் இருந்த செல்ப் மீது கை காட்ட, படபடத்துடன் மாத்திரையை எடுத்து வந்தபோது, அப்படியே மூர்ச்சையாக ஆகியிருந்தான்.

கதவைத் திறந்து அலங்க மலங்க வெளியில் வந்து மாமியாரை எழுப்பினாள் அழுகையோடு. எல்லாம் முடிந்து போனது. ஆஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்று ஒரு மணி நேரம் போராடியும் பலன் இல்லை. உயிரற்ற சடலமாய்தான் வீடு திரும்பினான், ரகுநாதன்.

''நான்தான் உங்ககிட்ட படிச்சு, படிச்சு சொன்னேனே! அவர் வாழப் போறது சில மாதங்கள், இல்லைனா சில வருஷங்கள்னு. ஏன்னா! அவரோட உடலில் இருக்கும் தீர்க்க முடியாத ப்ராப்ளத்தால! மருந்து, மாத்திரை கூட அவரோட ஆயுளை தள்ளிப் போடத்தான். பாவம்! ஒரு பொண்ணோட வாழ்க்கையை அழிச்சிட்டீங்க...'' வருத்தமும் பரிதாபமும் கலந்த பார்வையுடன் டாக்டர் சொல்லிட்டுப் போக,

வீறிட்டு அழுதாள் மீனாட்சி. மகளைக் கட்டிக் கொண்டு. அய்யோ வர்றவ தாலி பாக்கியம் என் மகனை காப்பாத்தும்னு ஜோசியக்காரன் சொன்னதை நம்பி நான் இப்படி செய்திட்டேனே! தலையில் அடித்து கொண்டு அழுதாள்.

நடந்ததை நம்ப முடியாமல் சிலையாய் நின்றிருந்தாள் இசையா. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. டாக்டர் சொன்னதையும், மீனாட்சி அழுது கொண்டே சொன்ன காரணத்தையும் கேட்டு அதிர்ந்து போய் நின்றார், மாணிக்கம். நெஞ்சம் வெடித்து விடுமோ என்ற வலியில் துவண்டு விழுந்தார்.

அழுதழுது கண்ணீர் வற்றிப் போனது இசையாவுக்கு. மனமும், உடலும் மரத்துப் போயிருந்தது. நெஞ்சு வலியால் தீவிர சிகிச்சை பகுதியில் சேர்க்கப்பட்டிருந்தார், மாணிக்கம். கல்யாண வீட்டின் மகிழ்ச்சி, சந்தோஷம் இன்னும் விலகாமல் படர்ந்திருந்தது! கழித்து துக்கம் நடக்கும் இழவு வீடாய் மாறிப் போயிருந்தது. அக்கம் பக்கம் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் ஆளாளுக்குப் பேசினார்கள். "இப்படி பொய் சொல்லி ஏமாத்தி மகனுக்கு கல்யாணம் பண்ணி வச்சிருக்கக் கூடாது. இந்த மீனாட்சி. பாவம்! அந்தப் பொண்ணு!" என அவளுக்காக பரிதாபப்பட்டது ஒரு கூட்டம்.

"ம்... என்ன பண்றது. மகன் மேல உள்ள பாசத்தால கல்யாணம் பண்ணி வச்சா வந்த மகராசி ஒரே வாரத்தில் புருஷனை அனுப்பி வச்சிட்டா. அவனை கல்யாணம் பண்ணாம இருந்திருந்தாலும் இன்னும் கொஞ்ச நாளைக்கு உயிரோட இருந்திருப்பானோ என்னவோ!" இன்னொரு



பக்கம் பேச நெஞ்சம் இரண்டாய் பிளப்பது போன்ற வலியில் துடித்தாள் இசையா.

மங்கல கயிறைச் சுமந்து வாழும் மண வாழ்க்கைக்கு ராசியில்லாதவளோ! அதுவும் உறவின் அர்த்தம் சொல்லும் அந்த நேரத்தில் கணவனின் உயிர் பிரிந்தது. அவள் மனதில் அழுத்தமான ஆணி வேராய் பதிந்தது. பலவித எண்ணங்களில் குழம்பி மனதையும், உடலையும் நொந்து கொண்டாள். சிகிச்சை முடிந்து வீட்டுக்கு வந்த மாணிக்கம் மகள் நிலை பார்த்து உடைந்து போய் அழத் தொடங்கினார்.

"என்னங்க அழாதீங்க! அமைதியா இருங்க. பதட்டப் படாதீங்க" கணவரை சமாதானப்படுத்தும் விதமாய் பேசினாலும், மங்கையர்க்கரசியாலும் அழுகையை அடக்க முடியவில்லை.

தேவதையாய் இருந்த மகளின் தோற்றம் மாறிப் போய் அலங்கரிக்கப்படாத, களையிழந்து போன மகளின் வாழ்க்கையை இப்படி ஆக்கியதற்கு தான் தான் காரணம் என தலையில் அடித்துக் கொண்டு அழுத தந்தையை சமாதானப்படுத்த முயன்றாள் இசையா. "என் தலைவிதி தான் எல்லாத்துக்கும் காரணம். ப்ளீஸ் அழாதீங்க" தன் மனதை அடக்கியவாறு ஆறுதல் சொல்ல முயன்றாள். "அம்மா! நீயும் ஒரு பெண் தானே. அண்ணனுக்கு இப்படி ஒரு நோய் இருக்கு. எந்த வித அதிர்ச்சியும், சந்தோஷத்தையும் தாங்கர சக்தி அவர் நெஞ்சுக்கு இல்லை. அவர்க்கு திருமண பந்தம் நல்லதில்லைன்னு டாக்டர் சொல்லியும் மீறி எப்படிமா? ஒரு பெண்ணோட வாழ்க்கையை பணயம் வச்சே" ஆத்திரமும் கோபமும் தொனிக்க தாயிடம் கேட்டான் சுரேஷ்.

"சாரி அண்ணி, எனக்கு இதைப்பத்தி ஒன்னுமே தெரியாது. இல்லைனா, கண்டிப்பா இப்படி நடத்திருக்க விடமாட்டேன்" அழுத்தமாய் பேச, ஆத்திரமாய் எரிட்டார், மாணிக்கம்.

"போதும், இனியும் உங்க பேச்சை நம்ப நான் தயாரா இல்லை. பாவிகளா! நல்லா இருந்த எங்க குடும்பத்துல சூறாவளியா புகுந்து, எங்க வீட்டையே சுழற்றி அடிச்சிட்டீங்களே!" மனதை திடப்படுத்தியவராய் பேசினார்.

"இனி ஒரு நிமிஷம் கூட இங்கு இருக்க வேணாம்மா."

தயக்கமும், தடுமாற்றமும் அவளுள் எது சரி, எது தவறு என யோசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. தந்தையுடன் புறப்பட்டாள்.

"அம்மா! எனக்கு கேம்பஸ் மூலம் பெங்களூர் வேலை கிடைச்சிருக்கு. படிப்பு முடிஞ்சதும் வேலைக்குப் போயிடுவேன். எப்ப, அண்ணிக்கு மறு வாழ்வு அமைஞ்சு சந்தோஷமா வாழறாங்களோ அன்னைக்குத்தான் உங்கக் கூட பேசுவேன். பை" தன் வார்த்தைகள் அத்தனையும் நிஜம் என்ற உறுதியோடு பேசியவனைக் கண்டு திடுக்கிட்டாள், இசையா.

மனதில் விரக்தி புன்னகை பூக்க திரும்பினாள். "ப்ளீஸ் சுரேஷ். எனக்காக உங்கம்மாக்கிட்ட கோபம் காட்டாதீங்க. இந்த சில நாட்கள் பழக்கத்திலே என் மீது ரொம்ப அன்பு வச்சதுக்கு ரொம்ப நன்றி" தழுதழுக்க பேசினாள். விழிகள் கசிந்தது.



"என்னை மன்னிச்சிடும்மா... இசையா, பிள்ளை மேல வச்ச பாசத்தால உன்னை பலி ஆக்கிட்டேன். சுரேஷ் சொல்றதுல தப்பு இல்லை. என் பாவத்தைக் கழிக்க காசிக்குப் போய் கர்மம் தொலைக்கப் போறேன். கண்டிப்பா, நீ மறு கல்யாணம் பண்ணிக்கணும்" மீனாட்சி நெகிழ்ந்து நியாயமாய் பேச, "போதும் இந்த நேரத்துக்கும் இதுவே நினைத்தவாறு அவர்களிடம் விளக்கி பேச மனமோ, உடலோ இடம் தரவில்லை. மௌனமாய் நின்றாள்.

வீடே சோகமாய் இருந்தது. கலகலப்பும் சந்தோஷமும் இருந்த இடம் தெரியாமல் மகளின் நிலை கண்டு, ஒவ்வொரு கணமும் மருகி மருகி மனதினில் அழுதாலும் மகளிடம் காட்டிக் கொள்ள வில்லை என்றாலும் தந்தையின் நிலை புரிந்தாலும் அவரை சந்தோஷப்படுத்தும் வழி தெரியவில்லை, இசையாவுக்கு.

நாட்கள் சில சென்றாலும், அந்த எண்ணங்களும், காட்சிகளும், அவளை சுழற்றி சுழற்றி அடித்தது. இடமாற்றமும், புது மனிதர்கள் அடங்கிய புது சூழ்நிலை மகளுக்கு மாற்றத்தை கொடுக்கட்டும் என்ற எண்ணத்தோடு சில வருடங்கள் இருக்கிறது. தன் பணியில் ஓய்வு பெற என்ற நிலையில் ராஜினாமா கொடுத்து விட்டு சென்னைக்கு இடம் பெயர்ந்தனர். ஆனால் சின்ன மகளின் படிப்பு பாதிக்க வேண்டாம் என்ற எண்ணத்தோடு மகளின் கல்லூரி படிப்பை அங்கிருந்து ஹாஸ்டல் மூலம் தங்கி படிக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்தார்.



8

கணவனின் கோபத்தை கண்ட இசையாவுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன தவறு செய்தாள்? ஏன்! இந்தக் கோபம். பயமும், பதட்டமும் சேர, முகம் வெளுக்க சற்றே தடதடத்தது தேகம்.

இந்த சில தினங்களில் அவன் சிரித்துப் பேசவில்லை. என்றாலும் அவன் பழக்கம், குணம், பண்பு இதெல்லாம் நடவடிக்கையில் தெரிந்து அவன் மனம் லேசானது போன்ற உணர்வைத் தந்தது. அதிலும் தன் கடந்தகாலம் மறைக்கப்பட்டுள்ளது. கணவனிடம் என்ற சேதி அவளை நெஞ்சை முள்ளாய்க் கீறியது.

எப்போது தெரியும், என்ன ஆகும் என்ற படபடப்புடன் வளைய வந்தாள். ஒருவேளை அந்த விஷயம்தான் தெரிந்து கோபப்படுகிறானோ உதடுகள் தடதடத்தது. விழிகள் மருண்டு விழித்தது.

''கடைசியில நீயும் அவளை மாதிரியே என்னை ஏமாத்திட்டியே. சே முதல் நாள் இரவிலே கேட்டேனே. அப்பவே சொல்லியிருக்கலாம். இல்ல அதை மறைச்சி..'' அடி குரலில் அழுத்தமாய் கர்ஜித்தான். அவனிடம் மறைத்தது அவளை ஏமாற்றிய உணர்வை உதய்க்குத் தந்தது. முதல் ஏமாற்றம் இன்னும் தொடர்கிறதோ என்ற உணர்வே அவன் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல்.

ஓ! விஷயம் தெரிந்து விட்டது. பயத்தில் பேச்சு எழுப்ப முடியாமல், அடைத்தது. காற்றில் ஆடும் கொடியைப் போல மனம் தள்ளாடியது.



''இந்த உண்மையை உங்ககிட்டச் சொல்லி, நீங்க பெருந்தன்மையோட சம்மதிச்சீங்கன்னு மாமா சொன்னார்'' வார்த்தைகள் வெளிவர மறுத்தது.

''அது வந்து...'' தயங்கி தடுமாற ஆத்திரத்தை அடக்க முடியாமல் சட்டுனு அறைந்து விட்டான், உதய்.

கன்னம் எரிய வலியில் சட்டென விழிகள் குளமானது. வழிந்து கன்னம் வழியே வந்தது கண்ணீர். என்னதான் முயன்றும் அடக்க முடியாமல் அழத் தொடங்கினாள். விம்மலுடன் வேகமாய் விலகினாள்.

ஷிட்! ஒரு கணம் தன் மேலே வெறுப்பாய் வந்தது. உதய்க்கு. ஒரு பெண்ணை கை நீட்டி அதுவும் தன்னையே நம்பி வந்த மனைவியை அடித்தது கோபமாய் வந்தது. அவளையே அவனுக்கு பிடிக்காமல் போனது. அழுத விழிகளும் சிவந்த கன்னங்களும், நான் எந்தத் தப்பும் செய்யலைனு பயமும், படபடப்பும் தோன்றிய விழிகள். அவன் மனக் கண்ணில். 'சே நான் அவசரப்பட்டுட்டேனே. அப்படி என்ன தவறு செய்து விட்டாள். ஒரு உயிரைக் காப்பாத்த ரத்தம் கொடுத்தது. மனிதாபிமான செயல்தானே! அதைப் பாராட்டுவதுதானே பண்பு. கையில் பணமில் லாததால் அவசரத்துக்கு செயினை அடகு வைத்திருக்க லாம்.' மனைவிக்காக இன்னொரு மனம் பரிந்து பேசியது. நீ ரேஷ்மா மீது உள்ள கோபத்தை இவள் மீது காட்டுகிறாய்? குற்ற உணர்ச்சியில் அவன் மனம் சாடியது. எதையும் மனம் விட்டுப்பேசினால் எல்லாப் பிரச்சனையும் தீரும் வழி நினைத்தவாறு அறைக்குள் நுழைந்தான். அவள் மீதிருந்த கோபம் மெழுகாய் கரைந்து காணாமல் போயிருந்தது.

கவரோரமாய் சாய்ந்து முழங்காலில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள் இசையா. கை தொட்டு எழுப்பினான். அழுதழுது விழியும், முகமும் சிவந்து போயிருந்தது.

''ப்ளீஸ் இசையா என்னை மன்னிச்சிடு. நான் அவசரப் பட்டுட்டேன். நீ என்கிட்ட மறைச்சதை என்னால தாங்கிக்க முடியலை. வேணும்னா என்னை அடிச்சிடு'' அவளின் இரு கைகளையும் எடுத்து தன் கன்னத்தில் அழுத்தி அறைவது போல இழுக்க, தன் கையை இழுத்துக் கொள்ள முயன்றவளை விடவில்லை, அவன். இவள் என் மனைவி. முன்பு என்ன செய்திருந்தாலும் அதை மன்னித்து என் கௌரவத்திற்கும், குடும்பத்திற்கும் ஏற்றவளாய், மாற்றிக் கொள்ள என்னால் முடியும். பொறுப்புள்ள கணவன் என்றால் இப்படி சிந்தித்து இருப்பான். அருகே இழுத்து அணைத்துக் கொண்டான். ஆவேசமாய் இறுக்கி அணைத்து இதழ் பதித்தான். உச்சியில் மெல்ல அவன் கைகள் அவள் தேகமெங்கும் அழுத்தமாய் பதிந்து பதியம் போட முகமெங்கும் முத்திரை பதித்தவனின் முரட்டுத் தனத்தை தாங்க முடியாமல் அவள் தேகம் தடதடத்தது. தளர்ந்தது. கை நரம்புகள் இறுக கைகளை இறுக்கி மூடிக் கொண்டாலும் தேகம் ஒத்துழைக்க மறுத்து முறுக்கேறி நின்றது. ''எனக்கு பயமா இருக்கு ப்ளீஸ்..'' ஒருவித இயலாமையால் நெஞ்சம் படபடக்க அவனை விலக்க முயன்றாள்.

இந்த மாதிரி தருணத்தில்தானே ரகுவின் உயிர் பிரிந்தது. ஆற்றாமையால் கண்ணீர் சரம் கோர்த்து மார்பில் வழிந்தது.



''ஏய்! என்ன ஆச்சு?'' கேட்டவாறு சட்டென அவளை விலக்கி நிமிர்ந்தான்.

என்ன பதில் சொல்வது? என் பெண்மையை உணர வைக்கும் அந்த தருணத்தில்தான் ரகுவின் உயிர் பிரிந்தது. அதேபோல உங்களுக்கு ஏதாவது ஆயிடுமோன்னு இந்த பைத்தியக்கார மனசு அடிச்சுக்கிது. இது தப்பான மூட நம்பிக்கைன்னு மனசு சொன்னாலும் இப்படி ஒரு நினைவு வருவதை என்னால தடுக்க முடியலையே! மௌனமாய் அழுகையோடு நின்றவளை ஆச்சரியமாய் ஏறிட்டான். என்னாச்சு இவளுக்கு நத்தைக் கூட்டுக்குள் சுருங்குவது போல ஏன்? தன்னையே சுருக்கிக் கொள்கிறாள். அவனுக்குப் புரியவில்லை. மனதில் உள்ளதை கேட்க நினைத்த நேரத்தில் அவன் பாக்கெட்டில் இருந்த செல்போன் தன் அழகான இசையை வெளியிட்டது. எடுத்துப் பேசியவன் அவசரமாய் வெளியேறினான். அவன் கம்பெனி மானேஜர் பேசினார். அவர்கள் கம்பெனியில் ஒப்பந்தம் வைத்து ஏழு லட்சம் பாக்கி கொடுக்காமல் கம்பெனியை இழுத்து மூடி விட்டு காணாமல் போன கோபால் அங்கு ஒரு ஓட்டலில் ரூம் எடுத்துத் தங்கியிருப்பதாகவும் உடனே வந்தால் பணம் பற்றி அவனிடம் கேட்கலாம் என தகவல் கூறியதால் அவசரமாய் கிளம்பிப் போனான்.



## 9

வேதாசலத்திற்கு குழப்பமாய் இருந்தது. முதல் பார்வையிலே அவருக்கு இசையாவைப் பிடித்துப்

போனது. தன் வீட்டிற்கு ஏற்ற மருமகள் என முடிவு செய்து கொண்டார் மனதில். ஆனால்! நண்பன் மாணிக்கம் தன் பெண்ணுக்கு நடந்த கொடுமையை கூறி அழுதபோது அவருக்கே அதிர்ச்சியாய் இருந்தது. வானவில்லாய் அழகும் அமைதியும் கொண்ட இந்தப் பெண் விதவையா? வாழ வேண்டிய வயதிலே இப்படி ஒரு கொடுமையா? பரிதாபம் அலை அலையாய் பொங்கியது அவருக்கு.

சோகம் மறைத்து போலிப் புன்னகையுடன் காபி கொடுத்த இசையாவின் முகத்தில் நிரந்தரமான நிஜமான புன்னகை பூக்கணும். நினைத்தார். நண்பனின் வேதனைகளை தனதாக சுமந்து வீடு வந்தவர், மகனை அழைத்தார்.

''என்னப்பா?'' உதய் கேட்க,

''அடுத்த வாரம் உனக்கும் என் நண்பன் மகள் இசையாவிற்கும் கோவிலில் வச்சு திருமணம் நடத்த ஏற்பாடு செய்யப் போறேன். குறுக்கே பேசாமல் முழுசும் கேளு. நீ என் இஷ்டப்படி கல்யாணம் பண்ணிட்டா நான் இந்த வீட்ல இருப்பேன். இல்லேனா காசி, ராமேஸ்வரம்னு எங்கியாவது கண் காணாத தேசமா போயிடறேன். இது உங்கம்மா மீது சத்தியம். இதுல எது நடக்கணும்னு நீயே முடிவு பண்ணு'' என்றவாறு எழுந்து சென்றவரின் முதுகை வெறித்தான். தந்தையின் மேல் உள்ள பாசத்தால் மௌனமாய் கட்டுப்பட்டான்.

ஆனால் இசையா இதற்குச் சம்மதிக்கவில்லை. ''எங்களுக்குப் பிறகு உன் நிலைமை என்ன? ஒரு பொண்ணால தன்னந்தனியே இந்தச் சமூகத்துல வாழறது கஷ்டம்மா... நல்ல வாழ்க்கை அமைய கூட முன்னாடி அப்படி நடந்திருக்கலாம். ப்ளீஸ்மா! என்னோட குற்ற



உணர்ச்சியில் இருந்து விடுபடணும்'' மகளின் தலையை வடியவாறு நெகிழ்ந்து கேட்டார் மாணிக்கம்.

''உங்கப்பா! உன்னை பத்திய கவலைகளை மனசுக்குள்ளே வச்சு மறுகுறார். ஏற்கனவே நெஞ்சு வலி வந்து என் மாங்கல்யத்திற்குப் பாதிப்பு வந்துடுமோன்னு பயந்தேன். ஒத்துக்கம்மா! உன்னைப் பத்தின விஷயங்களை எல்லாம் சொன்ன பிறகும் கல்யாணம் செய்துக்க ஒத்துக்கிட்டாராம். அப்படினா! அந்தத் தம்பியோட நல்ல மனசை புரிஞ்சுக்கம்மா!'' பலவித காரணங்களைச் சொல்லி அவளைச் சம்மதிக்க வைத்தனர். தந்தையின் நலம் கருதியும், தங்கையின் எதிர்கால வாழ்க்கையை மனதில் கொண்டும் சம்மதித்தாள்.

கல்யாணமே வேண்டாம் என்ற மனநிலையில் இருந்த மகனிடம் தான் பார்த்த பெண் விதவை என்ற செய்தியை மறைத்து விட்டார். அவள் மீது காதல் கொண்டு சந்தோஷ வாழ்க்கை நடத்தும்போது இதைச் சொல்லிக் கொள்ளலாம் என இருந்து விட்டார். ஆனால்! சில தினங்களாகக் கவனித்துக் கொண்டு தான் இருந்தார். ஒரு சந்தோஷமான சிரிப்போ, சீண்டலோ இல்லாமல் மகன் முகத்தில் உணர்ச்சியற்ற தோற்றம். இசையாவோ வெளியில் சிரித்து பேசினாலும் அவர்கள் இடையே இன்னும் அன்பு மலரவில்லையோ என நினைக்கத் தோன்றியது. சாப்பிட அழைத்தபோது பசியில்லை என தாயம்மாவிடம் இசையா கூறி அனுப்புவது நெருடியது.

''ஏம்மா! சாப்பிடலை...'' கேட்டவாறு வந்த மாமனாரை கண்டு எழுந்தாள். கலைந்த கூந்தலும், அலுங்கி நலுங்கிய தோரணையும் அழுத விழிகளும், விரல்கள் பதித்த

கண்ணங்களும் கன்றிப் போயிருந்ததைக் கண்டு அதிர்ந்தார். எதுவும் பேச முடியாமல் கீழே இறங்கி சோபாவில் அமர்ந்தார், மகனை எதிர்பார்த்து.

உதய் இப்படி அடிக்கும் அளவுக்கு போவான் என சற்றும் எதிர்பார்க்கவில்லை, அவர். சந்தோஷமாய் வைத்துக் கொள்வான் என்றால்? அவள் வேதனையை அதிகப்படுத்தி யிருக்கானே என நொந்தார்.



## 10

போன வேலையை நல்ல விதமாய் முடித்துக் கொண்டு வந்த உதய் தந்தையைக் கண்டு திகைத்தான். "அப்பா! இன்னும் தூங்கலையா?" கேட்டான்.

"உன்கிட்ட பேசத்தான் தூங்காம இருக்கேன்."

"எதுவானாலும் காலையில பேசலாம். ராத்திரி, தூங்கலைனா உங்க உடம்பு தாங்காது." கரிசனையாய் பேசிய மகனிடம் பதில் பேசாமல் அமரச் சொன்னார்.

அவர் எதிரே அமர்ந்தான், மறு பேச்சு பேசாமல்!

"இசையா மீது எந்தத் தப்பும் இல்லை. உன்கிட்டே உண்மையை மறைச்சது, நான்தான். என்ன வேணா அடிச்சிடு. பாவம் அவளைக் கஷ்டப்படுத்தாதே. கல்யாணம் முடிந்து ஒரே வாரத்தில் அதுவும் முதல் இரவுல கணவனை இழக்கிறது எத்தனை பெரிய கொடுமை" மெதுவாய் பேசிய தந்தையைப் புரியாமல் ஏறிட்டான்.



"எனக்கு ஒண்ணும் புரியலை. யாரு கணவனை இழந்தது?" கேள்வியாய் நோக்கினான்.

"இசையாதான்!" அமைதியாய் சொன்னார்.

"வாட்!" அதிர்ந்து எழுந்து விட்டான்.

"உண்மைதான் உதய்." நடந்த விஷயங்களைச் சொல்லி முடித்தார், வேதாச்சலம்.

ஆழ்ந்த அமைதி நிலவியது அங்கே! உதயனின் மனதில் பெரும் புயல் அடித்தது. எதுவும் பேச முடியாமல் மௌனம் அவன் மனதைக் கட்டிப் போட்டு கனக்கச் செய்வதாய்.

"எந்த ஒருவன் மற்றவர்களுக்கு சந்தோஷத்தை மட்டும் தருகிறானோ அவனே நல்ல மனிதன் என பெயர் பட வாழ்கிறான். என் மகனும் நல்ல மனிதன் என நினைத்துத் தான் இதை செய்தேன். தப்பா இருந்தா மன்னிக்கக்கோப்பா" இரு கைகளையும் கூப்பி கேட்க, "அப்பா!" சட்டென கைகளை விலக்கித் தன் முகத்தில் பதித்துக் கொண்டான்.

"ஒரு இளைஞனுக்கு இருக்கக் கூடிய சமூக சிந்தனை கூடிய நல்ல எண்ணங்கள் எல்லாம் உங்களுக்கு இருக்கு. அப்படி எதுவும் எனக்கு இல்லை எனும்போது எனக்கு வெட்கமா இருக்குப்பா.." உடைந்தான்.

அவனையும் அறியாமல் அவன் விழிகளில் ஈரம் கசிந்தது.

இசையாவிற்கு நடந்த வேதனைகளை நினைக்கையில் அவனுக்கு வலித்தது. இதில் எந்தத் தப்பும் அவள் செய்யவில்லையே! மனம் தெளிய தந்தையிடம் உறுதி கொடுத்தான.

"இனி தன் மனைவியின் கண்களில் கண்ணீர் வராது" என்று.

"நீங்க உண்மையை மறைச்சது கூட தப்பில்லைப்பா! என்னா அன்னிக்கு இருந்த என் மன நிலையில் நிச்சயம் இந்தத் திருமணம் நடக்க ஒத்துக்கிட்டு இருக்க மாட்டேன். ஒரு தந்தையாய், தோழனாய், என் மனநிலை புரிஞ்சு நடந்துக்கிட்டதுக்கு ரொம்ப நன்றிப்பா" மனம் நெகிழ அவர் கால்களில் விழ மகனைத் தூக்கி தோளில் அணைத்துக் கொண்டார்.



## 11

நாலே தாவலில் மாடிப் படிகளைக் கடந்து அறையை அடைந்தான். 'கல்யாணமான சில நாட்களிலே ஒரு பெண் விதவைக் கோலம் ஆவறது, எத்தனை கொடுமையான விஷயம் தெரியுமா? அந்த வேதனையை பகிர்ந்துக்கிறது தான் மனசாட்சி உள்ள மனிதனுக்கு அழகு ஆனால்! அந்த வேதனையைக் குறைச்ச நாம வாழ்க்கை தரும்போது இந்த பூமியில மனிதனாகப் பிறந்ததுக்கு அர்த்தம் ஆகும் போது கிடைக்கிற ஆத்ம திருப்தி இருக்கே... அது எல்லோர்க்கும் அமையாது.' தந்தையின் வார்த்தைகள் செவியில் ஓட, 'நீங்க சொல்றது சத்தியமான வார்த்தைகள் தாம்ப்பா...' அவன் உதடுகள் முணுமுணுத்தது.

வெறுந் தரையில் குழந்தையைப் போல் குறுகி படுத்துக் கிடந்த மனைவியின் கோலம் மனதை நெகிழ்த்தியது.



இசையாவின் நிலையோ சொல்ல முடியாததாய். புயலாய் அவன் அடியும், புயலுக்கு பின் மழையாய் அவனின் அணைப்பும் அவளை திருப்பிப் போட்டது. காற்றிலும் மழையிலும் அலைக்கழிக்கப்பட்ட மலரானாள். இன்பத்தையும், துன்பத்தையும் இனம் பிரிக்க முடியாமல் துவண்டாள். தவிப்பும், வேதனையும் தாங்க முடியாமல் தேகம் துவண்டது. ஏற்கனவே ரத்தம் கொடுத்ததால் துவண்டிருந்த தேகம் சுத்தமாய் முடியாமல் போனது. மெல்ல மனைவியின் அருகே வந்தான். உதய் நெற்றியின் ஓரம் விளையாடிக் கொண்டிருந்த முடிசுருளை ஓரமாய் ஒதுக்கி விட்டவனின் கை சுட்டது. அதிர்ந்து புருவம் உயர்த்தியவன் அவசரமாய் கன்னம், நெற்றியில் அழுத்தமாய் கை வைத்தான். காய்ச்சல் தீயாய் சுட்டது. 'சே' தன்னையே கடிந்து கொண்டவனாய் மெல்ல பூவாய் அவளை அணைத்து தூக்கி கட்டிலின் மேல் கிடத்தினான்.

இவள் மலரை விட மென்மையான மனம் படைத்தவள். அது தெரியாமல், அவசரப்பட்டு... எரிச்சலும், கோபமும் வந்தது, அவன் மேல்.

போன் செய்தான் டாக்டருக்கு.

எதுவும் தெரியாத மயக்க நிலையிலிருந்தாள், இசையா.

கணவன் கட்டிலின் மேல் கிடத்தியதோ, டாக்டர் வந்து ஊசி போட்டது, வாயில் மாத்திரை போட்டு கணவன் தண்ணீர் புகட்டியது எல்லாம் கனவில் நடப்பது போல் இருந்தது, அவளுக்கு.

இரண்டு நாட்கள் அவளை அன்பாய் பார்த்துக் கொண்டான், உதய். ஒரு தாய் தன் சிசுவை எப்படிக் கவனித்துக் கொள்வாளோ அந்த மாதிரி கவனித்துக் கொண்டான்.

அவளுக்கோ ஒன்றும் புரியவில்லை. பரிதாபப்பட்டு இதை எல்லாம் செய்கிறானோ! இல்லை, தந்தையின் பார்வைக்காக அப்படி நடந்து கொள்கிறானோ, தெரியவில்லை. அதே சமயம் அவன் காட்டிய பரிவு, பாசம், அணைப்பு, இதெல்லாம் போலித்தனமாய்த் தோன்றவில்லை. எதையும் இனம் பிரிக்க முடியவில்லை, அவளால்!



## 12

இரவு! சாப்பாட்டு வேலை முடிந்து மேலே வந்தாள், இசையா!

பால்கனியில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள். கரு மேகக் கூந்தலில் ஜொலிக்கும் நட்சத்திர ஆபரணங்களை ரசிக்க முடியாமல் மனதில் பலபல எண்ணங்கள் புரண்டது. பிரச்சனைகளைப் பற்றி பேச முடியாமல் மௌன யுத்தம் மனதில் அலை பாய்ந்தது. இன்று! இதை பற்றி பேசணும். முடிவு செய்தவாறு காத்திருந்தாள். அலுவலக விஷயம் பற்றி தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தான், உதய்.

''என் பனியில நின்னுக்கிட்டு'' கேட்டவாறு அருகில் வந்தான் உதய்.



''போய் ரெஸ்டு எடு. இப்பதான் உடம்பு குணமாயிருக்கு'' குரலில் கனிவும், கரிசனையும் தெரிந்தது.

மனதில் இதம் பரவினாலும், ''இல்ல, உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்'' தயங்கியவாறு சொன்னவளை ஏறிட்டான். புருவத்தை உயர்த்தியவாறு என்ன என்பது போல பார்க்க,

''உங்ககிட்ட என்னைப் பத்தின விஷயங்களைச் சொன்னதா, மாமா..'' மேலே பேசியவளைக் குறுக்கிட்டான்.

''இதைப் பத்தி அப்புறமா பேசலாமா! இரண்டு நாளா ஆபீஸ்ல நல்ல வேலை. பைல் எல்லாம் பார்த்து முடிச்சதால ரொம்ப டயர்டா இருக்கு. ப்ளீஸ்..'' என்றவாறு அறைக்குள் நுழைந்தவனை மௌனமாய்ப் பின் தொடர்ந்தாள்.

கட்டிலின் மேல் அமர்ந்தான். அவள் முகத்தை படித்தவனாய், ''ஏதோ சொல்லணும்னு நினைக்கிறே மாதிரி இருக்கு. நான் மனிதன்தான்'' சிறு வருத்தமும் கிண்டலுமாய் சொன்னான்.

''இல்ல... நாளைக்கு அப்பாவும், அம்மாவும் வீட்டுக்கு வர்றாங்க... அவங்க முன்னாடி மட்டும் கொஞ்சம்...'' பேச முடியாமல் தொண்டையை அடைத்தது.

முகம் சிவக்க தலை குனிந்தாள். ''அப்பா! ஹார்ட் பேஷண்ட்'' மெல்ல முணுமுணுத்தாள்.

இனம் புரியாத சுகம் உள்ளே பரவியது, அவனுக்கு. மிட்டாய் கேட்டுக் கெஞ்சும் சிறுமியைப் போல பரிதாபமாய்க் கேட்டவளை இழுத்து அணைத்து தன் காதலையும், மனதில் உள்ள விஷயங்களையும் பகிர்ந்து கொள்ள

மனமும், உடலும் பரபரத்தாலும் அவள் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அமைதி காத்தவனாய் குறும்புத்தனம் விழிகளில் மிதக்க ''எனக்கு எப்படி தோணுதோ, அப்படிதான் நடந்து கொள்வேன். பார்க்கலாம்'' கிண்டலாய் லேசாய் அவளைப் பயமுறுத்தியவாறு விட்டம் பார்த்துப் படுத்தான்.

வழக்கம் போலக் கட்டிலின் கீழே படுக்க முயன்றவளை அழைத்தான்.

''இங்கேயே படுத்துக்கலாம்..'' என்றவாறு கட்டிலைக் காட்ட, தயங்கி நின்றவளை அதட்டினான். ''சொன்னதை செய்'' என.

வாய் நிறைய சிரிப்பை, அடக்கியவாறு திரும்பி ஒருக்களித்துப் படுக்க, அவனைப் பற்றி ஒரு முடிவும் தெரியாத தெரியாத நிலையில் கட்டிலின் ஓரம் ஒதுங்கிப் படுத்தாள். மனம் மட்டும் கனமாய், புரியாத புதிராய்...

மறுநாள்...

மாணிக்கமும், மங்கையர்க்கரசியும் மகளைப் பார்க்க வந்திருந்தனர். கூடவே பரீட்சை முடிந்து லீவுக்காக ஊருக்கு வந்திருந்த சுமித்ராவும் வந்திருந்தாள். முகம் நிறைய புன்னகையுடன் வரவேற்றனர், உதய்யாவும், வேதாசலமும்.

விருந்தும், சிரிப்பும், பேச்சமாய் அமர்க்களப்பட்டது. சாப்பிடும்போது நண்பனுடன் சேர்ந்து பழைய பள்ளி விஷயங்களைச் சிரிப்பும், கலகலப்புமாய் வேதாசலம் கூற அனைவரும் ரசித்து சிரித்தது மட்டுமல்லாமல் நண்பர்களிடையே நடந்த விஷயங்களை தெரிந்து ரசித்தனர்.



இசையாவுக்கு எதையும் நம்ப முடியவில்லை. தன் கணவன் இப்படிப் பேசி, கலகலப்பும், மட்டுமல்லாமல் நகைச்சுவையாகவும் பேசுவான் என தெரிந்தது ஆச்சரியம்.

சுமித்ராவும் கலகலப்பாய் கல்லூரி விஷயங்கள் பற்றி கூறி சிரிக்க வைத்தாள். இடையே ''உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு மாமா... உங்க மனசு மாதிரி நீங்களும் அழகா இருக்கீங்க மாமா!'' வெளிப்படையாய் மனதில் இருந்ததைக் கூறினாள். ''ம்..'' ஏகப் பெருமூச்சுடன் ஓரக் கண்ணால் அருகே நின்ற மனைவியைப் பார்த்தான்.

''சொல்ல வேண்டியவங்க சொல்லலையே!'' என்றவாறு திரும்பினான்.

தேகம் முழுதும் ஒரு படபடப்பு ஓட முகம் சிவக்க கேட்காதது மாதிரி முகத்தை திருப்பிக் கொண்டாள் இசையா.

அதுவும் அனைவரின் மத்தியிலும் அவளைத் தொட்டு பேசுவது, அருகில் நெருங்கி அமருவது, அவளிடம் சகஜமாய் பேசுவது போன்ற விஷயங்களை அவன் செய்யும்போது தடுக்கவும் முடியாமல், சந்தோஷப்படவும் முடியாமல் தவித்துப் போனாள்.

அதுவும் அவள் தந்தை எதற்கோ அவளைத் தேடி வர அதை உணராதவனாய் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். ''அய்யோ! என்ன இது அப்பா வர்றார்... விடுங்க'' முகம் சிவந்தவளாய் அடி குரலில் கூற சட்டென விடுவித்து நகர்ந்தான். நாணமும், கூச்சமும் சேர தலைகுனிந்தவளாய் பேச முடியாமல் நின்றாள்.

நடந்ததைக் கண்டுகொள்ளாதவராய் "அம்மாவும், சுமியும் எங்கேம்மா" கேட்டவரிடம், மெல்ல பதில் சொன்னாள். "தோட்டத்துப் பக்கம் போயிருக்காங்க" என்றவாறு அவரை அனுப்பி விட்டு, கோபமாய் அவனிடம் சென்றாள்.

அவள் வாயைத் திறக்கும் முன் "இதுபோதும்! என் பொண்ணு ரொம்ப சந்தோஷமாக இருக்கா, ஆண்டவனே உனக்கு நன்றி!" மனம் முழுக்க சந்தோஷப்பட்டு இப்படித்தான் நினைச்சிட்டு இருப்பார். உங்கப்பா ஸாரி மாமா, என்றவாறு பேசியவனிடம் மேலே பேச முடியாமல் போனது, அவளால்.

அத்தனையும் நிஜமான வார்த்தைகள்தானே என உணர்ந்தவாறு மௌனமாய் நகர்ந்தாள்.

இன்னும் சொல்லப் போனால் அப்பாவுக்காகத்தானே திருமணம் செய்து கொண்டாள். எப்படி தோணுதோ அப்படி நடந்து கொள்வேன். கணவனின் வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிந்தாலும் எதுவும் தோன்றாமல் மௌனமானாள்.

மகளின் சந்தோஷமான வாழ்வைப் பற்றி தனியே விசாரித்துத் தெரிந்து கொண்டாள், மங்கையர்க்கரசி. "ரொம்ப சந்தோஷமா வச்சிருக்காம்மா, உதய் ரொம்ப நல்லவர்ம்மா" தாயிடம் கூறினாலும் அது உண்மைதானே என இன்னொரு மனம் கூறியது.

மகளின் கைகளைப் பற்றி நெகிழ்ந்த மங்கையர்க் கரசியின் விழிகள் கசிந்தது, சந்தோஷத்தில். இதுபோதும்! ஆண்டவன் கண் திறந்திட்டான், என்றவாறு கணவரிடம் நகர்ந்தாள்.



"அப்புறம் மாமா! சுமியோட படிப்பு முடியப் போவுது. மேலே படிக்கப் போறாளா! இல்லை கல்யாணம் பண்ற திட்டம் இருக்கா!" மெதுவாய்க் கேட்டான்.

"அவ இஷ்டம் மாப்பிள்ளை. ஏற்கனவே ஒரு பெண் பேச்சைக் கேட்காமல் பட்டது போதும்..." அடிபட்ட வேதனை தெரிந்தது, அவர் பேச்சில்.

"சுமி! உனக்கு விஷயம் தெரியாதா!" தனியே கேட்டான் அவளிடம்.

"என்ன விஷயம் மாமா..." புரியாமல் ஏறிட்டாள்.

"உன் ஆளுக்கு அதான்! சுரேஷுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி அட்மிட் பண்ண விஷயம்தான்..." பேசியவாறு அவள் முகத்தையே உன்னிப்பாய்க் கவனித்தான்.

சட்டென விழிகள் கசிய "எனக்கு எதுவும் தெரியாதே. அவர்க்கு என்ன ஆச்சு? உயிருக்கு ஒண்ணுமில்லையே" படபடத்தவளை அமைதியாய் இருக்கச் சொன்னான்.

"பயப்படாதே! உயிருக்கு ஒரு ஆபத்தும் கிடையாது" என்றதும் இயல்பானாள்.

தன் காதலை மறைக்க முயன்றவாறு, "உங்களுக்கு எப்படி தெரியும். அக்கா சொன்னாங்களோ?" கேட்டாள்.

"அது முக்கியம் இல்லை. நீ இங்கே வர்றதா சொல்லிட்டு சுரேஷை கவனிச்சுக்க. உன் காதலை சேர்த்து வைக்க வேண்டியது என் பொறுப்பு." உதய் பேச பேச நெகிழ்ந்தாள்.

"ரொம்ப தேங்க்ஸ் மாமா" என்றவாறு அவன் கைகளைப் பற்றி விழிகளில் வைக்க முயல, "ஏய்! என்ன இது என்

"தங்கையா இருந்தா இதைச் செய்ய மாட்டேனா!" என்றவாறு அவன் தலையை வருட இசையாவின் பார்வையில் இருவரும் விழ கோபமும், அப்படி என்ன முதல் சந்திப்பிலேயே என்ற ஆர்வமும் ஒரு சேர விழுந்தது. இசையாவின் மனதில்.

கணவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் இசையா. அனைவரையும் சந்தோஷமா வழியனுப்பி வைத்துவிட்டு, வெளியே சென்றவன் இன்னும் திரும்பவில்லை. அப்படி என்ன பேசியிருப்பான், சமியின் விழிகள் கசிந்தது போல் தோன்றியதே. என்னைப் பத்தி ஏதாவது கேட்டானோ! எதுவும் புரியவில்லை.

"ஹலோ! என்ன தீவிர சிந்தனை" கணவனின் குரல் காதில் கேட்க அரண்டு திரும்பினாள். அவளை நெருங்கி அமர்ந்தான். மெல்ல நகர்ந்தவளை மேலும் உரசியவனை அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

முகத்தில் குறும்புத்தனம் பூக்க மூடியிருந்த உள்ளங்கைகளை நீட்டினான். "திறந்து பார்" என்றவாறு.

புரியாமல் ஏறிட்டாள், மௌனமாய். அவனே கைகளைத் திறந்தான். வலிமையான கையில் அவள் அடகு வைத்த அழகான செயின் மின்னியது. இது எப்படி? அதிர்ந்து போனாள். சுரேஷை எப்படி மறந்தாள். அவனுக்கு உடம்பு சரியில்லாதது போன விஷயங்களால் மறந்திட்டாளா! குற்ற உணர்வில் மனம் சாடியது. என்னாச்சோ, இப்படி சிறுபிள்ளைத்தனமாய் நடந்துக்கிட்டாளே! மனைவி முகத்தில் தெரிந்த குழப்பமான உணர்வுகளைப் படித்தவனாய் பேச ஆரம்பித்தான்.



"பயப்படறதுக்கு ஒன்றுமில்லை. சுரேஷ் இப்ப நல்லா இருக்கான். இன்னும் இரண்டு நாள்ல டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்களாம்" பேசியவாறு அவள் கைகளை எடுத்து தன் கைக்குள் மூடிக் கொண்டு மீண்டும் பேசினான்.

இனியும் என்னால காத்திருக்க முடியாது. அதனால நம எல்லாத்தையும் பேசி தீர்த்துக்கலாம். மனம் படபடத்து பதறியது. கையை உருவவும் முடியாமல் கணவனின் கைக்குள் இருக்கும் சுகத்தை அனுபவிக்கவும் முடியாமல் தவித்தாள்.

அவள் மௌனத்தையே சம்மதமாய் எடுத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான். "உனக்கு நடந்த வேதனையை பத்தி அந்த நேரத்துல அப்பா மறைச்சது கூட நல்லதுதான். ஏன்னா! அப்ப இருந்த மனநிலையில் கண்டிப்பா, உன்னை மிஸ் பண்ணியிருப்பேன். தேங்க் காட்!"

கணவனின் வார்த்தைகளில் கனிவும், காதலும் தெரிந்ததை உணர்ந்தாள். இதயம் எகிறி குதித்தது. மெல்ல கையை உருவிக் கொள்ள அவன் தடுக்கவில்லை.

"மறுமணம் என்பது இப்ப, எல்லாம் சகஜமான விஷயம். கையில குழந்தையோட, கல்யாணம் பண்ணிக்கிறவங்க எத்தனையோ பேர். அதுவும் ஊனமுற்றோருக்கு வாழ்க்கைத் தர்றவங்களுக்கு என் தலை தாழ்த்தி வாழ்த்துவேன். இனி! பழசை பத்திபேச வேணாம். புது வாழ்க்கையை ஆரம்பிக்கப் போறோம்..." குறும்பாய் பேசிய கணவனின் விழிகளில் மின்னியதைக் கண்டு தேகம் சில்லிட்டது. இதை எப்படி புரிய வைப்பேன். இனம் புரியாத பயம் பரவியது.

''அன்னைக்கு உன்னை அடிச்சது கூட சுரேஷை உன் காதலனா நினைச்சு. அதை என்கிட்டே மறைச்சதா, நினைச்சு. ஆனா! அதன் பிறகு என்னை உணர்ந்தேன். அதுவும் காய்ச்சலில் நீ பட்ட பாடு இருக்கே.'' விழிகளை மூடித் திறந்தான்.

''எனக்கே வந்த மாதிரி தவிச்சேன். உன் மேல எனக்கிருந்த உண்மையான காதலை தெரிஞ்சுக்கிட்டேன்!'' உணர்ச்சிகள் தெறிக்கப் பேசினான்.

கூடை நிறைய ரோஜாப்பூவைக் கொட்டியது போல சிலிர்த்து மகிழ்ந்தாள். தும்பியைப் போல மனம் எகிறி வானத்தில் பறந்தது. போதும் இதுபோதும் இனி! எதுவும் இவளுக்குத் தேவையில்லை, ஆனால்... ''நானும் உங்களை நேசிக்கிறேன். எப்போது எந்த சந்தர்ப்பத்தில் என எனக்குத் தெரியவில்லை. தாயைப் போலக் கவனித்துக் கொண்டீர்களே, அப்போதா, இல்லை என் குடும்பத்தாரிடம் அன்பாய், மருமகனாய் இல்லாமல் மகனைப் போல் நடந்துக் கொண்டீர்களே, அப்போதா என தெரியவில்லை. ஆனால்.. நான் நேசிப்பது நிஜம்'' வார்த்தைகள் வெளிவராமல் தொண்டையை அடைத்தது.

''என் மனைவிக்கு ஒரு கஷ்டம் என்றால் அது எனக்கும் தானே! சுரேசைச் சந்தித்தேன். அப்பதான் தெரிஞ்சுக் கிட்டேன், சுரேஷும் சுமித்ராவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்க. அந்த காதலுக்கு உங்கப்பா சம்மதிக்கணும். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சாதான் இதைப் பத்தி பேசணும்னு சுரேஷும், சுமித்ராவும் முடிவு பண்ணி யிருக்கிற விஷயமும் தெரிஞ்சுக்கிட்டேன். எத்தனை நல்ல மனசு சுரேஷுக்கும், சுமித்ராவுக்கும். அவங்களை சேர்த்து



வக்கிறது நம்ம கடமையில்லையா! அதான் சுமிகிட்டே சொன்னேன். சுரேஷைப் போய்ப் பார்க்கச் சொல்லி. நான் சொன்னா கண்டிப்பா மாமா ஒத்துக்குவாருனு, நினைக் கிறேன். சரிதானே'' கேட்டவாறு அவள் முகம் பார்த்தான்.

'ஓ! அதைத்தான் சுமி கிட்டே சொன்னானா?' பதில் கிடைக்க மனம் தெளிந்தது.

''என்ன ஒண்ணும் பேச மாட்டேங்கிற!'' கேட்டான்.

விதவைப் பெண்ணுக்கு வாழ்வு கொடுத்த மருமக னாயிற்றே! எது சொன்னாலும் கேட்பார்! மனதில் தோன்றி யதை பேச முடியாமல் தலை ஆட்டினாள். கணவனின் மனமும், குணமும் புரிய மனம் நெகிழ்ந்தாள். ஆனால்! தன்னை தொடும் நேரம் அவனுக்கு என்னாகுமோ? தப்பான கற்பனையில் முகம் அச்சத்தில் வெளுத்தது.

''அப்புறம்! நாளன்னைக்கு நாம ஹனிமூன் டிரிப் போறோம். நீ என்ன என்ன ஊர் பார்க்கணும்னு சொல்லு. அதன்படி டிக்கெட் ரிசர்வ் பண்ணணும்...'' பேசிக் கொண்டே அறைக்குள் நுழைந்தவனை பயத்துடன் பின் தொடர்ந்தாள். சட்டையை கழற்றி மாட்டியவாறு திரும்பினான்.

சட்டையில்லாத அவன் கட்டுமஸ்தான தேகம் அவள் விழிகளை நிறைக்க ஆசை தீர ரசிக்க முடியாமல் கணவனின் பார்வை விழ தலை குனிந்தாள், மௌனமாய்.

மனைவியின் முகத்தில் சந்தோஷமோ, சிலிர்ப்போ, எதுவும் இல்லாமல் சலனமற்று இருந்தவளை தோளை தொட்டு குனிந்திருந்த முகத்தை நிமிர்த்தினான்.

''ஏய்! என்னாச்சு உனக்கு. என்னைப் பிடிக்கலையா?'' வலியும் வேதனையும் அவன் கேள்வியில்...

எத்தனை நல்ல மனம் படைத்த கணவன். ஆனால்! அதற்கு மேல் தாங்க முடியாமல் அவன் மார்பில் விழுந்து அழ ஆரம்பித்தாள். அழுகையினூடே மனதை போட்டு உடைத்தாள்., ''நானும்தான் உங்களை விரும்பறேன். ஆனா, உங்களுக்கு ஏதாவது ஆயிடுமோன்னு பயப்படறேன். உங்களுக்கு ஏதாவது ஒன்னுன்னா என்னால தாங்க முடியாது. அதுக்குப் பிறகு நான் உயிரோட இருக்க..''

''என்ன உளர்றே!'' கோபமாய் எகிறினான்.

''ஆமாம்! என்னைத் தொட வந்த நேரத்துலதான்... நான் ராசியில்லாதவ. குடும்ப வாழ்க்கைக்கு ஏத்தவளில்லை..'' கதறிக் கண்ணீர் விட்டவளின் மனம் புரிந்தது. அவனுக்கு.

''அசடு... நடந்ததுக்கு நீ காரணம் இல்லை. தாழ்வு மனப்பான்மையால உன்னைக் குழப்பிக்காதே..'' பேசியவாறு கட்டிலின் மீது அமர வைத்து தானும் அமர்ந்தான்.

கணவனின் நம்பிக்கை தரும் வார்த்தைகள் அவள் மனதைத் தெளிவுபடுத்துவதாய்...

''எனக்கு ஆயுக கெட்டி. ஒரு டஜன் பேரப் பிள்ளையாவது வேணும்னு அப்பா சொல்லியிருக்கார்..'' அவன் பேச்சில் முகம் சிவக்க தலைகுனிந்தவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் மனம் உணர்ந்து யோசிக்க விடாமல் தன் மனைவியாக்கிக் கொண்டான், உடலும் உயிரும் இயக்க...



அங்கு இரு உடல்கள் இணைந்தது என்பதைவிட இரு உயிர்கள் ஒன்றானது.



## 13

மகனிடம் தெரிந்த மாற்றமும், மருமகளின் முகத்தில் தெரிந்த சந்தோஷமும், நாண சிவப்பும் புரிய சந்தோஷமாய் இருந்தது, வேதாசலத்துக்கு. ''என்னங்க எழுந்திருங்க'' தூங்கும் கணவனின் அழகை, ஆண்மையை ரசித்தவாறு எழுப்பினாள்.

''இன்னும் கொஞ்ச நேரம்..'' சிறு பிள்ளையாய் சிணுங்கியவாறு திரும்பிப் படுத்துக் கொண்ட கணவனை பொய் கோபத்துடன் இழுத்தாள்.

''எழுந்திருங்க..''

அப்படியே மேலே போட்டுக் கொண்டு அணைத்தான். கைகள் இடையில் விளையாட முகம் மனைவியின் உதட்டை உரசியது.

''என்னங்க... இது! இப்பதான் குளிச்சிட்டு வந்தேன்..'' சந்தோஷமும், நாணமும் சேர விலக முயன்றாள்.

''இன்னொரு தடவை குளிக்கலாமே! எனக்கு துணையாய்'' சொன்ன கணவனிடம் பிடுங்கிக் கொண்டு நகர்ந்தாள். ''சீக்கிரமா வாங்க, மாமா கூட ரெடி ஆயிட்டார்.'' பேசியவாறு கணவனின் பொய்க் கோபத்தை ரசித்தவாறு நகர்ந்தாள், இசையா.

குளித்து முடித்து கிளம்பி வந்தவன், எதிரே வந்த மனைவியின் அழகைக் கண்டு அசந்துப் போனான், உதய். அரக்கு வண்ண பட்டுச் சேலையில் அழகில் நிறைகுடமாய் முகம் மின்ன தேகத்தில் கூட ஒரு மினுமினுப்பு கூடி இருக்க தேவதையாய் ஜொலித்தாள்.

''என்னங்க இது! இப்படிப் பார்க்கிறீங்க...'' வெட்கத்துடன் முணுமுணுத்தாள்.

''நேத்துதான் கல்யாணம் ஆன மாதிரி இருக்கு. வர வர உன் அழகு கூடிட்டே போகுது. இசையா. ஆறு மாசம் ஆன மாதிரியே தெரியலை. நான் ரொம்ப குடுத்து வச்சவன்...'' மனைவியை அணைத்துக் கொண்டான்.

''கொடுத்து வச்சது நான்தான்... உங்களைக் கணவரா அடைய போன பிறவியில் ஏதோ புண்ணியம் செய்திருக்கேன்'' விழியில் நீர் கசிந்தது. அவளுக்கு. மனம் நிறைய ஆண்டவனுக்கு நன்றி சொன்னாள். அதற்கு காரணமான கணவனிடம் காதில் விஷயத்தை முகம் சிவக்கக் கூறிய மறு விநாடி சந்தோஷத்தில் மனைவியை தூக்கி சுத்தினான்.

''டேய் உதய்..! இன்னுமா கிளம்பலை..'' கேட்டுக் கொண்டே வந்த தந்தையைக் கண்டதும் மனைவியைக் கீழே இறக்கினான். அசடு வழிய குங்குமமாய் சிவந்த முகத்தைக் கணவனின் தோளில் மறைத்துக் கொண்டாள் இசையா.

''அப்பா! நீங்க தாத்தாவாயிட்டீங்க..'' மகனின் சந்தோஷ வார்த்தையில் மனம் குளிர்ந்து காலில் விழுந்த மருமகளை மனமுருக ஆசீர்வதித்தார், வேதாசலம்.





14

கல்யாண மண்டபம், உறவினர்களாலும், மற்றவர்களும், குழுமியிருக்க வாசலில் நின்று வருபவர்களை வரவேற்றனர். மாணிக்கமும், மங்கையர்க்கரசியும் மாமனாரிடம் பேசி சுமித்ரா, சுரேஷ் இருவரின் காதலுக்கு சம்மதம் வாங்கியது மட்டுமல்லாமல் கல்யாண செலவு எல்லாத்தையும் அவனே ஏற்றுக் கொண்டான்.

''இல்லை மாப்பிள்ளை அது வந்து...'' தயங்கி தடுத்தவரை குறுக்கிட்டான் உதய்.

''இல்லை மாமா! கண்டிப்பா இதுக்கு ஒத்துக்கணும். எனக்கு ஒரு தங்கை இருந்தா செய்ய மாட்டேனா!'' ஒரே வார்த்தையில் மாணிக்கத்தின் வாயை அடைத்தான்.

முகூர்த்த நேரம் நெருங்க சுமித்ராவின் அழகு கழுத்தில் மங்கல நாணை கட்டினான், சுரேஷ். பெரியவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம், வாங்கினர், மணமக்கள்.

உதய்யின் காலில் விழ வந்த மணமக்களை தடுத்தான் உதய்.

''என்ன இது?''

''இந்தக் கல்யாணம் நடக்க முக்கியக் காரணம் நீங்கதான் எங்கண்ணன் இறக்கலை. உங்க ரூபத்துல அவர் வாழறார். கண்டிப்பா! உங்க ஆசீர்வாதம் எனக்கு வேணும்..'' சடாரென விழுந்த மணமக்களை தூக்கி நிறுத்தினர், உதய்யும், இசையாவும்.

''என்னோட ஆசீர்வாதம் எப்போதும், உங்களுக்கு உண்டு. இது எங்களோட பரிசு'' என்றவாறு கார் சாவியை நீட்டினான் உதய்.

''வெளியே கார் நிக்குது. முதல்ல கோவிலுக்குப் போயிட்டுவாங்க..''

பேச முடியாமல் தழுதழுப்பில் சுரேஷ் நெகிழ்ந்து போய் நின்றான். ''எவ்வளவோ செஞ்சிருக்கீங்க... நீங்களும் அண்ணியும்.. அன்னைக்கு ரத்தம் கொடுத்து...'' மேலே பேச முயன்றவனைக் குறுக்கிட்டான் உதய்..

''சந்தோஷமான நேரத்தில பழசை எதுக்கு... விடு... சுரேஷ்'' என்றவாறு தோளில் அணைத்து நிறுத்தினான்.

நேரம் கடந்தது. மனமும், வயிறும் வாழ்த்த வந்த உறவினர்களும், சுற்றத்தாரும் கிளம்பியிருந்தனர்.

''நல்லபடியா கல்யாணம் முடிஞ்சு மணமக்களும் கோவிலுக்குக் கிளம்பியாச்சு. நாம வீட்டுக்கு கிளம்பலாமா..'' கேட்ட கணவனைப் புன்சிரிப்போடு ஏறிட்டாள்.

''இருங்க அம்மாகிட்டே கொஞ்ச நேரம் பேசிட்டு வாரேன்..'' வேகமாய் நகர்ந்தவளை கைப்பிடித்து நிறுத்தினான்.

''என்ன இது இவ்வளவு வேகமா, பொறுமையா போ... என் பிள்ளைக்கு வலிக்கப் போவுது..'' சிரித்தவாறு பேசிய கணவனை குறும்புத்தனம் மின்னும் விழிகளால் ஏறிட்டாள்.

''வலிச்சா, தூக்கி இடுப்பிலே வச்சக்கங்க'' சும்மா விளையாட்டாய் கூற, சட்டென மனைவி எதிர்பாரா



வண்ணம் இடுப்பில் இரு கைகளை இணைத்துக் கொண்டான். மனைவியை மலர் மாலையை போல அணைத்து.

''அய்யோ விடுங்க! பகல்லே, இது வீடு இல்லை'' வெட்கத்துடன் முணுமுணுக்க,

''என் மனைவியை நான் எப்படி வேணும்னாலும் தூக்குவேன்'' என குறும்பு பேசியவன் சட்டென அவளைக் கீழே இறக்கினான்.

எதிரே வந்த மாமனாரையும், தந்தையையும் பார்த்து, வெட்கத்துடன் நகர்ந்த மனைவியை அசடு வழிய பின்தொடர்ந்தவனைப் பார்த்து சிரித்தனர். மாணிக்கமும், வேதாசலமும் இருவரின் மனமும் சந்தோஷத்தில் நெகிழ ஆண்டவனுக்கு நன்றி கூறியவாறு நகர்ந்தனர்.



# நேசம் தந்த நெஞ்சமே...!

1



அமைதியான அதிகாலை பொழுது. மொட்டாய் இருக்கும் அரும்பு மெல்ல மலர்ந்து வாசத்தையும் மென்மையையும் பூக்களாய் விரிய ஆயத்தமாய் கொண்டிருக்கும் இனிமையான தருணத்தில் அந்த பிரபல ஒர்க்கிங் வுமன் ஹாஸ்டல் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

வெளியூரில் இருந்து வந்து தங்கி படிக்கும் பெண்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள், எல்லோரும் தங்கள் காலை வேலைகளை இயந்திரம் போல் செய்து கொண்டு இருந்தனர். குளிப்பது முதல் சாப்பிட்டு பஸ் பிடிப்பது வரை எல்லாத்திலும் வேகம். மிஷின் போல ஆயிட்ட மனித வாழ்க்கையில் சக்கரம் போல் சுழன்றனர். ஹாஸ்டல் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தனர், வானதியும், சுமித்ராவும். இருவரும் ஒரே அறையில் தங்கியிருப்பவர்கள்.

நெருங்கிய தோழி ஆன போதிலும் வெவ்வேறு அலுவலகத்தில வேலை செய்பவர்கள். கிளிப் பச்சை



சேலையில் வானதியின் அழகு கூடி தெரிந்தது. சிவந்த அழகு முகம். சின்னதாய் நாசி. ரோஜா இதழை ஒட்ட வைத்தது போன்ற இதழ்கள். இளமையின் வனப்பு அளவாய், அழகாய் மேனியில் கோலம் போட்டிருக்க, அருகே செல்லும் ஆண்கள் ஒரு நிமிஷம் தங்கள் மனைவியை மறந்து ஏக்கத்தில் பெருமூச்சு விடுவார்கள். திருமணமாகாத ஆண்கள் இப்படி ஒரு பெண் தனக்கு மனைவியாக வர மாட்டாளா? என ஏங்கியவாறு செல்வார்கள்.

சுமித்ராவும் அழகுதான். நடுத்தர வர்க்கப் பெண் போன்ற தோற்றம். அமைதியும், பொறுமையும் விழிகளில் தோன்றும். விழுப்புரத்தில், தாய், தந்தை, தம்பி, தங்கையை விட்டு சென்னையில் வேலை கிடைக்க ஹாஸ்டலில் தங்கி வேலை பார்த்து வீட்டு சுமையை சுமக்கிறாள். ஒரு விபத்தில் தந்தையின் கால் துண்டாகி, வீட்டோடு இருக்க, குடும்ப பாரம் மூத்த பெண்ணான இவள் மேல். அதுகூட சுகமான சுமைதான் என்று ஏற்றுக் கொண்டவள்.

"என் வானதி! சரியாகவே சாப்பிடலை. நான் இரண்டு நாளா உன்னைக் கவனிச்சிட்டுதான் இருக்கேன். ஒரு மாதிரியா முகமே சரியில்லை? பழசையே என் நினைச்சு உன்னை வருத்திக்கிறே. எல்லாம் நல்லதுக்குத்தான்னு நினைக்க ஆரம்பி" கேள்வியோடு ஆரம்பித்து பதிலையும் கூறிய சுமியை ஏறிட்டாள்.

"நானும் மறக்கணும்னுதான் நினைக்கிறேன். என்னால முடியலை, சுமி. அதுவும் நேத்து ஆபீஸ் முடிஞ்சு வரும்போது டிராபிக்ல ராகவனைப் பார்த்தேன். பின்னாடி அவரோட மனைவி..." சேர்ந்து மனம் கனமாய் கனக்க வார்த்தைகளில் வலி தெரிந்தது. புது பைக், புது மனைவி, டி.வி.யில் வரும் விளம்பரம் போல் சுமி சொல்லிக் காட்ட

பட்டென சிரித்து விட்டாள், வானதி.

இறுக்கமான அந்த சூழ்நிலை இயல்பாய் மாறியது. "எல்லாம் மாமனார் வீட்டுல வாங்கி கொடுத்து இருப்பாங்க" பேசிய சுமி சட்டென உதட்டை கடித்துக் கொண்டாள்.

"நானே மறுபடியும் உனக்கு நினைவுபடுத்த ஆரம்பிக்கிறேனே...." பேசிக் கொண்டே வந்ததில் பஸ் நிறுத்தம் வர மேட்டில் ஏறி நின்றனர். சுமி செல்லும் பஸ் உடனே வர வானதிக்கு பை சொல்லிவிட்டு ஏறிக் கொள்ள தான் செல்லும் பஸ்ஸை எதிர்பார்த்து காத்திருக்க ஆரம்பித்தாள். ஒரு பெருமூச்சை வெளியிட்டவாறு, காலத்தின் வேகம் மனிதர்களை எப்படியெல்லாம் மாற்றி வைக்கிறது.. ஏதேதோ எண்ணங்களில் மனம் உழல இன்னும் பஸ்ஸைக் காணோமே... நினைத்தவாறு மணி கட்டை திருப்பி டயம் பார்த்தவள், சிறுமியின் குரல் கேட்டு கலைந்தாள்.

பலூனை ஒரு கையில் பிடித்தவாறு தாயின் கையை பற்றியவாறு தொண தொணவென பேசியவாறு நின்ற நான்கு வயது சிறுமியை பார்த்து புன்னகை பூத்தாள்.



குழந்தைகளைப் பார்த்தாலே மனசு இனிமையும், மென்மையுமாய் மாறி தானும் குழந்தையாய் மாறி குதூகலிப்பது போன்ற சந்தோஷம்.

யாழ் இனிது, குழல் இனிது, குழந்தை மழலை மொழியை கேட்காதவர்கள். எப்போதோ படித்த ஞாபகம் நினைவில் ஓடியது. வானதிக்கு. வேடிக்கை பார்த்தவாறு பலூனை விட்டுவிட்ட சிறுமி தாயின் கையை உதறியவாறு பலூனைப் பிடிக்க ரோட்டில் இறங்கி ஓட, அருகில் நின்ற வானதி திடுக்கிட்டவாறு இரண்டடி கீழே இறங்கி சிறுமியை இழுத்துப் பிடிக்க வேகமாய் வந்த கார் டயரை தேய்த்தவாறு கிரீச்சிட்டு நின்றது. காரிலிருந்து இறங்கினான் அந்த இளைஞன். கண் மூடி திறப்பதற்குள் நடக்க இருந்த விபத்தை தடுத்த அவளின் நிலை பதட்டமாய் இருந்தது. சிறுமியின் கையைப் பிடித்தபடி நிற்க, "அறிவிருக்கா, இந்நேரம் பிரேக் போடலைனா, என்ன ஆயிருக்கும். மை காட்!" தன் தலையை பற்றி உலுக்கினான்.

"வசவசன்னு பெத்துக்க வேண்டியது. அப்புறம் வளர்க்கறதில அலட்சியம் காட்டறது" முணுமுணுத்தான். முகம் கருக்க கோபமாய் பேசிக் கொண்டே போனவனை இடைமறித்தாள் அந்தப் பெண். குழந்தையின் தாய் "தப்பா நினைச்சுக்காதீங்க! என் பொண்ணு, பலூனை எடுக்க றேன்னு கையை உதறிட்டு ஓடிட்டா, ஒரு நிமிஷம் புரியாம பதட்டத்திலே அப்படியே நின்னுட்டேன். ரொம்ப நன்றிமா!" சொல்லியவாறு அந்தப் பெண் மகளை அழைத்துக் கொண்டு போன ஆட்டோவை நிறுத்தி ஏறிக் கொண்டாள்.

முகத்தில் அசடு வழிய என்ன பேசுவது என புரியாமல் தடுமாறினான். ''ஸாரிங்க! முதல்லே இதை சொல்லியிருக் கலாமே! நான் கூட நினைச்சேன். அதுக்குள்ளேயே கல்யாணம் ஆகி இத்தனை பெரிய பொண்ணான்னு.'' உதட்டில் குறும்பு மிளிர பேசியவனுக்கு பதில் சொல்லாமல் தான் நின்ற இடத்திலேயே மறுபடியும் நின்று கொண்டாள். மௌனம் காத்தவளாய்... அவன் பேச்சைக் காதில் வாங்காதவளாய்!

'என்ன! இவ்வளவு பேசியும் ஒரு மாற்றமும் காணோம். ஒருவேளை வாய் பேசாதவளா?' தனக்குள் பேசியவன், ''வாங்களேன்! உங்களை டிராப் பண்றேன்...'' மரியாதை யாய் கேட்டான்.

''நோ தேங்க்ஸ்..!'' மெல்ல முணுமுணுத்தவள், பேருந்து வர வேகமாய் சென்று ஏறிக் கொண்டாள்.

## 2



டைனிங் டேபிள் முன்பு அமர்ந்தி ருந்தார், உலக நாதன். தொழிலதிபர். நான்கு ஐந்து மில்களுக்கு சொந்தக்காரர். லெதர் பிஸினஸ் ஏற்றுமதி. எல்லா தொழிலையும் சில மாதமாய் அவரு டைய ஒரே மகன் ரிஷிதான் பார்த்துக் கொள்கிறான். அவருக்கு உடல்நிலை சரி இல்லாததால் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். கமலம் கணவருக்கு டிபனை பரிமாற, மாடியிலிருந்து இறங்கி கொண்டிருந்த மகனை அழைத்தாள்.



''வா ரிஷி! உனக்கும் சாப்பாடு வைக்கிறேன்..'' அவனுக்கு ஒரு தட்டில் எடுத்து வைக்கத் துவங்கினாள்.

கண்ணை உறுத்தாத வண்ண கலரில் போட்டிருந்த சட்டையின் கைகளை மடித்தவாறு வந்து அமர்ந்தான், ரிஷி. அவள் முகமே அவனை இம்சை செய்தது.

இட்லியைப் பிட்டு சாம்பாரில் தோய்த்து வாயில் வைத்தான்.

''அடுத்த வாரம் படிப்பை முடிச்சுட்டு பிரியா வர்றா. விஸ்வநாதன்கிட்டே பேசி நிச்சயதார்த்தம் முடிவு பண்ணலாமா?'' கேட்க,

நினைவெல்லாம் அவளே வியாபித்திருக்க மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலை பாய்ந்தது ரிஷிக்கு.

''மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி. நாம ஏற்கனவே பேசின விஷயம் தானேங்க... பாருங்க இப்பவே! கனவுல மிதக்கிறான்...'' கமலம் சிரிக்க, கூட அவரும் சிரிக்க புரையேறியது.

இருமி, சட்டென இயல்புக்கு திரும்பினான்.

''மருந்து, மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிடறாராம்மா! நான் வேணும்னா, டாக்டர் அங்கிளை வரச் சொல்லட்டுமா?''

''அதான் தினமும் போன்லே பேசி அறுக்கிறானே! நேர்ல வேறயா!'' கிண்டலாய் பேசி சிரித்தாறு எழுந்தார், உலகநாதன்.

விசுவநாதனும், டாக்டர் குமாரசாமியும் அவருடைய இணைபிரியாத நண்பர்கள். விசுவின் மகள் பிரியாவை ரிஷிக்கு மணமுடித்து நண்பனை சம்பந்தியாக்கிக் கொள்ளணும்னு விருப்பம். ரிஷியும் பிரியாவை விரும்புகிறான் என்றே நினைத்து கொண்டு இருந்தார். எம்.பி.ஏ. படிக்க டெல்லி செல்லும் வரை அடிக்கடி வீட்டுக்கு வருவாள். அவனிடமும், கமலத்திடமும் பாசமாய் பழகுவாள். குறும்புத்தனம் கொண்ட அழகு பெண். ரிஷி கூட அவளை அழுக்கு மண்டுனு அடிக்கடி கிண்டல் பண்ண, அவன் தாயிடம் புகார் சொல்ல தஞ்சம் அடைவாள்.

''அவன் அப்படித்தான், கல்யாணம் ஆனதும் பாரு. நீதான் அவனை மிரட்டப் போறே. கை பொம்மையாய் மாறிடுவான்'' மகனை செல்லமாய் திட்டியவாறு சிரித்தாள், கமலம்.

''அப்பா! நான் ஆபீஸ் கிளம்பறேன்'' என்றவாறு எழுந்தான். ஆபீஸ் விஷயமாய் சில விஷயங்களை தந்தையிடம் தெளிவுப் படுத்தி கேட்டுக் கொண்டான். தடதடவென மாடிப்படி ஏறியவனை அழைத்தார்.

''சாயங்காலம் சீக்கிரம் வந்துடு. விசு வீட்டுக்குப் போய் பேசிட்டு வந்துடலாம். சம்பிரதாயமா அடுத்த மாசம் பிரியா வந்ததும் நிச்சயதார்த்தத்தை வச்சுக்கலாம்.'' பேச பேச திகைப்பாய் கீழே இறங்கினான்.

லஞ்ச் டைம் வர அரை நாள் விடுப்பு எழுதி மனேஜரிடம் கொடுத்துவிட்டு வெளியே வந்தாள், வானதி.



அருகில் போன ஆட்டோவை அழைத்து ஏறிக் கொண்டாள். அரை மணி நேர பயணம். ஓடு போட்ட அந்த சிறிய வீட்டின் முன்பு ஆட்டோ நிற்க இறங்கிக் கொண்டாள். பணத்தைக் கொடுத்து விட்டு உள்ளே நுழைந்தாள்.

அவளை எதிர்கொண்டாள் ராஜம். ஐம்பது வயது மதிக்கத்தக்க தோற்றம். வாயில் சேலையும், கனிந்த முகமும் எளிமையும், பொறுமையும் காட்டியது. ''வாம்மா! எப்படியிருக்கே'' பரிவாய் கேட்டாள்.

''ம்... நல்லாயிருக்கேன். ஆர்த்திக்கு எப்படியிருக்கு டாக்டர் கிட்டே போனீங்களா? என்ன சொன்னார்?'' கேட்டவாறு ராஜத்தைத் தொடர்ந்தாள்.

''நேத்து காட்டினேன். மருந்து, மாத்திரை கொடுத்தார். ஏதோ ஸ்கேன் எடுக்கணும்னு, என்னென்னமோ சொல்றார். எனக்கு ஒண்ணும் புரியலை. பயம்மா இருக்கும்மா. என் பேத்தி என்னை விட்டுட்டு போயிடுவாளோன்னு?'' விழியில் நீர் கசிய குரல் தழுதழுக்க பேசியவளிடம் ஆறுதலாய் பேசினாள், வானதி.

மனம் கனத்தாலும் மறைத்தவாறு ''அப்படி எல்லாம் ஒண்ணும் ஆகாது. கவலைப்படாதீங்க. இன்னும் கொஞ்ச நாள்ல ஆர்த்தியோட அம்மா வந்துடுவாங்க.'' அறைக்குள் நுழைந்தாள், பேசிக் கொண்டே!

மெலிந்த சரீரமும், அழகு முகமும் வாடி, வதங்கிய ரோஜாவைப் போல் பாயில் படுத்திருந்தாள், ஆர்த்தி.

இந்த வயது சிறுமி. தூங்கும் அவளைத் தட்டிக் கொடுத்தாள்.

ஏதேதோ சிந்தனை, எண்ணங்கள் மனதை அழுத்த பாரமாய் தோன்றியது. பெண்ணாக பிறந்தாலே பிரச்னை இல்லாமல் இருக்க முடியாது என்றே தோன்றியது.

"இந்தாம்மா!" காபி டம்ளரை நீட்ட, "உங்களுக்கு எதுக்கு சிரமம்..." கேட்டவாறு வாங்கிக் கொண்டாள்.

"நல்லாயிருக்கா? நீ இப்படி பேசறது" கடிந்து கொண்டாள் ராஜம். "நாங்க சாப்பிடற சாப்பாடு, மருந்து செலவு எல்லாமே நீ கொடுக்கிற பணத்தாலே தான் நடக்குது. ஏதாவது வேலைக்காவது போலாம்னா, ஆர்த்தியை விட்டுட்டுப் போக முடியலை..." குறையாய் சொல்ல, காபி டம்ளரை கீழே வைத்தவாறு எழுந்தாள்.

"அப்படி எதுவும் செய்யாதீங்க. முதல்ல ஆர்த்தியோட உடம்பைப் பார்த்துக்குங்க... ஆர்த்தி அம்மா வந்ததும் இதைப் பத்தி பேசலாம்." ஹேண்ட் பேக்கை திறந்து மூணு நூறு ரூபாய் தாள்களை நீட்டினாள்.

"மேல, மேல உனக்கு தொந்தரவு தர்றோம்..." குரல் பாரமாய் வெளிவர வாங்கிக் கொண்டாள், ராஜம்.

"சரிம்மா! ஆர்த்தி தூங்கறா. எழுப்ப வேண்டாம். நான் கிளம்பறேன்."

"ஒரு நிமிஷம் இரும்மா!" உள்ளே சென்று திரும்பி வந்த ராஜத்தின் கைகளிலே ஊசியால் கோர்த்த மகிழம்பூ சரம்



இருந்தது. வானதியை திரும்பச் சொல்லி தலையிலே சூட்டினாள். மகிழம்பூ வாட, வாட தான் வாசனை. மற்ற பூக்களுக்கு இல்லாத ஒரு வாசம் இந்த பூவுக்கு மட்டுமே உண்டு. நாசியை நெருட மனம் பூரா இதமான மென்மை பரவியது. தோட்டத்தில் சின்ன மரம் இப்போதுதான் பூக்க ஆரம்பித்திருந்தது. கீழே கொட்டி கிடக்கும் பூக்களை பொறுக்கி கோர்த்திருந்தாள், ராஜம்.

தாயின் நினைவு நெஞ்சுக்குள் பரவினாலும் மனம் பாரமாய் கனத்தது, வானதிக்கு.

நடக்க, நடக்க நெஞ்சை கசக்கிப் பிழிந்தது நினைவுகள். அவளைப் பற்றி நினைத்தே மனம் புழுங்கி உயிரை விட்டாங்களோ! கடைசி நேரத்தில் கூட அருகில் இல்லாமல் போனதுக்கு யார் காரணம்? விதியா இல்லை, ஆண்டவனோட சதியா? விழிகளில் நீர் பூத்தது. குனிந்துக் கொண்டாள்.

ஹாரன் ஒலி காதை பிளக்க பிளாட்பாரமாய் ஓரமாய் நடந்தவளை உரசுவது போல் கார் நிற்க, கோபமாய் திரும்பினாள்.

காரிலிருந்து இறங்கினான் ரிஷி.

'சை. இவனா?' மேலே நடக்க ஆரம்பிக்க, எதிரே வழி மறிப்பது போல் நின்றான்.

எரிச்சலாய் ஏறிட்டாள். "உங்களுக்கு என்ன வேணும்?" கோபமாய் கேட்டாள்.

''நீதான்!'' குறும்புத்தனம் மிதக்க, கண்கள் சிரித்தது, அவனுக்கு.

''வாட்?'' அப்பட்டமாய் அதிர்ந்தாள். நாசி துடிக்க இதழ்கள் படபடக்க மிரண்டாள்.

''ஹலோ! எதுக்கு இப்படி ஒரு ஆக்ஷன். என்னை பார்த்தா சிங்கம், புலி, மாதிரியா இருக்கு. காலையில பார்த்ததும் எனக்கு உன்னை பிடிச்சு போச்சு. நாம இரண்டு பேரும் பிரண்ட்ஸா ஆகணும்னா, உன்னைப் பத்தி விவரங்கள் எனக்கும், என்னைப் பத்தின விவரங்கள் உனக்கும் தெரியவேணாமா?'' கிண்டல் தெறிக்க கேட்டான்.

''இந்த மாதிரி வேலையெல்லாம் வேற எவகிட்டயாவது வச்சுக்குங்க... கொஞ்ச பணமும், காரும் இருந்திட்டா போதும், எவ பின்னாடி சுத்தலாம்னு. முதல்ல பிரண்டுனு சொல்றது, அப்புறம் காதலிக்கிறேன்னு...'' மேலே பேசியவளை குறுக்கிட்டான்.

''ஸாரி! தப்பா நினைக்காதே, என்னை விட வயசு கம்மியா இருக்குனுதான் ஒருமையிலே கூப்பிட்டேன். அது மட்டும் இல்ல என்னோட லவர் டெல்லியில இருக்கா. உன்னை பார்த்ததும் எனக்குள்ள ஏதோ ஒரு உணர்வு இது. நிச்சயம் காதல் இல்லை...'' அவன் பேச, பேச இது என்ன வம்பா போச்சு. நினைத்தவளின் அருகே ஆட்டோ செல்ல நிறுத்தி ஏறிக் கொண்டாள்.



3



இரவு. நிலவுக்கும் மேகத்துக்கும் நடக்கும் பனிப் போரை விலக்க மனமில்லாமல் நட்சத்திர தோழியர்கள் வேடிக்கை பார்க்க, கவிஞர்கள் காதலுடன் பார்க்கும் நீல வண்ண இரவு நீண்டு கடக்கும் இனிமைப் பொழுது—

சாப்பாட்டு வேளை முடிந்து கட்டிலுக்கு வந்தாள். புத்தகத்தைப் புரட்டிய சுமியைப் பார்த்து புன்னகை பூக்க, புத்தகத்தை மூடி வைத்தாள், சுமித்ரா.

''ஆர்த்தியைப் போய் பார்த்தியா? கேட்க நினைத்துப் பார்த்தாள். ''எப்படி சுமி!''

''அதான் தலையில இருக்கிற மகிழம்பூ வாசம் சொல்லுதே. நான் கூட சின்ன வயசா இருக்கும்போது பசங்க கூட சேர்ந்து மகிழம் பூக்களை பொறுக்கி கோர்த்திருக்கேன். அப்ப, எல்லாம் எனக்கும் கூட பொறுக்கின பசங்களுக்கும் சண்டை வரும்...'' பழைய நினைவுகள் சுமியை கிளற சிரித்தாள், வானதி.

''அதுக்காக என் கூட சண்டை போட ஆரம்பிச்சிடாதே. என்னால, கற்பனையில் கூட அப்படி ஒரு சூழ்நிலையை நினைச்சு பார்க்க முடியாது?'' ஒரு மாதிரி குரலில் சொல்ல,

''சே! என்னடி இது? சரி அதை விடு. மாமி வீட்டுக்குப் போனியே, எப்படியிருக்காங்க, ஆர்த்தி எப்படி இருக்கா?'' கேட்டாள் சுமி.

"முதல்ல மாமி உனக்கு கொடுத்த பூவை வச்சுக்க" ஹேண்ட் பேக்கில் இருந்து எடுத்து நீட்டினாள்.

பூவின் வாசம் அவர்களைச் சுற்றிப் படர்ந்தது.

பூ கசங்கியிருந்தாலும், வாசம் கூடுத்தான் தெரிந்தது. சுமி எப்பவும் கலகலப்பானவள். எந்த ஒரு விஷயத்தையும் சீரியசாய் எடுத்துக் கொள்ள மாட்டாள். அனைவரையும் சிரிக்க வைத்து மனம் நிறைவாள். அது அவளுடைய குணம்.

"அடிக்கடி உடல் நிலை சரியில்லாமல் போகுது? கம்ப்ளீட்டா ஒரு செக்கப் பண்ணணும்னு டாக்டர் சொன்னாராம். அதான் நாளைக்கு ஆபீஸுக்கு லீவு போட்டுட்டு மாமி கூட ஆஸ்பிட்டல் போகணும்..." பேசிய தோழியை ஆச்சரியமான பார்வைகளாய் நிரப்ப,

"என்ன?" பேச்சை நிறுத்தி சைகையாய் கேட்டாள்.

"நமக்குப் பக்கத்துல மயங்கிக் கிடக்கிறவங்களை கூடக் கண்டுக்காம போற உலகம் இது. ஆனா நீ யாரோ ஒருத்தவங்க குழந்தையை ஆதரவு காட்டி, நலனில அக்கறை செலுத்தி... உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு... வானதி."

"மனிதாபிமானம் உள்ள யாருமே செய்யறதுதான். இதுல ஆச்சரியப்படறதுக்கு ஒண்ணுமே இல்லை. அதுமட்டும் இல்ல, தாமரை கிட்ட நான் சொல்லிட்டு வந்திருக்கேன். அவங்க வெளியே வரும்போது ஆர்த்தியையும், மாமியையும் நல்லபடியா ஒப்படைக்க வேணாமா? தாமரையோட



எதிர் காலமே அவங்க குழந்தைதானே? அவங்களை நினைச்சாலே பரிதாபம் மட்டுமல்ல, வேதனையாவும் இருக்கு சுமி. ஒரு பெண் சுயமாய், வேலை செய்து, பிழைக்கக் கூட இந்த சமுதாயம் இடம் கொடுக்க மறுக்குது. பாத்தியா!" பேசிக் கொண்டே இரவு உடைக்குள் நுழைந்த வானதியைப் பார்த்து புன்னகை பூக்க, அதில் உயிரில்லை.

"சமுதாயம்ன்னு பொதுவா சொன்னா எப்படி? ஒரு சில ஆண்களான்னு சொல்லு. மத்தவங்களை பார்த்து நீ வேதனைப் படற. உன்னோட வலிகள் மனசுக்குள்ளே ரணமா இருந்தபோது, உனக்காக வேதனைப் படவோ, வருத்தம் தெரிவிக்கவோ யாருமில்லையே..."

"இல்லை சுமி! அன்னைக்கு என் நிலைமையை பார்த்து எனக்கு தைரியத்தையும் தன்னம்பிக்கையும் கொடுத்து என் படிப்புக்கும் உதவி செய்த பர்வதம்மாவால தான் இன்னிக்கு இந்த நிலைமையில இருக்கேன். இல்லேன்னா என் நிலைமை என்ன ஆயிருக்கும்? நினைச்சாலே பயமா இருக்கு சுமி..."

மனம் அழுத்த விழிகள் கசிந்தது.

சில நொடிகள் இறுக்கமான சூழ்நிலையை மாற்ற விரும்பி பேச்சை மாற்ற முயற்சித்தாள் சுமித்ரா. என்னதான் முயன்றாலும் மனதிலிருக்கும் பழைய நினைவுகள் அவ்வப்போது தலைகாட்டி வேதனையோ, சந்தோஷமோ பட வைப்பது அனைவருக்குமே உண்டான இயல்பு நிலைதானே!

மனதில் சஞ்சலமோ, சங்கடமோ இல்லாததாலோ என்னவோ சுமி உறங்கி விட்டாள். நீண்ட நேரம் தூக்கம் வராமல் புரண்டு ஒருவாறு நடுநிசியான் நேரத்தில் உறங்க ஆரம்பித்தாள், வானதி.

4



'நேத்து பத்து நிமிஷம் லேட்டா போனதுக்கே கார் மூச்சனு திட்டினாரு மானேஜர் கிழம். இன்னைக்கும் போனா என்ன பண்ணுவாரோ? இந்த பஸ்சை வேற காணோம். 'சே' மனதுக்குள் புலம்பியவாறு நின்றிருந்தவளின் அருகே நின்றது. அந்த கார். "ஹலோ மிஸ் சுமித்ரா..." பேசியவாறு இறங்கினான், ரிஷி.

"குட்மார்னிங் சார்..."

"மார்னிங்! வாங்களேன்... நான் டிராப் பண்றேன். ஆபீசுக்குத்தானே!" கேட்டவன் கிரீம் கலர் கோட், சூட்டில் கம்பீரமான அழகில் கண்களை குளிர்ச்சிபடுத்தினான்.

"பரவாயில்லை சார். உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்..." மெல்ல கூறியவளை இடைமறித்தான்.

"நான் ஒண்ணும் உங்களுக்காக போகலையே, நானும் ஆபீஸ்தான் போறேன். அதனாலதானே! ப்ளீஸ்.." மென்மையான குரலில் கூறியவனிடம் மேலே மறுக்க முடியவில்லை.



'அவள் வேலை செய்யும் ஆபீஸ் எம்.டி. ஆச்சே.. கூப்பிடுவது!' நினைத்தவாறு காரில் ஏறிக் கொண்டாள்.

கார் போவது தெரியாமல் வழுக்கியது. "உங்கக்கிட்ட ஒரு விஷயம் பேசணும்.. கேட்கலாமா?" தயக்கமாய் அவன் ஆரம்பிக்க,

"கேளுங்க சார்..." என்றவளின் மனம் படபடத்தது.

காரணம் அறியாமல், நல்ல குணம், பண்பு, பிஸினசில் புலி, அலுவலக ஊழியர்களிடம் சக நண்பனாக நடந்து கொள்வது என அவனை பற்றி அலுவலகத்தில் பேசிக் கொண்டதை அவள் காதாலே கேட்டிருக்கிறாள். ஒரு சில விஷயங்களில் பார்த்தும் இருக்கிறாள். இன்னும் கல்யாணம் ஆகலை. வீட்டில் பெண் பார்த்துட்டு இருக்காங்கனு அவள் அருகில் கம்ப்யூட்டர் தட்டும் ரமா சொன்னதை கண்டு கொள்ளவில்லை. ஏதோ ஒரு பணக்கார பெண் கொடுத்து வைத்திருப்பாள், அவனைக் கட்டிக் கொள்ள, நினைத்தது? இப்போது நினைவில் ஓடியது.

"ஹலோ சுமித்ரா! என்ன பகல்லே கனவா?" ஹாரனை அழுத்தியவாறு கேட்க, சட்டென இயல்புக்கு வந்தாள்.

"ஸாரி சார்!" முகம் சிவந்தது.

"என்ன கேட்டீங்க..." தடுமாறினாள்.

"உங்க கூடவே தினமும் பஸ் ஸ்டாப்புக்கு வர்றாங்களே, அவங்க உங்க பிரண்டா.."

"ஆமாம் சார்! நாங்க இரண்டு பேரும் ஒரே ஹாஸ்டலில் தான் தங்கியிருக்கோம்... அவ பேரு வானதி... மதன் இண்டஸ்ட்ரிஸ்ல வேலை செய்றா..." பதில் சொன்னாலும் காற்று இறங்கிய பலூனாய் மனம் இருந்ததை உணர்ந்தாள்.

"உங்கக் கிட்ட பர்ஸனலா கொஞ்சம் பேசணுமே! சாயங்காலம் ஆபீஸ் முடிஞ்சதும் நானே உங்களை டிராப் பண்றேனே.. ப்ளீஸ்!" அவன் முகம் சிவக்கக் கூறினான்.

தலையாட்டினாள். பிறகு ஆபீஸ் வரும் வரை அவன் எதுவும் கேட்கவில்லை.

## 5



தலைசீவி, பூ வைத்து மகளுக்கு அழகு பார்த்து திருஷ்டிக் கழித்தாள், ராஜேஸ்வரி.

"என்னம்மா அப்படி பார்க்கிறே!" கேட்ட வானதி மொட்டு விரிய தொடங்கும் இளமை பருவம். பள்ளி ரெண்டாம் வகுப்பு பாஸ் செய்து சந்தோஷத்தைக் கொண்டாடும் பருவ தளிர். அழகு அவளை கஞ்சத்தனம் பாராமல் கொட்டி வைத்திருந்தது. மேனியிலும் முகத்திலும்.

"இவ்வளவு அழகா! என் பொண்ணு, என் கண்ணே பட்டுடும் போலிருக்கே. நேத்து கூட பக்கத்து வீட்டு மாமி, உங்க அம்மாவை அப்படியே உரிச்சு வச்சிருக்கேன்னு



சொன்னாங்களே! ஆரம்பத்தில மட்டுமில்லை, இப்ப கூட தான் என் அக்காவான்னு கேட்பாங்க. வேறொன்னும் இல்லை..." கிண்டலாய் கூறிச் சிரிக்க "வாலு!" செல்லமாய் மகளை தட்டினாள், சிரித்தவாறு.

"அம்மா! நான் கல்லூரியில் சேர்ந்து படிக்கட்டுமா? என் தோழிங்க எல்லோரும் சேர போறாங்க..." தயக்கமாய் கேட்ட மகளின் ஆசை புரிந்தாலும் சூழ்நிலை தடுத்தது.

"நீ இவ்வளவு படிச்சதே போதும்மா... உன் ஆசையை நிறைவேத்தணும்னு ஆசையும், ஆர்வமும் இருக்கு. ஆனா! உங்கப்பாவையும் வீட்டு நிலைமையும்..." வருத்தமாய் பேசிய தாயை பார்க்கையில் வேதனையாய் இருந்தது.

"பரவாயில்லைம்மா! இதுக்கேன் வருத்தப்படறீங்க... நீங்க சொன்ன மாதிரியே பக்கத்து தெருவில இருக்கிற தையல் கிளாசில சேர்ந்துக்கிறேன்... எப்ப வரணும், எவ்வளவு பணம் கட்டணும், எல்லாத்தையும் கேட்டுட்டு வரேன்..." சிட்டாய் பறந்த மகளை பார்க்கையில் இனம் புரியாத ஒரு பயம் இதயத்தில் முளைத்தது.

ராஜேஸ்வரியின் கணவன் மகாலிங்கம். ஆரம்பத்தில் அவளை நன்றாகத்தான் வைத்திருந்தான். எப்படி, எந்த சந்தர்ப்பத்தில் குடி பழக்கம் ஏற்பட்டது என தெரியாது. வானம் பார்த்த பூமி, மழையால் மட்டுமே விளையும் நிலம். பணம் படைத்தவர்கள் லட்சக்கணக்கில் செலவு செய்து பாசன வசதி செய்து கொண்டார்கள். வேலைக்கு போனால்தான் சாப்பாடு. கடன் சுமை அதிகமாக இருந்த சொற்ப நிலத்தையும் விற்று விட்டான். கடனை

தீர்த்துவிட்டு மீந்த பணத்தை குடித்தே அழித்தாள். கேள்வி கேட்ட ராஜேஸ்வரிக்கு அடி உதைதான் பரிசாய் கிடைத்தது. ஆறு வயசு வானதி அப்பாவை பயத்துடன் பதுங்கிப் பார்ப்பாள். அம்மாவின் பின்னே!

காலடி சத்தம் கேட்க, நினைவுக்கு வந்தாள். ''ஏய் ராஜி!'' தள்ளாடியவாறு சத்தம் போட்டு அழைத்தவாறு வந்தார், மகாலிங்கம்.

''சாப்பாடு போடுடி... இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்...'' அதட்டலும், அதிகாரமும் பறந்தது, வார்த்தைகளில்.

மௌனமாய் பரிமாற ஆரம்பித்தாள்.

'வீட்ல நாளையிலிருந்து சமைக்க ஒன்னும் இல்லை. கால்படி அரிசி கூட இல்லை. அதைப் பத்தின கவலை ஒன்னும் இல்லை. வயசுக்கு வந்த மகளைக் கரை ஏத்தும் வழி தெரியலை, ஆனா! சந்தோஷமா இருக்காராம்... பாவி மனுஷன்' மனதுக்குள் குமைந்தாள்.

''வேலைக்குப் போ, வேலைக்குப் போன்னு சொல்லு வியே..! இனிமே வேலைக்குப் போகாமலே கால் மீது கால் போட்டு உக்காந்து சாப்பிடலாம்.'' சந்தோஷம் கரை புரண்டு ஓடும் முகத்தோடு பேசிய கணவரை புரியாமல் பார்த்தாள். பயம் பரவிய மனதோடு ''என்ன சொல்றீங்க?''

''அடி போடி பைத்தியக்காரி! சாராய கடை வச்சிருக் கிறானே மாறன். அவன் நம்ம பெண்ணை எங்கேயோ பார்த்திருக்கான். ரொம்ப பிடிச்சு போச்சாம். பொண்ணுக்கு



வரதட்சணை கொடுத்து தான் கல்யாணம் பண்ணுவாங்க, ஆனா! நம்ம பொண்ணுக்கு சீர் செனத்தி, நகை, நட்டு எதுவும் செய்ய வேணாம்...'' சிரிப்பாய் சொன்ன கணவரின் மனம் புரிந்தது.

'உழைக்காம, வேர்வை சிந்தாம, மகளை கொடுத்து, அந்த இடத்தில உக்காந்து சாப்பிட நினைக்கும் இவரிடம் என்ன பேசுவது? கேட்கும் நிலையிலும் இவர் இல்லையே!' மனம் துடித்தது.

''என்னங்க இப்படி பேசறீங்க... அவ சின்ன பொண்ணுங்க. வயசு வந்து மூனு மாசம் கூட ஆகலை. அது மட்டும இல்லை. அந்த மாறனைப் பத்தி கேள்விப்படறது எதுவும் நல்லதில்லைங்க. அவனுக்கு இல்லாத கெட்ட பழக்கம் எதுவும் இல்லைங்க...'' சொல்லி முடிக்கும் முன்னே சாப்பிட்டிட்டிருந்த சோத்துத் தட்டை வேகமாய் தள்ளி விட்டு எழுந்தார். சோத்து பருக்கைகள் சிதறியது.

''நான் பார்த்த மாப்பிள்ளை பிடிக்கலைனா, உன் பொண்ணு வேற யாரையாவது பார்த்திட்டாளா?'' வார்த்தைகள் தீயாய் விழ நெஞ்சு துடித்தது, ராஜேஸ்வரிக்கு.

விழிகளில் நீர் கோர்க்க, ''என்னங்க இப்படி பேசறீங்க...'' மெதுவாய் கேட்க, ''இதோ பார்டி! நான் சொன்னா சொன்னதுதான். நாளைக்கு பெண் வீடு பார்க்க வர சொல்லியிருக்கேன். அப்ப, ஏதாவது தகராறு பண்ணுனீங்க... நான் மனுஷனா இருக்க மாட்டேன்...'' லேசான தள்ளாட்டனுடன் நகர,

'பெத்தவரே பெண்ணை படுகுழியில தள்ள நினைக் கிறாரே! இது கொஞ்சம் கூட நல்லா இல்லை. காலம் முழுதும் கன்னியா இருந்தாலும் இருப்பாளே தவிர, அந்த பொறுக்கி பயலுக்கு என் பொண்ணை தர நான் சம்மதிக்க மாட்டேன், நான் உயிரோட இருக்கும் வரை...' எங்கிருந்து தான் ராஜேஸ்வரிக்கு அவ்வளவு வேகம் வந்ததோ. ஆனாலும் மகளுக்கு கெட்டது நடக்கும் போது எந்தத் தாய் பார்த்துக்கிட்டு சும்மா இருப்பாள்.

"என்னை எதிர்த்துப் பேசறளவு ஆயிடுச்சா..." கோபமாய் மனைவியை நெருங்கினார்.

'பளார்' கன்னம் திகுதிகுவென எரிந்தது.

தன் கனவு கலைய மனைவியை தடையாய் இருக்கிறாள் என்ற எண்ணம் பரவ மனைவி மேல் ஆத்திரம் அலை அலையாய் படர்ந்தது. அளவுக்கு மீறி அவர் சாப்பிட்டிருந்த மது அவரை வெறியனாய் மாற்றியது. என்ன செய்கிறோம் என்பதை உணராமல் மனைவியின் கழுத்தில் கையை வைத்து இறுக்கினார்.

"விடுங்க!" அவர் கைகளை விலக்க முயற்சித்த ராஜேஸ்வரிக்கு பலனில்லை. மூச்சுவிட சிரமப்பட விழிகளில் நீர் கட்டியது.

துள்ளி வரும் கன்றுக்குட்டி போல் "அம்மா!" குரல் கொடுத்தவாறு உள்ளே நுழைந்த வானதிக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. சில நொடியில் புரிந்தவளாய், "அப்பா, அம்மாவை விடுங்க.." தந்தையின் கைகளை விலக்க வேகமாய் முயற்சித்தாள். முடியாமல் தவித்தாள்.



சண்டையை விலக்கும்போதுதான் அதிக வீராப்பும், ஆக்ரோஷமும் வருமாம். எகிறி, எகிறி அடிக்க தோணுமாம், குடிமகன்களுக்கு.

"அப்பா ப்ளீஸ்பா!" கண்களில் நீரோடு கெஞ்சியவாறு விலக்க முயற்சிக்க, இரும்பாய் பற்றிய அவர் கைகளை துளி கூட விலக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் வானதிக்கு எங்கிருந்துதான் அத்தனை பலம் வந்ததோ, ஒருவேளை தாயின் மீதுள்ள பாசத்தால் வந்த வெளிப்பாடோ! இழுத்து வேகமாய் தந்தையை தள்ளினாள்.

வேகமாய் தடுமாறியவாறு அருகிலிருந்த ஆட்டு உரலில் தலையை இடித்தவாறு விழுந்தார்.

"அம்மா என்னாச்சு, ஏன்? அப்பா அப்படி நடந்துக் கிட்டார். இந்தாங்க முதல்ல தண்ணி குடிங்க..." தாயை ஆசுவாசப்படுத்தியவாறு கேட்டாள்.

தண்ணீரைக் குடித்தவாறு தொண்டையைத் தடவி னாள்.

"அப்பாவை எழுப்புமா, சொல்றேன்.." பேச முடியாமல் கைகாட்ட, "ஸாரிப்பா... நான் அம்மாவை உங்க கிட்டே இருந்து விடுவிக்கணும்னு..." பேசிக் கொண்டே தந்தையைத் தொட்ட வானதி அதிர்ந்து போனாள்.

நெற்றி பொட்டின் ஓரமாய் ரத்தம் கட்டியாய் உறைந்து போயிருக்க, இறந்து போயிருந்தார் அவள் தந்தை.

"அப்பா, அப்பா!" பதறி உலுக்க ஆரம்பித்தாள்.

''என்னம்மா! என்ன ஆச்சு?'' கேட்டவாறு கணவரின் அருகே வந்த ராஜேஸ்வரி உறைந்து போனாள்.

''ராஜி, ராஜி உன் பொண்ணை தையல் கிளாசில சேர்க்க போறீ...'' கேட்டுக் கொண்டே வந்த பக்கத்து வீட்டு மாமி பேச வராமல் அதிர்ந்து போய் நின்றாள், அந்தக் காட்சியைக் கண்டு.

மகளுக்குத் தீராத பழியை ஏற்படுத்தி போய்விட்டார். ராஜேஸ்வரியின் நிலையோ, கேட்கவே வேண்டாம். ஜீரணிக்க முடியாமல் பிரமை பிடித்து நின்றவள்தான். மகளை போலீஸ் அழைத்துச் சென்றதையோ, தாயைக் காப்பாற்ற செய்த அந்தச் செயல் கொலை கிடையாது என்றும், அவர் குடித்திருந்ததும், வாங்கின பணத்துக்கு வஞ்சனை இல்லாமல் வாதாடி குறைந்த பட்சமாய் சில ஆண்டுகள் மட்டும் தண்டனை மட்டுமே பெற்றுக் கொடுத்தார், வக்கீல் ஏகாம்பரம்.

படுக்கையில் விழுந்த ராஜேஸ்வரி, மீளாமல் அப்படியே போய்விட்டாள். மனதளவில் செத்து போனாள், வானதி.

மென்மையான இசை காதை குளிரவிக்க, அந்த காபி ஷாப்பில் நுழைந்தனர். ரிஷியும், சுமித்ராவும் காலியாய் கிடந்த நாற்காலியில் இருவரும் அமர்ந்தனர்.

இரண்டு காபி ஆர்டர் பண்ணினான். வேற எதுவும் சாப்பிடறீங்களா? சுமித்ரா?'' கேட்டான்,

''இல்லை, வேண்டாம்.''



நிமிடங்கள் சில கழிந்தது. மௌனமாய்.

பேரர் காபியை வைத்துவிட்டு நகர, மெல்ல பேச ஆரம்பித்தான்.

''நான் சுத்தி வளைச்சு பேச விரும்பலை. உங்க பிரண்ட் வானதியை விரும்பறேன். அவங்களைத் திருமணம் செய்துக்கணும்னு ஆசைப்படறேன்...'' என்றான்.

சந்தோஷம் பூவாய் மலர்ந்தது, சுமியின் மனதில்.

''நீங்க சொல்றது...'' ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

''யெஸ்! வானதி மட்டும் சம்மதம் சொன்னாங்கன்னா திருமணம் செய்துக்க தயாரா இருக்கேன்.'' அவன் பேச்சில் இருந்த தீவிரமும், உண்மையும் புரிந்தது, சுமிக்கு.

'வானதி! ரொம்பக் குடுத்து வச்சவ. அவபட்ட கஷ்டங்களுக்கு எல்லாம் விடுதலை. இனி அவ வாழ்க்கையில் சந்தோஷம் மட்டுமே பூக்கணும்...' காபியை குடிக்க ஆரம்பித்தாள்.

''சுத்தி திரிய வேண்டிய வயசில ஜெயில் வாழ்க்கையை அனுபவிச்சவ...''

''வாட்!'' அதிர்ந்தான். முகம் முழுதும் குழப்ப ரேகைகள்.

''ஆமாம் சார்! அவளைப் பத்தி முழுசா தெரிஞ்சா உங்க காதல் அப்படியே இருக்குமான்னு எனக்கு தெரியாது. பின்னாடி தெரிஞ்சு இப்படி ஒரு பெண்ணை காதலிச்சமோன்னு ஒரு விநாடி நினைச்சா கூட என்னால மட்டும்

இல்ல, அவளால தாங்கிக்க முடியாது'' பேச ஆரம்பித்தாள்.

நீண்ட கொடிய ஐந்து வருடங்கள். அவ தலை எழுத்தை மாத்திப் போட்ட சம்பவம், பெருமூச்சு விட்டாள், சுமித்ரா. பழைய நினைவு சம்பவங்களுக்கு உயிர் ஊட்டினாள்.

ஜெயில் வார்டன் பர்வதம்மா கருணை மனம் படைத்தவள். வானதியின் நிலைமையை கொடுமையை உணர்ந்து ஆறுதலாய் பேசி அவளை வேறு நினைவுக்கு, சிந்தனைக்கு மாற்ற முயற்சித்தாள். அதில் வெற்றியும் கண்டாள். அங்கிருந்தவாறே அவளை மேற்கொண்டு படிக்க, வசதியும், ஏற்பாடும் செய்து தந்தாள். பெண்களுக்கு கொடுமையும், கஷ்டங்களும் நடக்கும்போது அதைத் தீர்க்க முடியலை என்றாலும் ஆறுதலாய் இருக்க சில பெண்களை ஆண்டவன் படைத்திருக்கிறான். அப்படித் தான் பர்வதம்மா, குற்றங்கள் செய்து வரும் பெண்கள், சந்தர்ப்ப வசத்தால் குற்றவாளி ஆகி விடும் பெண்கள் எல்லோருக்கும் மனசால் உண்மைகளை, ஆண்டவனின் உன்னதங்களை நாம் பிறந்து செய்ய வேண்டிய கடமைகள் எல்லாவற்றையும் புரிய வைத்து தண்டனை முடிந்து வெளியே வரும் பெண்களின் மனம் அமைதியாய் ஒரு புதிய வாழ்க்கைக்கு தயாராய் வெளியே வருவார்கள்.

அந்த அசந்தர்ப்பமான சூழலில்தான் ஆர்த்தியின் தாய் வானதிக்கு அறிமுகமானாள். சின்ன வயதும் அழகும் ஆபத்தை விளைவித்தது, தாமரைக்கு.



கையில் குழந்தையை கொடுத்துவிட்டு ஓடிப் போன கணவன், வயதான தாய், தன்னந்தனியே தவித்து நின்றாள், தாமரை. கழுத்திலும், காதிலும் கிடந்த சொற்ப நகைகளை விற்று சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கிக் கொண்டனர். வேலைக்குப் போன இடத்தில் பிரச்சனை இல்லாமல் தான் போனது. இரண்டு வருடங்கள், கம்பெனியின் முதலாளி வந்தபோதுதான் அவள் வாழ்க்கை திசைமாறிப் போனது.

ஆபீசைக் கூட்டிப் பெருக்கி வாறும் அவளை ஆசைப் பட்டு தன் வசமாக்க முயல, கத்தி, கூச்சல் போட்டு பயனில்லை என்று அருகில் கிடந்த கத்திரிக்கோலை எடுத்து வயிற்றில் பலமாய் குத்தினாள். பணம் படைத்தவர்களிடம் அவள் ஏழ்மை செல்லுபடி ஆகவில்லை. இரண்டு வருட தண்டனை அனுபவிக்கத் தயாராகி விட்டாள்.

ஆனால்! தாயையும், மகளையும் நினைத்து மனம் வலித்தது. அழுது, அழுது விழிகள் சிவந்தது. அலுமினிய தட்டில் இட்ட சாப்பாட்டை சாப்பிட மனமில்லாமல் வெறித்து பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். வானதியின் அருகில், வானதிக்குப் புரிந்தது. அவள் நிலை. ஒரு நேரத்தில் அவளின் நிலையும் அதுவாகத்தானே இருந்தது.

''அழாதீங்க! முதல்ல சாப்பிடுங்க. இரண்டு நாளா உங்களை பார்த்துட்டுதான் இருக்கேன். அழுதிட்டே இருக்கீங்க..'' ஆறுதல் படுத்தும் விதமாய் பேசினாள்.

''செய்யாத தப்புக்காக தண்டனை அனுபவிக்கறீங்களா?'' கேட்டாள்.

''இல்லைமா!'' நடந்த உண்மையையும், தன் குடும்பத்தையும் நினைத்து வேதனைப்படுவதையும் அழுதவாறு சொல்லி முடித்தாள், தேம்பியவாறு.

'சே! பெண் என்பவளுக்கு வேதனையும், வலியும் தான் வாழ்க்கையா? இதற்கு காரணம் இந்த சமூகமா? இல்லை, அதிலிருக்கும் ஆண்கள் மட்டுமா, புரியவில்லை, அவளுக்கு. நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள். ஆனால்! ஒரு பெண்ணின் கண்ணீரை இன்னொரு பெண்தான் நிச்சயம் துடைக்க முடியும். அப்படித்தான் தாமரைக்கு உறுதியளித்தாள். வெளியே செல்லும் இவள் தாமரை வெளியே வரும் வரை அவள் குழந்தையையும், தாயையும், தன் உறவுகளாய் நினைத்துப் பார்த்துக் கொள்வதாய்.

தூக்கம் வராமல் புரண்டு, புரண்டு படுத்தான் ரிஷி. விழிகளை மூடினாலே வானதியின் அழகு முகம். அவனைப் பாடாய் படுத்தியது.

சுமித்ராவிடம் பேசியதிலிருந்து வானதி மேல் அவன் வைத்திருந்த காதலின் வேகம் அதிகமானது. பாவம்! இந்த சின்ன வயசிலே எத்தனை கஷ்டங்கள், வேதனைகள்! அவளை அணைத்து, ஆறுதல் சொல்லி காலம் முழுதும் கண் கலங்காமல் பார்த்துக்கணும். மனசு ஏங்கியது. ஆனா இனி வாழ்க்கையிலே எதுவும் இல்லை. ஒரு காலகட்டத்துக்கு அப்புறம் ஏதாவது ஒரு அநாதை ஆசிரமத்துக்கு போய்



காலம் முழுதும் சேவை செய்தே தன் வாழ்க்கையை கழித்துவிட போறதா சுமித்ரா கிட்டே சொல்லியிருக்காளே! பலவிதமான சிந்தனைகள் அவனை வாட்டி எடுத்தது. பிரியாவை திருமணம் செய்து வைக்க தாயும், தந்தையும் முயற்சி செய்வதை எப்படித் தடுப்பது? புரியாமல் குழம்பினான்.

'நானும் பிரியாவும் நல்ல பிரண்ட்ஸ்! எங்களுக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லைன்னு சொன்னா, புரிஞ்சுக்க மாட்டேங்கறாங்க, அம்மா! முதல்ல என் காதலை வானதி ஏத்துக்கட்டும். அப்புறம் மலையளவு பிரச்சனை கூட தூசுதான். ஆனால்! வானதி என் காதலை ஏத்துக்காட்டி? நினைப்பே... நெஞ்சில் சூடு வைத்தது போல் வலித்தது.

6



''நம்ம காதலை ஏத்துக்குவாங்களா ராகவ்!'' மனதில் அச்சத்தோடு கேட்டவளைப் பார்த்து சிரித்தான். ''நீ ஒன்றும் கவலைப்படாதே! வானதி. அடுத்த வாரம் கிராமத்துல இருக்கிற மாமா வீட்டுக்குப் போறேன். ஏதோ திருவிழாவாம். மாமா வரச் சொல்லியிருக்கார். மாமா என்ன சொன்னாலும் அம்மா கேட்பாங்க! அவர் மூலம் அம்மா கிட்டே நம்ம காதலைச் சொல்லி சம்மதம் வாங்கிடறேன்'' சொல்லச் சொல்ல மனம் நிம்மதியாக புன்னகை பூத்தான்.

ஜெயிலிலிருந்து விடுதலையாகி பார்வதம்மா சிபாரிசு மூலம் வேலை கிடைத்திருந்தாலும், அவளைப் பற்றி

தெரிந்து கொண்டு முன்னாடியும், பின்னாடியும் கேலி பேசி, வார்த்தையாலே கொல்லும் சக ஊழியர்களிடம் இருந்து ஒதுங்கியிருந்த வேளையில்தான் அன்பும், அனுசரணையு மாய் பேசிய ராகவனை மனதால் தேடினாள். ராகவனும் அவளை விரும்ப, காதலை விரும்பினாள்.

''ஏய் வானதி! எத்தனை தடவை கூப்பிடறது? அப்படி என்ன சிந்தனை?'' சுமித்ரா வேகமாய் கூற, சட்டென நினைவுக்கு வந்தவள், முகம் வியர்த்து பனி துளி போல் அமர்ந்திருந்தது.

''என்ன ராகவனை நினைச்சியா?''கடுப்பாய் கேட்க, தலையாட்டினாள்.

மனம் கனத்துக் கிடந்தது.

''முடிஞ்சு போனதையே நினைச்சு உன்னை வருத்திக் கிறே? உனக்கு அவனை விட வேறு நல்ல வாழ்க்கை கிடைக்கக் கூட உன்னோட காதல் கைகூடாம போயிருக் கலாம், அல்லவா?''

''நான் அதைப்பத்தி நினைக்கலே சுமி! அவரோட மாமா பொண்ணை கல்யாணம் பண்ணிக்க வேண்டிய சூழ்நிலை. அந்த பெண்ணை சந்தோஷமா வச்சிட்டு வாழட்டும். எனக்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ராசியில்லை சுமி. என்னோட ஆரம்ப கதையைக் கேட்டா, யாரும் என்னை மருமகளா எத்துக்க மாட்டாங்க.'' குரலில் பிசிர் தட்ட வேதனை வலி வார்த்தையில் வழிய தோழியின் தலையை ஆதரவாய் வருடினாள், சுமித்ரா.



'இல்ல வானதி! உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை காத்திட்டு இருக்கு' நினைத்த சுமி வெளியே சொல்லவில்லை.

இரண்டு நாள் மெதுவாய் கழிந்திருந்த வேளையில் ''வானதி உனக்கு போன்'' சக ஊழியை ரம்யா கூறிவிட்டுச் செல்ல,

''யாரு? சுமியா?'' நினைத்தவாறு ரிசீவரை எடுத்து காதில் பொருத்தினாள்.

''ஹலோ! வானதி ஹியர்''.

''நான் ராஜம் பேசறேன்... ஆர்த்திக்கு திடீர்னு உடம்பு சரியில்லை. தூக்கி தூக்கிப் போடுது. உடம்பு அனலா கொதிக்குது.. எனக்கு பயமா இருக்கு... என் பேத்தி என்னை விட்டுட்டு போயிடுவா போலிருக்கே!'' அழும் சத்தம் ஒலிக்க, ''அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. நான் உடனே வாரேன்.''

ரிசீவரை சாத்தினாள். 'திடீர்னு என்ன ஆச்சு தெரியலையே!' மனம் பரபரக்க அரை நாள் விடுப்பு கேட்டுக் கொண்டு வெளியே வந்தாள். அருகே போன ஆட்டோவை நிறுத்தி ஏறிக் கொண்டாள்.

அந்த பெரிய மருத்துவமனையில் ஆர்த்தி அனுமதிக்கப் பட்டு உடனடியாக சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

''குழந்தையோட அம்மா யாரு?'' வெள்ளைச் சீருடையில் அந்த நர்ஸ் கேட்க,

"அவதான் இங்கே இல்லையே!" முந்தானையில் வாயைப் பொத்திக் கொண்டு ராஜும் கேவ.

"என் அக்கா பொண்ணுதான்!" வானதி கூறினாள்.

"உள்ளே போங்க! டாக்டர் கூப்பிடறார்" அறையின் வழியை கூறி விட்டு மறைந்தாள், நர்ஸ்.

"வணக்கம் டாக்டர். ஆர்த்தியோட உடம்புக்கு என்ன? அடிக்கடி உடம்பு சரியில்லாம ஆயிடுது." மெல்லிய குரலில் கேட்டவளை ஏறிட்டார்.

"அதைப் பத்தி பேசறதுக்குத்தான் உங்களை வரச் சொல்லியிருக்கேன். உட்காரும்மா!"

'கடவுளே! பயப்படற மாதிரி எதுவும் சொல்லக் கூடாது' மனம் பிரார்த்திக்க சேரின் நுனியில் அமர்ந்து டாக்டரைப் பார்த்தாள், மனம் படபடக்க.

"குழந்தையை முழுசா பரிசோதனை செய்ததில் ஹார்ட்ல ப்ராப்ளம். உராய்வு பக்கத்திலே ஒரு சின்ன துளை இருக்கு. உடனே ஆபரேஷன் பண்ணினாதான் குழந்தையை நீண்ட நாள் ஆயுளோட பார்க்க முடியும். இல்லேனா மூணு மாசம் தான் குழந்தையோட ஆயுள்.." நோயின் விதத்தையும், அதன் விளைவையும், தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச, பேச அதிர்ந்து போனாள், வானதி.

புலன்கள் மரத்துப் போனது போன்ற பிரமை.

"ஒன்றரை லட்சம் வரை செலவாகும்" டாக்டரின் குரல் செவியில் ஒலித்துக் கொண்டே இருக்க, வெளியில் வந்தவளை ஆர்வமாய் எதிர் கொண்டாள் ராஜும்.



"டாக்டர் என்னம்மா சொன்னாரு. என் பேத்திக்கு ஒண்ணும் இல்லை இல்ல?" பதட்டமாய் கேட்டாள்.

"பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை. பத்து நாளைக்கு பெட்ல இருக்கணுமாம். ஒரு சின்ன ஆபரேஷன் பண்ணணுமாம்... அதுக்குப் பிறகு ஆர்த்திக்கு எந்த நோய் நொடியும் வராது. ஆரோக்கியமா இருப்பா" ஆறுதலாய் பேசினாள்.

"ஏய்! என்னடி சொல்றே?" திகைத்தாள், சுமித்ரா.

"அதான், எனக்கும் ஒண்ணும் புரியலை. இவ்வளவு பணத்துக்கு என்ன பண்றது? என்கிட்ட ஒரு இருபதாயிரம் இருக்கு. ஆபீஸ்ல லோன் அது. இதுன்னு போட்டா கூட கைக்கு வர்றதுக்கு மூணு வாரமாவது ஆயிடும்." படபடத்தவளை பரிதாபமாய் ஏறிட்டாள்.

"எங்கிட்ட ஐயாயிரம் தான் இருக்கு வானதி. சம்பளப் பணத்தை செலவுக்குப் போக மீதியை வீட்டுக்கு அனுப்பிடுவேன்னு உனக்குத் தெரியாதா வானதி?"

"சே என்ன பேசறே! உன்னைப் பத்தி எனக்கு தெரியாதா?" சுமியைக் கடிந்து கொண்டாள்.

"எனக்கு ஒரு வழியும் ஓடலை சுமி!" தவிப்புடன் தலையை பிடித்துக் கொண்டாள்.

'ஆர்த்திக்கு மட்டும் ஏதாவது ஆயிட்டா? அப்புறம் தாமரையோட உயிருக்கு உத்திரவாதம் இல்லை. அவங்களுக்கு நான் கொடுத்த நம்பிக்கை பொய்யாய் ஆயிடும் போலிருக்கே.'

விழியில் நீர் கசிய பேசிய வானதியை அமைதிப்படுத்தினாள், சுமி.

"பொறுமையாய் யோசிப்போம். ஏதாவது வழி கிடைக்கும். நீ டென்ஷன் ஆகிறதை நிறுத்து." நிமிடங்கள் யுகமாய் கழிந்தது.

மனம் கனக்க தொண்டை அடைத்தது, வானதிக்கு.

"எனக்கு ஒரு வழி தோணுது, வானதி..." மெல்ல இழுத்தவாறு கூற, "சீக்கிரமா சொல்லு..." பரபரத்தாள் வானதி.

"எங்க எம்.டியைப் பார்த்து பணம் கேட்கலாம். அவர் இல்லாதவங்க முடியாதவங்களுக்கு உதவி செய்யவே ஒரு அமைப்பு வச்சிருக்கார். கண்டிப்பா உதவுவார்னு நினைக்கிறேன். டிரை பண்ணி பார்ப்போமா? என்ன சொல்றே?" கேட்டாள் சுமி.

"சும்மா இருக்கிறதை விட முயற்சி செய்து பார்க்கலாம்" பேசியவாறு தலையாட்டினாள் வானதி.

இரவு முழுவதும் இருவருக்கும் உறக்கம் வரவில்லை. ஆஸ்பிட்டலில் இருக்கும் ஆர்த்தியின் நினைவு. இத்தனை பெரிய தொகையை தருவாரா? சுமியோட எம்.டி! யோசனை படர, நல்லதையே நினைப்போம்.. உருப்போட்டவாறு தூங்க முயற்சி செய்தாள் வானதி.

காலை வேலைகளை அவசர அவசரமாய் முடித்துக் கொண்டு கிளம்பினார்கள். அவரவர் அலுவலகத்துக்குச் செல்ல முடியாமல் போன் மூலம் லீவு சொல்லினர்.



"எனக்கு என்னவோ தயக்கமா இருக்கு சுமி" பேசியவாறு அவள் கைகளை பிடித்துக் கொண்டாள்.

"ரிலாக்ஸா இரு வானதி. நல்லதே நடக்கும்" நம்பிக்கையாய் பேசியவாறு ஆட்டோவில் ஏறினார்கள்.

ஆஸ்பிட்டலுக்கு போய் ஆர்த்தியைப் பார்த்துவிட்டு, டாக்டரிடம் ஆபரேஷனுக்கு இன்னும் இரண்டு நாளிலே பணம் கட்ட முயற்சிக்கிறோம் என கூறியவாறு ராஜுக்கு காலை டிபன் வாங்கிக் கொடுத்துவிட்டு, ஆஸ்பிட்டல் கேண்டீனில் அவர்களும் சாப்பிடுவதாய் பேர் பண்ணி கொண்டு எழுந்தனர்.

அந்த இரண்டு மாடி கட்டிடம் கம்பீரமாய் நின்றது.

"நீயும் வா சுமி! எனக்கு ஒரு மாதிரியா இருக்கு?" அழைத்தாள்.

"நான் இங்கே வேலை செய்யறவ... வானதி. நான் வந்து பேசறதை விட, நீ பேசறதுதான் நல்லது. நான் சொன்னா சரியாதான் இருக்கும்.. போ.." சுமி கூற தயக்கமாய் நடந்தாள்.

ஆங்காங்கே கண்ணாடி தடுப்புகளால் பிரிக்கப்பட்டு பலர் வேலை செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு இடத்திலும் பணத்தின் செழுமை தெரிந்தது. அலங்கார பொருட்கள் மீதும், அழகுபடுத்தியிருந்த விதத்திலும்.

வரவேற்புப் பகுதியில் போனில் யார் கூடவோ பேசிக் கொண்டிருந்த பெண்ணிடம் அனுமதி கேட்க, 'ஒன் மினிட்'

ப்ளீஸ்..' மீண்டும் போன் செய்து தம் எம்.டியிடம் அனுமதி கேட்டவாறு, உள்ளே அனுப்பினான் அவன்.

கால்கள் பின்னடிக்க, முன்னே நடந்தாள்.

கண்ணாடிக் கதவை மெல்ல தட்டி "மே ஐ கமின் சார்!"

"யெஸ்! உள்ளே வாங்க!" குரல் கேட்க கதவைத் திறந்தவாறு உள்ளே நுழைந்தவளுக்கு ஒரு நொடி ஒன்றும் புரியவில்லை. எதிரே இருந்தவனைப் பார்த்து. 'இவனா! இங்க எம்.டி! நம்பவும் முடியவில்லை. அதே சமயம் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. போயும், போயும் இவன் கிட்டேயே உதவி கேட்டு வந்திருக்கோம்? ஆனால்!கவி சொன்ன போதெல்லாம் அவன் எம்.டியைப் பற்றி நல்ல விதமாய் தானே சொல்லியிருக்கிறாள்.' அடுக்கடுக்காய் யோசனை அலை பாய நின்றாள்.

"உட்காரு வானதி! என்ன விஷயமாய் என்னைப் பார்க்க வந்திருக்கே" கண்கள் சிரிக்க இயல்பாய் பேசியவனைப் பார்க்கையில் எரிச்சலாய் வர அடக்கிக் கொண்டாள், நிலைமை உணர்ந்து.

எழுந்து போயிடலாமா? தோன்றிய மனதை அடக்கி அமைதி காத்தாள். "உங்கக் கிட்டே கொஞ்சம் பேசணும்..." ஆரம்பிக்கும் போதே அழகிய தட்டில் கூல்டிரிங்ஸ் எடுத்து வந்து நீட்டினான் அங்கு வேலை செய்யும் பியூன்.

'எப்போ எடுத்திட்டு வரச் சொன்னான்.' அவளுக்கே தெரியாமல் மனம் யோசிக்க, "வேண்டாம்" நாசுக்காய் மறுத்தாள்.



"சாப்பிட்டுதான் பேசணும்..." கண்டிப்பான குரலில் கூறியவனை முறைத்தாள்.

மறுகணமே தலை கவிழ குனிந்து கொண்டவாறு கூல்டிரிங்சை கையில் எடுத்துக் கொண்டாள். ஒரு வழியாய் சொல்ல வந்த விஷயத்தை தட்டு தடுமாறி கூறி முடித்தாள்.

கொஞ்ச கொஞ்சமாய் பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுறேன்... ப்ளீஸ்!" கெஞ்சலாய் கூறியவளை ஏறிட்டான்.

"என்னைப் பொறுத்தவரையில் இது சாதாரணமான சின்ன உதவிதான், கண்டிப்பா உதவுறேன். ஆனா! எனக்காக ஒரு சின்ன உதவி செய்யணும்..."

"அப்பாடா..! பணம் கிடைச்சாச்சு... ஆர்த்தியோட ஆபரேசனுக்கு.." மனம் நிம்மதியாக பெருமூச்சு விட்டாள். அழகு முகம் மலர்ந்தது, சந்தோஷத்தில்.

"தாராளமா செய்யறேன். என்ன செய்யணும்?" கேட்டவளை நிதானமாய் பார்த்தான். விஷயத்தை அவன் சொல்லச் சொல்ல சிரியசாய் அமர்ந்திருந்தாள்.

தன் சக தோழியிடம் பேசிக் கொண்டிருந்த கவி எழுந்தாள். "என்னடி சக்ஸஸா?" ஆவலாய் வானதியைப் பார்த்துக் கேட்க, "மண்ணாங்கட்டி" பொரிந்தவளை வியப்பாய் பார்த்தாள் கவி.

"என்னடி சொல்றே! ரிஷி ஸார் இப்படி பண்ணிட்டாரே? ஒரு நல்ல வாய்ப்பை மிஸ் பண்ணிட்டாரே? ஏன் இப்படி நடந்துக்கிட்டார், என்ன பேசி இருப்பார்?" பலப்பல கேள்விகள் பிறக்க ஏறிட்டாள்.

''போயும், போயும் இவர்கிட்ட கேட்க சொன்னே பாரு!'' மூக்கு நுனியும், கன்னமும் சிவக்க படபடத்தாள்.

''என்னாச்சுன்னு விவரமாதான் சொல்லேன்'' சுமி கேட்டாள்.

பீடிகையோடு ஆரம்பித்தவளை யோசனையாய்ப் பார்த்தாள்.

''எங்க வீட்ல எனக்கு கல்யாண ஏற்பாடு செய்யறாங்க..''

''ஓ..'' ஊமையாய் நினைத்தவாறு 'இதை ஏன் என்கிட்டே சொல்றான்' நினைத்தவாறு அமைதி காத்தாள்.

''ஆனா அதுல எனக்கு இஷ்டமில்லை. அதான்!''

''ஏற்கனவே ஒரு பெண்ணை விரும்பறதா சொன்னீங்களே. அவளையே திருமணம் செய்துக்க வேண்டியது தானே...'' தனக்குள்ளே பேசுவதாய் நினைத்துக் கொண்டு மெல்லிய குரலில் முணுமுணுத்துவிட...

சிரித்தான். ''ஸாரி! அப்படி ஒரு பொய் சொன்னாதான் உன்னோட நட்பு கிடைக்கும்னு சொன்னேன். இப்ப எல்லாம் பிரண்ட்ஸா இருக்கவே ஆணும் பெண்ணும் பயப்படறாங்க. திடீர்னு தன்னை காதலிக்கிறதா சொல்லிடு வானோன்னு? அந்த மாதிரி நீயும் நினைக்கக் கூடாதேன்னு, அப்படி ஒரு பொய் சொன்னேன். ஆனா! இன்னும் அதை மனசில வச்சிருக்கிறதை நினைச்சா ஆச்சரியமா இருக்கு.''

எனக்கு அவன் பேச பேச தன்னை நினைத்து வெட்கிப் போனாள். 'சே' மனசில இருக்கிறதை உளறி கொட்டி



விட்டாளே! சிவந்து போனவளை கண்டும் காணாமல் ரசித்தான்.

குனிந்தவாறு மேஜை கண்ணாடி பரப்பை நகங்களால் கீறினாள்.

''ஆனா! இப்ப நான் ஒரு பெண்ணை விரும்பறேன். அவ கிட்ட இன்னும் என் காதலைச் சொல்லலை. சொல்லி அவ ஏத்துக்கிற வரைக்கும் இல்லைனா, ஏத்துக்க வைக்கிற வரைக்கும் என் மனைவியா எங்க வீட்ல இருக்கணும். ஸாரி! நடிக்கணும்'' அவன் சொல்லி முடிக்கும் முன்னே வேகமாய் எழுந்தாள்.

கோபத்தில் நாசியும், உதடும் துடித்தது.

'கடைசியில் நீங்களும் இப்படித்தானா? எல்லாம் ஒரே குட்டையில் ஊறின மட்டைகள்...' முணுமுணுத்தவாறு வெளியேறினாள், முகம் சிவந்தவளாய்! அவன் அழைப்பதைக் காதில் வாங்காமல்.

''இதுல என்ன தப்பு இருக்குனு கோபமா வந்துட்டே?'' அமைதியான குரலில் கேட்க, நிமிர்ந்தாள்.

''என்னடி பேசறே?''

''பின்னே என்னே? அவர் யாரையாவது விரும்பட்டும். அது பிரச்சனை அல்ல. நமக்கு தேவை பணம். ஆர்த்தி யோட உயிர் உன் கையில இருக்குன்றதை மறந்துட்டு பேசாதே. வீண் பிடிவாதத்தால். பொதுவா காதலுக்கு எதிர்ப்பு இருக்கும். அந்த வகையில் அவருக்கு என்ன

பிரச்சனையோ அதுக்குள்ளே! வீட்ல கல்யாண ஏற்பாடு செய்றாங்க. அதைத் தடுக்கறதுக்கு இது நல்ல வழிதான். அவர் காதலி வந்ததும், ஏதாவது ஒரு பிரச்சனையை வச்சு உன்னை அனுப்பிடப் போறாரு! இதுல தப்பு இருக்கிற மாதிரி எனக்குத் தோணலை. நல்லா யோசிச்சுப் பாரு. ஆர்த்தியை மனசுல வச்சிட்டு. அவரோட காதலில் என்ன பிரச்சனையோ அதை தீர்க்கும் வரையில் அவர் பெற்றோர் விட மாட்டறாங்க. சாதாரணமான நிலையில இருக்கிற வங்க, காதலில் ஏகப்பட்ட எதிர்ப்பு இருக்கும். இவங்க அந்தஸ்து, பணம், பதவி எல்லாத்திலும் உயர்ந்தவங்க. அதுல எத்தனையோ பிரச்சனை நமக்கு தெரியாம இருக்கலாம். நமக்கு அது முக்கியம் அல்ல. இந்த சமயத்தில் பணம் மட்டும்தான் தேவை.''

குழம்பிக் கிடந்த வானதியின் மனதில் மேலும் குழப்பத்தை கிளறினாள் சுமி.

''எனக்கு ஒரே குழப்பமா இருக்கு சுமி.'' இரு கைகளாலும் தலையை பிடித்துக் கொண்டாள். பிரச்சனைக்கு முடிவு கிடைக்காமல் தலையை பாரமாய் கனத்தது.

குழம்பிய குட்டையில்' தானே மீன் பிடிக்க முடியும். யோசிக்க, யோசிக்க தலையை குடைந்ததே தவிர சரியான முடிவு எடுக்க முடியாமல் திணறினாள். நீண்ட நேரம் கழித்து சுமியிடம் சம்மதம் சொன்னாள். ஆர்த்தியின் நிலையை மனதில் கொண்டு.



7



வடபழனி முருகன் சன்னதியில் மனம் உருக நின்றாள் வானதி. கூடவே சுமியும். பட்டு வேஷ்டி சட்டையில மண மகனாய் ரிஷி வந்தான். அவன் கம்பீரம் இந்த உடையில் அதிகமாய் காட்டியது. யாரையோ எதிர்பார்ப்பவன் போல் நிற்க அழைத்தாள் சுமி.

''சார், கோயில்ல இருந்து வீட்டுக்கு போலாம்னு சொன்னீங்க...'' தயக்கமாய் கூறினாள்.

''ஆபீஸ்லதான் எம்.டி. இங்க ரிஷின்னே கூப்பிடலாம்...'' உதடுகள் சிரிக்க பேசியவாறு திரும்பினான்.

''ரிஷி! என்னப்பா, அவசரமா வான்னு சொன்னதும் என்னவோ, ஏதோன்னு நினைச்சு, பேஷண்டை கூட பார்க்காம ஓடி வர்றேன். நீ என்னடான்னா மாப்பிள்ளை கோலத்தில் இருக்கே'' கேட்டவாறு அருகில் வந்தார்.

''ஸாரி அங்கிள், பிரியாவும் நானும் நல்ல பிரண்ட்ஸ். ஆனா! அதை புரிஞ்சுக்காம...'' மேலே பேச முடியாமல் நிறுத்தினான்.

''இங்க கல்யாணம்தான் நடக்கப் போவுது. அம்மாவும், அப்பாவும் பிரியாவைத்தான் கட்டிக்கணும்னு கட்டாயப் படுத்தறாங்க.. அதான் நான் விரும்பின பொண்ணோட...''

''வேணாம் ரிஷி... நான் பேசறேன்.. உங்கப்பன்கிட்டே, எவ்வளவு பெரிசா, கிராண்டா உன் கல்யாணத்தை நடத்தணும்னு என்கிட்டே எத்தனையோ தடவை

சொல்லியிருக்கான். அவனை ஏமாத்தாதே... பேசிக் கொண்டே போனவரை குறுக்கிட்டான். ப்ளீஸ் அங்கிள்.. எல்லாம் முடிஞ்சாச்சு. நீங்கதான் சாட்சி.'' ரிஷி பேச மௌனமானார்.

ஐயரும், அவரும், கமியும் அட்சதை போட வானதியின் கழுத்தில் மங்கல நாண் முடிச்சு போட்டான்.

''வாழ்த்துக்கள் வானதி...'' தோழியை அணைத்துக் கொண்டாள் கமி.

''இது என்ன நிஜ கல்யாணமா... வாழ்த்து எல்லாம் சொல்றே...'' முணுமுணுத்தாள் வானதி.

''நீ இப்படி பண்ணுவேன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை ரிஷி...'' ஆத்திரத்தில் அலைபாய பேசிய தந்தையிடம் மறுத்துப் பேசாமல் நின்றான்.

மகன் செய்த காரியத்தை நம்ப முடியாமல் அதிர்ச்சியில் சிலையாய் நின்றாள் கமலம். ஆனாலும் சுதாரித்தவாறு கோபக் கனலை மறைத்து மணமக்களுக்கு ஆரத்தி எடுத்து அழைக்க உள்ளேவந்தனர்.

ரிஷியும், வானதியும் அரண்மனை போன்ற பங்களாவும் அடுத்தடுதது அறைகளையும், ஆங்காங்கே வைக்கப் பட்டிருந்த அலங்கார பொருட்களும், அவர்களின் வசதியை பறைசாற்ற. தன்னைச் சுற்றி நடப்பதை நம்ப முடிய வில்லை, வானதியால்.

அதேநேரம் ஆர்த்திக்கு ஆபரேஷன் வெற்றிகரமாய் நடத்தப்பட்டது.



ரிஷியிடம் தகவலை கமி சொல்ல, வானதியிடம் கூறினான். மனம் நிறைவாய் இதமாய் இருந்தது.

''ரொம்ப தேங்க்ஸ் பணம் கொடுத்ததுக்கு...'' மெல்ல கூறியவளை ஏறிட்டான்.

''நான் ஒன்னும் சும்மா கொடுக்கலையே... நீ ஒரு உதவி செய்தே... நான் அதுக்கு நன்றியை பணமா கொடுத்தேன். அவ்வளவுதான்...'' என்றவாறு அவளை அமரச் சொல்லிவிட்டு கீழே இறங்கினான்.

''அம்மாவும், அப்பாவும் கோபமாய் இருக்காங்க. கொஞ்சம் பொறுத்துக்கோ, எனக்காக ப்ளீஸ்! சரியாகிடு வாங்க! நான் செய்த காரியத்தை அத்தனை சுலபமா ஏத்துக்க முடியாது இல்லை...'' என்றவாறு பால் டம்ளரை நீட்டினான்.

''முதன் முதலா எங்க வீட்டுக்கு வந்திருக்கே.. என்ன செய்யணும்னு தெரியலை. அதான்..'' புன்னகை பூத்தான்.

''நாம என்ன நிஜமான காதலர்களாய் இருந்து கல்யாணமா பண்ணிக்கிட்டோம். இதுல பார்மாலிட்டிஸ் ஒன்னும் தேவையில்லையே...'' என்றவாறு வாங்கிக் கொண்டாள்.

சட்டென விழிகள் மாற கோபம் அவன் முகத்தில் தெரிய வேகமாய் அகன்றான், அவசரமாய்.

'ஏன்! முகம் மாறி போச்சு. நான் ஒன்னும் தப்பா சொல்லலையே..' தனக்குள் கூறிக் கொண்டாள், அவள்.

"என்னங்க நடந்தது நடந்து போச்சு. அதையே நினைச்சு உடம்பைக் கெடுத்துக்காதீங்க..." வருத்தமாய் கூறிய மனைவியை வேதனையாய் பார்த்தார்.

"அதைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை! என் நண்பனுக்கு என்ன பதில் சொல்லப் போறேன். பிரியாவை இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்னு எவ்வளவு ஆசைப்பட்டோம்.." குரலில் ஆதங்கம் தெரிந்தது.

ரிஷியின் செயலை நம்ப முடியவில்லை அவரால். அதே சமயம் மகனின் மனதை புரிந்து கொள்ள முடியாமல் தவித்தார்.

இரண்டு நாட்கள் யுகமாய் கழிந்தது, வானதிக்கு. இத்தனை பிடிவாதமாய் இருப்பார்கள், ரிஷியின் பெற்றோர்கள் என எதிர்பார்க்காத வானதி தவித்துப் போனாள். யாரோடும் யாரும் பேசாமல் தனிமையில் பொழுதைக் கழிக்க முயற்சித்தாள்.

"ஸாரி வானதி! ரொம்ப போரடிக்கிறதா...?" ஆபீஸ் முடிந்து வந்த ரிஷி கேட்டான்.

"அப்படியெல்லாம் இல்லை" முணுமுணுத்தாள்.

"திடீர்னு நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதை அவங்களால ஒத்துக்க முடியலை. ஆனா... நிச்சயம் நம்மை ஏத்துக்குவாங்க.." சொன்னவனை ஏறிட்டாள்.

"அவங்க எதுக்கு என்னை ஏத்துக்கணும்... உங்க காதல் கை கூடினதும், என்னை அனுப்பிடப் போறீங்க... இதுக்கு ஏன்..?" மேலே பேச முயன்றவளை குறுக்கிட்டான்.



"உன் பேச்சை நிறுத்திட்டு... ஒரு கப் டீ எடுத்திட்டு வர முடியுமா?" கோபமாய் கேட்க, விருட்டென எழுந்தாள்.

கீழே இறங்கினாள், வேகமாய். 'இதைப்பத்தி பேசினாலே எரிஞ்சு விழுறான்? ஒருவேளை அவன் காதலி அந்தப் பெண் ஏத்துக்கலையோ!' ஏனோ ரிஷியின் மேல் பரிதாபம் எழுந்தது.

"வாடா!" சோர்வாய் அழைத்த நண்பனை ஏறிட்டார், குமாரசாமி.

உடல் நிலை பற்றி நலம் விசாரித்தவாறு பேச ஆரம்பித்தார்.

"காபி சாப்பிடறீங்களா அண்ணே!" கேட்டவாறு வந்த கமலத்தை ஏறிட்டார்.

"வேணாம்பா! இப்ப தான் டிபன் சாப்பிட்டு வர்றேன். நான் சொல்ல வந்த விஷயத்தை சொல்லிடறேன். தெரிஞ்சோ, தெரியாமலோ ரிஷியின் கல்யாணத்துல நானும் ஒரு சாட்சி ஆயிட்டேன். நடந்தது நடந்துப் போச்சு. ரிஷி விரும்பின பொண்ணும் நல்லவளா, குணம் படைச்சவளா தான் தெரியறா... பாவம் அப்பா அம்மா இல்லாத பொண்ணு போலிருக்கு.. ரிஷியின் திருமணம் இப்படி நடக்கணும்னு ஆண்டவன் எழுதிட்டான். அதுக்கு யாரையும் வருத்தப்பட்டு எந்த பலனும் இல்லை... என்னடா நான் சொல்றது சரிதானே!" நண்பனின் வார்த்தைகளில் தெரிந்த உண்மையை ஆமோதிக்கும் விதமாய் தலையாட்டினார் உலகநாதன்.

யோசிக்கத் துவங்கினாள். அவள் யோசனையை தடுக்கும் விதமாய் போன் அலறி அடித்தது.

எதிர் முனையில் பிரியா பேசினாள். சந்தோஷமாய், எப்படி விஷயத்தைச் சொல்வது புரியாமல் தவித்தவாறு!

கமலம் ரிசீவரை வாங்கினாள்.

"எப்படியிருக்கே பிரியா? உன் ஆராய்ச்சிப் படிப்பு எப்ப முடியுது. எப்ப வர்றே?" கேட்டாள் கமலம்.

"நல்லாயிருக்கேன் அத்தை. மாமா ஏன் டல்லா பேசறாரு... உடம்பு சரியில்லையா...? கேட்டவளிடம் "அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை."

பரஸ்பர விசாரிப்புக்குப் பின் பிரியா சொன்ன சேதியைக் கேட்டு அதிர்ந்தாள் கமலம்.

"என்ன சொல்றே?" பிரியா மீண்டும் கேட்டாள்.

"ஆமாம் அத்தை. நான் இங்கே என் கூட படிக்கிற கிஷோரை விரும்பறேன். நீங்களும் மாமாவும், அப்பா கிட்டே பேசி எங்க காதலுக்கு சம்மதம் வாங்கித் தரணும்."

சில நொடிகள் மௌனமாய் கரைந்தது.

பிரியாவே மீண்டும் பேசினாள். "ஒரு கட்டத்தில் நான்தான் உங்க மருமகள்னு பேசினீங்க. நானும் ரிஷி கூட பேசி பழகினேன். ஆனா! அதுக்கு பேர் காதல் இல்லை. கிஷோர் தான் எனக்கு புரிய வச்சாரு..." பக்குவப்பட்ட பெண்ணாய் பேசியவளை நினைத்து ஆச்சரியமாய் இருந்தது, கமலத்துக்கு.



ஏனோ மனதில் நிம்மதி கலந்த உணர்வு மேலிட பெருமூச்சு விட்டவாறு ரிசீவரை வைத்தாள்.

வார இதழை புரட்டிக் கொண்டிருந்த வானதி நிமிர்ந்தாள், காலடி ஓசை கேட்டு.

கமலத்தைக் கண்டதும் எழுந்தாள்.

"உட்காரும்மா! இரண்டு நாளா உன்கிட்டே பேசலை, பழகலை... யாரோ ஒருத்தி மாதிரி நடந்துக்கிட்டேன். என்னை மன்னிச்சிடும்மா..!" கைகளைப் பற்றி தழுதழுப்பாய் பேசிய கமலத்தை ஏறிட்டாள்.

"அப்போ! நீங்க போய்..." மேலே பேச முடியாமல் தடுமாறினாள், வானதி.

பிரியாவை ரிஷிக்கு மணமுடிக்க இருந்ததையும், இன்று பிரியா வேறொருவனை விரும்புவது முதல் எல்லாவற்றையும் கூறினாள்.

"ரிஷியே இப்படி ஒரு முடிவு எடுக்கலைனா பிரியாவை மணமுடித்து வைத்திருப்போம். எப்படியாவது கட்டாயப் படுத்தி. ஆனா! உன்னை காதலிச்சதை பத்தி ஒரு வார்த்தை கூட... சொல்லலை."

'இல்லை அவர் என்னைக் காதலிக்கலை...' உதடு வரை வந்த வார்த்தைகளை அப்படியே விழுங்கினாள்.

ஏதேதோ எண்ணங்களில் மனம் தடுமாறியது.

சாயங்காலம் ரிஷி வந்தான். ஆபீஸ் முடிந்து வானதியைப் பார்த்து அசந்து போனான்.

வானத்து தேவதை இப்படித்தான் இருப்பாளோ? என எண்ணினான். ஒலிவ பச்சையாய் எளிமையான பட்டுடுத்தி, காதிலும், கழுத்திலும் தங்க நகைகள் அசைந்தாட, தொட்டால் ஒடிந்து விடுமோ என தோன்றும் மெல்லிய மேனியை காதலுடன் தழுவினான்.

இழுத்து அணைக்கத் தோன்றிய கைகளையும், உணர்வுகளையும் வெகு கஷ்டப்பட்டு அடக்கினான். சட்டென திரும்பிய வானதி, அவனைக் கண்டதும் வெட்கம் மின்ன தலைகவிழ்ந்தாள்.

"நான் வேணாம்னுதான் சொன்னேன். அத்தை தான் கட்டாயப்படுத்தி இதெல்லாம் போட்டு விட்டாங்க... அவங்களே தலையும் பின்னி விட்டாங்க..." தயக்கமாய் கூற.

"என்டா வரும்போது கொஞ்சம் மல்லிகைப் பூ வாங்கிட்டு வரக் கூடாது....ம்.." மகனை கண்டிக்கும் விதமாய்க் கூற, வியப்புடன் தாயைப் பார்த்தான்.

"அம்மா நீங்க..?" பேச்சை நிறுத்தினான்.

"நீ அவசரப்பட்டது தப்புதான். ஆனாலும் என்ன பண்றது? இத்தனை அழகான மருமகளை வேணாம்னு சொல்ல மனசு வரலையே!" என்றவாறு பிரியா போன் செய்தது பற்றியும் தெரிவித்தாள்.

"ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேனா?" மகன் கைகளைப் பற்றி வருட, "அய்யோ! என்னம்மா நீங்க, உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா..." சின்ன சிரிப்புடன் கூறினான்.



"அதனாலதான் இப்படி யாருக்கும் தெரியாம கல்யாணம் பண்ணிட்டு வந்திட்டயா.." பொய்க் கோபத்துடன் கூறிய கமலம் மேலே பேசிய விஷயத்தைக் கேட்டு வானதி மனதில் இனம் புரியாத உணர்வுகள்.

"என் மருமகளோட வளைகாப்பை எவ்வளவு பெரிசா, கிராண்டா செய்யப் போறோம்.. பாரு... அப்ப என்ன செய்வே..?"

உதட்டோரம் சின்ன சிரிப்பு தவழ ஓரக் கண்ணால் வானதியைக் கவனித்தான்.

அவள் முகத்தில் தெரிந்த உணர்வுகளை இனம் பிரிக்க முடியவில்லை அவனால்.

ஆனால்...! அடுத்து வந்த நாட்களில் ரிஷியின் தாய் காட்டிய பாசம், அவன் தந்தை அவளிடம் காட்டிய பரிவு, மகன் மேல் அவர்கள் வைத்திருந்த பாசம், மெல்ல மெல்ல குடும்பத்தில் ஒன்றி போனாள்.

'ஆனால்... எப்போது, எந்தச் சந்தர்ப்பத்தில் ரிஷி அவள் மனத்தில் நிறைந்தான்' என புரியாமல் முழித்தாள். சிலபேரைப் பார்த்ததும் பிடித்துப் போகும். சில பேரை பழகிப் பார்த்தால் பிடிக்கும். ஆனால்! ரிஷியின் பண்பான நடத்தை, அன்பான குணம், பெற்றோரிடம் அவன் வைத்திருக்கும் மரியாதை கலந்த பாசமா? எது அவளை ஈர்த்தது என புரியவில்லை. சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவித்தாள். எங்கே ரிஷியின் முகம் பார்த்து பேசினால்தான் தன் கண்களில் தெரியும் காதலை

உணர்ந்து கொண்டு தப்பாய் நினைப்பானோ? என்ற எண்ணமே அவள் இதயத்தை பிசைவதாய் வலித்தது. தன் காதல் கைகூடும் வரை நடிக்கத்தானே அழைத்து வந்தான்! ஆனால் அவன் மனைவியாகவே மாறிடணும்னு ஆசைப் படறானே. விழிகளில் நீர் கோர்த்தது. எனக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்குது? தவித்தாள்.

"ஏன்! ஒரு மாதிரியா இருக்கே. உடம்பு சரி இல்லையா, டாக்டர் அங்கிளுக்கு போன் செய்யட்டுமா..." கனிவான குரலில் மென்மையாய் கேட்டவனின் முகம் பார்க்க முடியவில்லை.

மனம் தடுமாற நெகிழ்ந்து தவித்தாள்.

"அதெல்லாம் ஒன்னுமில்லை..." முணுமுணுத்தவாறு நகர்ந்தவளை யோசனையாய்ப் பார்த்தான்.

அன்று தாமரையும் அவள் தாயும் வந்தனர், அவளைப் பார்க்க. வரவேற்று உபசரித்தாள்.

"விஷயத்தைக் கேட்டதும் துடிச்சுப் போயிட்டேன்மா. நான் பக்கத்துல இருந்திருந்தாக் கூட என் பிள்ளையைக் காப்பாத்தி இருப்பேனா என்பது சந்தேகம்மா! என் குழந்தையை பிழைக்க வச்ச..." கண்களில் நீரோடு காலில் விழ போனவளைத் தடுத்தாள்.

"அய்யோ! என்ன செய்றீங்க... நான் உங்களை விட சின்னவ..." படபடத்தவாறு நகர்ந்தாள், வானதி.



"அந்த இக்கட்டான சமயத்தில் பணம் கொடுத்தது இவர்தான்..." உள்ளேயிருந்து வந்த ரிஷியை அறிமுகப் படுத்தினாள், கணவராக, முகம் சிவக்க.

"ஊர் பேர் தெரியாத ஒருத்தங்களுக்கு உதவணும்னா அதுக்கு ரொம்ப பெரிய மனசு வேணும். நீங்க இரண்டு பேரும் பிள்ளைகுட்டியோட பல்லாண்டு காலம் சந்தோஷமா வாழணும்..." நீர் கசிய நெகிழ்ச்சியோடு வாழ்த்தினாள்.

"நீங்க நாளைக்கு ஆபீஸ்ல வந்து பாருங்க. வேலை போட்டு தரேன்... எப்ப வேணும்னாலும் இங்க வரலாம்..." ரிஷி பேசினான்.

மேலும் மேலும் நன்றி கூறிச் சென்றனர், தாமரையும், அவள் தாயும்.

மனம் நிம்மதியாக நெகிழ்வாய் இருந்தது.

"தேங்க்ஸ் வானதி..." என்றவளை ஏறிட்டான்.

"எதுக்கு?"

"என்னைக் கணவராக அறிமுகப்படுத்தினியே! அதுக்கு. எங்க உண்மையைச் சொல்லப் போறியோன்னு நினைச்சேன்." விழிகளில் குறும்புத்தனம் மின்ன.

"அது நம்ம இரண்டு பேரு மட்டுமே. ஸாரி கவியை சேர்த்து மூணு பேருக்கு மட்டுமே தெரிந்த விஷயம். எதையும் ஒழுங்கா செய்யணும்னு நினைக்கிறேன்..." என்றவாறு நகர்ந்தாள் வேகமாய்.

நெஞ்சில் கிளம்பும் உற்சாக ஊற்று சட்டென வடிந்தது. ரிஷிக்கு.

"ப்ப, என் காதலை புரிஞ்சுக்கப் போறே..." தவித்தான்.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் தலைகுளித்து நீண்ட கூந்தலை விரித்து போட்டவாறு ஏதோ யோசனையாய் நடந்தவள், எதிரே வந்த ரிஷியின் மேல் மோதிக் கொண்டாள்.

"ஸாரி" என்றவாறு முகம் சிவக்க நிமிர்ந்தாள்.

அவன் குளித்து விட்டு வந்திருந்தான். மேலும் மார்பு ரோமங்களில் பனித் துளி போல் நீர் படர்ந்திருக்க, மிக அருகில் அவன் முகம் சோப்போ, ஷாம்போ, இதமான வாசம் அவளை கிறங்கடிக்க உடலெங்கும் பூமழை பொழிய காதலுடன் நிரம்பிய விழிகளை தாழ்த்தினாள். எதைக் கண்டு கொண்டானோ! உதடுகளில் குறும்பு நெளிய வேகமாய் அறைக்குள் சென்று விட்டான்.

அவன் நிலை கண்டு அவளுக்கே அவமானமாகிப் போனது. தன்னைப் பற்றி என்ன நினைத்தானோ? நினைப்பே வெட்கத்தில் தவிக்க, நகர்ந்தாள். அமர்ந்திருந்தவளை கமலம் அழைக்க பூஜை அறைக்குள் நுழைந்தாள். பூக்களின் வாசம் ஆன்மீக அறைக்கான பரவசமும் பரவ நின்றாள்.

"வாம்மா இதுக்குத்தான் சின்ன பசங்க கல்யாணம்னு சொல்றது..." பேசியவளை புரியாமல் ஏறிட்டாள்.



"திருமணம் ஆன பெண் காலில மெட்டி இல்லாம இருக்கலாமா? நேத்துதான் உன் கால்களை கவனிச்சேன்..." பேசிக் கொண்டே இருக்கும்போது ரிஷி உள்ளே வந்தான்.

"அம்மா! கூப்பிட்டீங்களே? என்ன விஷயம்?" எனக் கேட்டவாறு.

கைகளில் வைத்திருந்த சலங்கை வைத்த அழகான வெள்ளி மெட்டியை நீட்டினாள் கமலம்.

"அவள் கால் விரலில் போடு..."

என்ன பேசுவது என புரியாமல் தயங்கினான்.

"வானதி கால் விரலைக் காட்டுமா..." கமலம் கூற லேசாக புடவையை தூக்கியவாறு கால் விரலைக் காட்ட, அவன் சம்மதத்தை உணர்ந்து மடங்கி அமர்ந்து அவள் விரலை கைகளால் பற்றி, மெட்டியை அணிவிக்க, பூக்களை மேலே தூவி வாழ்த்தினாள் கமலம்.

அந்த நிமிடம் மனதளவில் ரிஷிக்கு மனைவியானாள். அதே மனநிலையில் தான் ரிஷியும் இருந்தான். அன்பாய் அணைத்து நெற்றியில் இதழ் பதித்து நெஞ்சோடு நெஞ்சமாய் அணைத்துக் கொள்ள விரும்பினான்.

காமம் காரணம் இல்லை, காதல் மட்டுமே. தாயை நினைத்து அமைதி காத்தான். தாயின் அருகாமையை உணர்ந்து.

அழுதழுது முகம் சோர்ந்து போனது வானதிக்கு. ராகவனைப் பிரிந்த போதுகூட இத்தனை வலி இல்லையே!

இன்று ரிஷி வேறு ஒரு பெண்ணை விரும்புகிறான் என தெரிந்தும் அவன் மீது உயிரையே வைத்து விட்டேனே! இந்த விஷயம் ரிஷிக்கு தெரிந்து அவளை மட்டமாக எடை போட்டால்? நினைப்பே இதயத்தில் சூடு வைத்தது போல் வலித்தது. அவளுக்கே தெரியாமல் அவளுள் நுழைந்த காதலை அழுத்தி மூடிக் கொண்டாள். ஆனால்! ரிஷி அதை உணர்ந்து கொண்டதை அவள் அறியவில்லை. பகிர்ந்து கொள்ளும் ஒரே அன்பு தோழி சுமி மட்டும்தானே! அதுவும் ரிஷியின் பெற்றோர் தூரத்து உறவினரின் திருமணத்துக்காக திருச்சி சென்றிருக்க தனிமை அவளை பாடாய் படுத்தியது. எண்ணங்களாலும், உணர்வுகளாலும் அலைக் கழிக்கப்பட்டாள்.

தொலைபேசியில் சுமியை அழைக்க, "ஹலோ நான் வானதி பேசறேன்... சுமிகிட்ட போனை கொடுங்க..." இவள் சொல்ல, "நேர்லே சொல்லலாம்.." குறும்பு குரல் கேட்க திரும்பினாள். முகம் மலர்ந்தது.

ஓடிப் போய் சுமியைக் கட்டிக் கொண்டாள்.

"முதல்ல உட்காரு வானதி. முகம் ஏன் சோர்வா இருக்கு. அழுதியா! ரிஷி சார் ஏதும் சொன்னாரா இல்லை, அவர் அம்மா ஏதும்..." மேலே பேசுமுன் குறுக்கிட்டாள்.

"சேசே அதெல்லாம் இல்லை, எங்கம்மா எப்படியோ, அதேபோலத்தான் ரிஷியோட அம்மா என்கிட்டே நடந்துக்கிறாங்க... ஆனா!" மேலே பேச முடியாமல் நிறுத்தியவளை ஏறிட்டாள், சுமி.



"நான் ரிஷியை விரும்பறேன்..." சொல்லும்போதே உதடுகள் துடிக்க விழிகளில் நீர் கசிந்தது. பக்கென சிரித்தாள் சுமி.

"அடி அசடே! ரிஷி சார் கிட்டே சொல்ல வேண்டியது தானே?" விழிகள் மின்ன கிண்டலாய் பேசிய சுமியை முறைத்தாள்.

"விளையாடாதே சுமி! அவர்தான் யாரையோ விரும்பறாரே! அதனாலதான் இந்த நாடகம் அரங்கேறிச்சு... மறந்துட்டியா? அதான் அவரோட நினைவுகளை சுமந்துக்கிட்டு ஏதாவது ஒரு ஊருக்குப் போய் வேலை தேடிக்கலாம்னு இருக்கேன்..." வார்த்தைகள் வலி தெரிய வேதனையை மறைத்தவாறு பேசியவளை ஏறிட்டாள்.

"அவர் கட்டின இந்த தாலி போதும்..." மார்பில் புரண்ட தாலி சங்கிலியை கையில் எடுத்து, கண்களில் ஒற்றி இதழ் பதித்தாள். இதயம் கனத்தது.

"உன்னை நினைச்சா எனக்கு சிரிப்புதான் வருது. மண்டு! உங்க இரண்டு பேருக்கும் காதல் வந்தா என்கிட்டதான் சொல்லணும்னு பேசிக்கிட்டீங்களா?" புன்னகை மிளிர கேட்க.

"என்ன உளர்றே?" புரியாமல் ஏறிட்டாள்.

"மக்கு! ரிஷி சார் உன்னை விரும்பித்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டார். அவர் விரும்புற பெண் நீதான். உன்னை நேசிக்கிறேன். கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன்னு, முதல்ல என்கிட்டேதான் சொன்னார். ஆனா நீ நான் சேலை

செய்ய போறேன், கல்யாணம் செய்துக்கப் போறதில்லை... அப்படின்னு பேசிக்கிட்டு இருந்தே... நல்ல சந்தர்ப்பம் அமையும் போது அதைப் பத்தி பேசலாம்னு சொன்னேன். அதுக்கேத்தபடி ஆர்த்தியோட ஆபரேஷனுக்கு பணம் தேவைப்பட்டது. அது நல்ல சந்தர்ப்பமா பட்டது. அதை விட்டா சரி வராதுன்னு உன்னை தாலி கட்டி மனைவியா ஏத்துக்கிட்டார். இந்த வீட்ல அவர் கூட இருந்தா நிச்சயம் உன் மனசு மாறி அவரை விரும்புவேன்னு நினைச்சார். அவர் நினைச்ச மாதிரி நீ அவரை விரும்ப ஆரம்பிச்சுட்டே..." சுமி முடிக்க, ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை வானதிக்கு.

மெல்ல புரிய ஆரம்பிக்க ஜில்லுனு குடத்து தண்ணீரை கொட்டிய உணர்வில் தத்தளித்தாள். தேகமெங்கும் ஒரு இன்ப உணர்வு ஓடியது. மனம் முழுவதும் மத்தாப்பாய் மலர்ந்தது.

"அப்படின்னா நீயும், அவரும் சேர்ந்து திட்டம் போட்டு...!" செல்லமாய் சிணுங்கியவாறு சுமியை அடிக்க முயல, லாவகமாய் நகர்ந்தாள், சிரித்தவாறு.

"இன்னும் ரிஷி சாரைக் காக்க வைக்காதே. நொந்து நூலாய் போயிடுவார்..." கிண்டலாய் சொல்ல வெட்கத்தில் முகம் சிவந்தாள்.

'தன் வாழ்வு சிறக்க இவள் என்னவெல்லாம் செய்திருக்கிறாள்?' நினைப்பே இனித்தது.



"உன்னை தோழியா அடைய நான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கேன் சுமி!" நெகிழ்வாய் பேசியவாறு சுமியின் கைகளை எடுத்து இரு கன்னத்திலும் வைத்து அழுத்திக் கொண்டாள்.

"சரி! நான் கிளம்பட்டுமா?" கேட்டவாறு எழுந்தாள்.

"இருடி சாப்பிட்டுட்டு போகலாம்..."

"நீ கொடுத்த காபியை சாப்பிட்டதே அரை மணி நேரத்துக்கு பசி எடுக்காதே... அதுவும் இல்லாமல் ஆபீஸ் முடிஞ்சு ரிஷி வர்ற நேரமாச்சு. பூஜை வேளையில் கரடியாய் இருக்க நான் விரும்பலை..." விழிகளில் குறும்பு மின்னியது.

"அப்புறம் சொல்ல மறந்துட்டேனே... ஒரு வாரம் லீவு போட்டுட்டேன். அம்மா போன் பண்ணியிருந்தாங்க. நாளைக்கு பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்களாம். போட்டோ காட்டி பிடிக்க போச்சாம்..." வெட்கமாய் சொல்ல "வாவ்" ரொம்ப சந்தோஷமா இருக்கு சுமி... வாழ்த்துக்கள்" கூறினாள், வானதி.

சுமி கிளம்பிப் போய் அரை மணி நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள். மனம் தெளிந்த நீராய் ஓடியது. பரவசமாய் இருந்தது. ரிஷி தன்னை விரும்பி திருமணம் செய்திருக்கிறான் என்ற எண்ணமே திரும்ப, திரும்ப அவளை ஆட்சி செய்தது.

ரிஷியின் மனம் முழுவதும் வானதியின் முகமே, திரும்பத் திரும்ப கையருகே காதல் மனைவி. ஆனால்!

கைகளைக் கட்டிப் போட்ட நிலை அவனது. ஆனால்! வானதியும் தன்னை விரும்ப ஆரம்பித்துவிட்டாள் என்ற எண்ணமே அவனைச் சுற்றி சுற்றி. சிலசமயங்களில் அவள் கண்களில் தெரிந்த காதலைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தான். ஆனால்! அது பிரமையோ என்று நினைக்கவே பயமாய் இருந்தது. அலுவலக வேலையில் சிறப்பான பேர் பெற்றவன். ஆனால் இந்த காதல் படுத்தும் பாடு இருக்கிறதே. வேதனையாய் இருந்தாலும் ஒரு பக்கம் சுகமாய்தான் தோன்றியது, அவனுக்கு.

டிராபிக் சிக்னலில் காரை நிறுத்தும்போது அந்தப் பூக்காரி வாசம் மிகுந்த பூக்களை கூடை நிறைய வைத்துக் கொண்டு, "ஐயா பூ வாங்கிக்கங்க..." கேட்டவாறு பூவை கைகளால் தூக்கினாள்.

அவள் கேட்டால்... நகை, புடவை மட்டுமின்றி என்ன வேண்டுமானாலும் வாங்கித் தர தயாராய் இருக்கிறான், அவளோ வார்த்தைகளை கூட அளவாய் தான் பேசுகிறாள்! பெருமூச்சு விட்டவாறு மல்லிகைப் பூவை பந்தாய் வாங்கிக் கொண்டான், மனைவி மேல் கொண்ட காதலைச் சுமந்தவாறு....

சோபாவில் தளர்வாய் அமர்ந்தவனிடம் காபி டம்ளரை நீட்டினாள், வானதி.

வாங்கிக் கொண்டான், 'தேங்க்ஸ்' என்றவாறு.

ஏறிட்டான், எளிமையான அலங்காரத்திலும் எழிலாய் தோன்றினாள்.



"உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்.."

"ம் பேசலாமே! என்ன விஷயம்..." கேட்டவாறு காபியை குடித்தான்.

"நீங்க விரும்புற பெண்கிட்ட காதலை சொல்லிட்டீங்களா, அவங்க அதை ஏத்துக்கிட்டாங்களா?" அவள் கேள்வியில் தடுமாறினான். ஆனாலும் சமாளித்தவாறு,

"ம்... சொல்லணும்தான் நினைக்கிறேன். ஆனாலும்..." நிறுத்தினான்.

"பயமா இருக்கா?" சீண்டலாய் பேசியவளை திகைப்பாய் பார்த்தான், என்னாச்சு முகம் பார்த்து பேசத் தயங்குவாளே! உதடு புன்னகை பூக்க ஏறிட்டான்.

"எனக்கென்ன பயம்? என்னைப் பார்த்துக் கூட ஒரு பொண்ணு வேணாம்னு சொல்லுவாளா" வீராப்பாய் பேசியவாறு காலரை தூக்கி விட்டவனைப் பார்த்து சிரிக்காமல் இருக்க முடியவில்லை அவளால்.

சிரிப்பினூடே முணுமுணுத்தாள். "சுமி! எல்லாத்தையும் சொல்லிட்டா.." திடுக்கிட்டு வேகமாய் எழுந்தான்.

அவனை உணராமல் முகம் தரை பார்க்க "நானும் உங்களை நேசிக்கிறேன்..." சொல்லி முடிக்கும் முன்னே அவன் வலிய கரங்களில் சிக்கிக் கொண்டாள்.

தன்னைப் பற்றி தப்பாய் நினைத்து மறுப்பானோ? என நினைத்துப் பயந்தவளின் மனம் பறவையாய் பறக்க ஆரம்பித்தது. இத்தனை நாள் பட்டுக் கொண்டிருந்த

அவஸ்தை முடிவுக்கு வந்ததை அடுத்து சந்தோஷத்தை கட்டுப்படுத்த முடியவில்லை, அவளால்!

இறுக்கி அணைத்தவனின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், கைகளை அவன் கழுத்தில் போட்டு மாலையாக்கி மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். தேகம் பாகாய் குழைந்தது. மெல்ல மெல்ல அவன் கைகள் அவளை அளந்தது. தாங்க முடியாத தவிப்பில் அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

கணவனின் கன்னத்தில் முகம் உரசிய அவள் மூளையில் திடீரென அந்த நினைப்பு வந்தது. இதற்கு நீ தகுதி ஆனவள்தானா? உன் கடந்த காலம் தெரிந்தால்? எந்த ஒரு ஆணும் தன் மனைவியிடம் இந்த மாதிரி நிகழ்வுகளை விரும்ப மாட்டானே! விழிகளில் கண்ணீர் பெருக, வேகமாய் விலக முயற்சித்தவளை விடுக்காமல் ஏறிட்டான்.

''ஏய்! என்னாச்சு?'' பதட்டமாய் கேட்ட கணவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

'நான் ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவ, ஒருத்தனை காதலிச்சவன்னு..' கணவனின் கேவலமான பார்வையை அவளால் தாங்க முடியாது. காதல் ததும்பும் பார்வை மட்டுமே அவள் மனதில் சிறை இருக்கட்டும். நினைப்பே தாங்க முடியாமல் அழுகை வெடித்தது. கன்னம் வழிந்தது, கண்ணீர்.

அவளைப் பற்றி சட்டென விலக்கி நிறுத்தினான். முகம் இறுக விழிகள் சிவந்தது, அவனுக்குக் கோபத்தில்.



'எதுவாய் இருந்தாலும் சொன்னா தானே தெரியும்'னு தலையில் இரு கைகளையும் வைத்தவாறு சோபாவில் தொப்பென அமர்ந்தான்.

''இப்பதானே காதலிக்கிறேன்னு சொன்னே, அதுக்குள்ளே என்னாச்சு, சொல்லிட்டு அழு! சே சே மனிதனை நிம்மதியாக இருக்க விட மாட்டாங்க, இந்தப் பெண்கள். அதுவும் காதலில் விழுந்தால்...? அவங்க கதி அதோ கதிதான்.'' கட்டமாய் பேசியவனின் கோபம் அவளுக்குப் புரிந்தது. எழுந்தான். மனைவியின் அழுத முகத்தை இரு கைகளாலும் ஏந்தினான்.

''ப்ளீஸ் வானதி என்னைக் கொல்லாதே!'' அவன் வார்த்தைகளில் தெரிந்த வலி அவள் மௌனத்தை உடைத்தது.

தயக்கமாய், ''என்னோட கடந்த காலம் தெரிஞ்சா கண்டிப்பா என்னை வெறுத்திடுவீங்க...'' கேவலுடன் விம்மியவளைப் புரியாமல் பார்த்தான்.

''நான் ஜெயிலுக்குப் போனவ, அப்புறம்...'' மேலே பேசியவளின் இதழ்களை சிறைபடுத்தினான், தன் வாய் உதடுகளால்!

சில நொடி காற்று கூட அவர்களை தொடாமல் தள்ளி நின்றது, வெட் ப்ட்ட்டு. அவளை விடுவித்தவன், தன் மேலேயே மனைவியை சாய்த்துக் கொண்டான்.

''அசடு, இதுக்கா அழுதே.. எல்லாம் எனக்குத் தெரியும். தெரிஞ்சுதான் உன்னைக் காதலிச்சேன், கல்யாணமும் செய்துக்கிட்டேன்.''

விழிகள் படபடக்க ஏறிட்டாள்.

''முதன் முதலா உன்னைப் பார்த்தபோது கூட மருண்ட இந்த விழிகள் தானே என்னைக் கட்டிப் போட்டது.'' விழிகள் சிரிக்க பற்கள் மின்ன சிரித்த கணவனை மனம் மகிழ ஆசையோடு ஏறிட்டாள்.

எத்தனை நல்ல மனம் படைத்தவன். என் மேல் எந்த அளவு காதல் வச்சிருந்தால்? மேலே நினைக்கவே இனிமையாய் இருந்தது. தன் உயிருள்ளவரை கணவனின் மனம் கோணாமல் நடந்து கொள்வது என முடிவு செய்தாள்.

''இந்த சின்ன மூளைக்குள்ளே! இன்னும் ஏதும் சந்தேகம் இருந்தா சொல்லு. அப்புறம் நீ அழுதா, நானும் அழுதிடு வேன்..'' சிணுங்கலாய் சிரித்த கணவனின் காலில் மலர்ச் சரமாய் விழுந்தாள், ஆனந்தக் கண்ணீருடன்.

ஆசையோடு எடுத்து மார்பில் போட்டுக் கொண்டான். இனி நல்ல இல்லறம் அங்கே இனிதாய் ஆரம்பிக்க, பொழுது அந்தி வானமாய் சிவக்க ஆரம்பித்தது, அவர்களின் நிலை கண்டு.

